Registered as a News paper in Ceylon ★ ★ விலை சதம் 20

# ஈழநாடு

**முக்கிய அறிவித்தல்**

மில்க்வைற் நீலசோப் 50 மேலுறைகளை கொடுத்து ஒரு அழகிய பலவர்ண படம் பெற்றுக் கொள்ளவும்.

மில்க்வைற்சோப் தொழிற்சாலை யாழ்ப்பாணம்.

வாரமலர்

மலர் 12 | புரட்டாதி 28 | ஷஃபான் 12 | (14—10—70) | புதன்கிழமை | இதழ் 245

# பெற்றோல் ஆராய்ச்சிக்கு சீனக்குழு வடபகுதி வருகிறது

## கச்சதீவிலும் ஆராய்ச்சி நடக்கும்?

கொழும்பு, செவ்.

இம்மாத இறுதியில் இலங்கை வரவிருக்கும் மக்கள் சீனக் குடியரசைச் சேர்ந்த நிபுணர்குழு வடபகுதியில் பெற்றோல் ஆராய்ச்சியில் ஈடுபடவிருக்கிறது. இத்தகவலை கைத்தொழில் விஞ்ஞான அமைச்சதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடபகுதியில் கடந்த பல மாதங்களாக ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த பிரான்சு நிபுணர்குழு இப்பகுதிகளில் பெற்றோல் அதிகம் காணப்படுவதாக அரசாங்கத்திடம் அறிக்கை சமர்ப்பித்திருந்தது. தற்போது சீன நிபுணர்கள் இந்த ஆராய்ச்சியில் ஈடுபடவிருக்கிறார்கள்,

இலங்கை பூராவும் குறிப்பாக கரையோரப்பகுதிகளிலும் சர்ச்சைக்குரிய கச்சதீவிலும் சீன நிபுணர்குழு ஆராய்ச்சியில் ஈடுபடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த மாதம் மக்கள் சீனக் குடியரசுக்கு விஜயம் செய்த கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தின சீன - இலங்கை தொழில்நுட்ப ஒப்பந்தம் ஒன்றில் சீன அரசாங்கத்துடன் கைச்சாத்திட்டிருந்தார். அதன் பிரகாரம் இம்மாத இறுதியில் இலங்கை வரும் சீனநிபுணர் குழு, இலங்கையின் பல பகுதிகளிலும் குறிப்பாக பிரான்சு நிபுணர்குழு சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்த வடபகுதியில் உள்ள பெற்றோல் காணப்படும் இடங்களில் ஆராய்ச்சியில் ஈடுபடும்

கனிப்பொருள் ஆராய்ச்சியிலும் இந்த நிபுணர் குழு ஈடுபடும்.

(சி.பி.ஏ.)

## மனித இரத்தம் குடிக்கும் பயங்கர மனிதன்

### பொலிஸ் பாதுகாப்பில்

அம்பன், செவ்.

நெல்லியடிப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திவந்த. மனித இரத்தத்தை விரும்பி உறிஞ்சிக் குடிப்பதாகக் கூறப்படும் பயங்கர மனிதனைப் பொலிசார் நேற்றுக் கைது செய்து பொலிஸ் பாதுகாப்பில் வைத்தனர்.

மந்திகை அரசினர் ஆஸ்பத்திரிக்கு முன்னால் ஒரு சிறுவனைத் துரத்திச் சென்று இரத்தம் குடிக்க முயற்சித்துக்கொண்டிருந்த போது இந்தப் 'பயங்கர மனிதனை' சில பொது மக்கள் பிடித்து பொலிசாரிடம் ஒப்படைத்ததாகக் கூறப்படுகிறது. அதிகாலை 5 மணியளவில் பால் விற்கச் சென்ற சிறுவனை இந்த மனிதன் துரத்தியதாக விசாரணையில்தெரியவந்தது

இந்த மனிதனது கைகளில் தீயினால் ஏற்பட்ட பல காயங்களின் தழும்புகள் இருக்கின்றனவாம். கைது செய்யப்பட்ட தினத்துக்கு முதல் நாள் வல்லிபுரக் கோவிலடியிலுள்ள ஆனைவிழுந்தான் சுடலையடியால் வந்துகொண்டிருந்த ஒரு வாலிபனை இந்த மனிதன்துரத்திச்சென்றதை ஆட்கள் கண்டதும் உடனே அவன் சுடலையினுள் ஓடி மறைந்ததாகவும் கூறப்படுகிறது.

வீதிவழியே செல்பவர்களைப் பலவந்தமாகப் பிடித்து, காயங்களை ஏற்படுத்திவிட்டு, அவர்களிலிருந்து இரத்தத்தை உறிஞ்சும் ஒரு மனிதன் இப்பகுதியில் நடமாடிவருவதாக ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே.

## வேலைக் கூடத்தை உ. அமைச்சர் திறந்துவைப்பார்

யாழ்ப்பாணம், புதன்

வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரியின் வேலைக் கூடத்தை உதவியமைச்சர் திறந்து வைப்பாரென அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 23-ந் திகதி நடைபெறும் இந்த வைபவத்தில் நியமன எம். பி திரு. எம். ஸி சுப்பிரமணியம், உடுப்பிட்டிஎம்.பி. திரு. கே. ஜெயக்கொடி கட்டைவேலி கிராமசபைத் தலைவர் திரு. எஸ். மாணிக்கம் ஆகியோர் கலந்துகொள்வர். பெற்றோர் ஆசிரிய சங்கத்தினரால் இவ்வைபவம் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

## பாசனத் திட்டத்திற்கு உதவ மாணவர் சம்மேளனம்

கொழும்பு, செவ்.

12 ஆயிரம்பட்டதாரிகளை உள்ளடக்கிய மாணவர் சம்மேளனமொன்று அமைக்கப்பட்டுள்ளது. முக்கியமாக சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை அமைப்பதற்கும் விஸ்தரிப்பதற்கும் இச்சம்மேளனம் உதவி செய்யும் என அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னாள் நீதியரசர் திரு; ஹேம பஸநாயகா இச்சம்மேளனத்தின் போஷகாராவர். மக்கள் அரசாங்கத்தின் சிம்மாசனத்தில் இத்திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது அறிந்ததே. இதன் அடிப்படையில், நீர்ப்பாசன மின்சார நெடுஞ்சாலை அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்காவும், முன்னாள் நீதியரசர் திரு. ஏ.ஜே. பசநாயக்காவும் சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தில் அதிக சிரத்தையும் கொண்டுள்ளனர்.

இந்தச் சம்மேளனத்தின் உதவியை. யாப்பகுவாவில் செய்யப்படவிருக்கும்மூன்று அபிவிருத்தித் திட்டங்களுக்கும் பெறப்படுமென அறியப்படுகிறது. இப்பகுதியிலும் மற்றும் வரட்சிப் பகுதிகளிலும் இச்சம்மேளனத்தினர் தமது உழைப்பைநல்குவர்.

இத்தோடு கம்பிறிப்பிட்டிவீவா நீர்ப்பாசனத் திட்டத்திற்கும் இவர்கள் உதவி கிடைக்கும்

## ஹைகமிஷனர்கள்

கொழும்பு, செவ்.

திருமதி லோராணி சேனரத்ன இத்தாலியில்இலங்கை ஹைகமிஷனராக நியமிக்கப்பட்டுள்ளார். ஈராக்கில் இலங்கையின் ஹைகமிஷனராக திரு பஷீர் இஸ்மாயில் அல்தாலிப் நியமனம்செய்யப்பட்டுள்ளார்.

## பல்கலைக்கழக மாணவருக்கு ஆங்கிலம் கட்டாயமில்லை

### தேசிய உயர் கல்விச் சபை அறிவிப்பு

கோட்டை, செவ்.

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பிரிவுகளுக்கு அனுமதி பெறும் மாணவர்களுக்கு ஆங்கில பாஷையில் கட்டாயம் சித்தியிருக்கவேண்டும் என்ற விதியை தேசிய உயர் கல்விச்சபை 1975-ம் ஆண்டு வரை ஒத்திப்போட்டுள்ளது.

கல்வியமைச்சர் ஜனாப் அல்ஹாஜ் பதியுதீன்மாமூத்தின் உத்தரவின்பேரிலேயே உயர் கல்விச்சபை மேற்படி நடவடிக்கையை எடுத்துள்ளது.

விஞ்ஞானப் பிரிவுகளில் கல்விபெற அனுமதி பெறும் மாணவர்கள் ஆங்கிலபாடம் கட்டாயம் சித்தியடைந்திருக்கவேண்டும் என அமைச்சு ஏற்கனவே தீர்மானித்திருந்தது. இந்தத் தீர்மானம் 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதம் செயல்படுத்தப்பட்டிருந்தது. பின்னர் 1970-ம் ஆண்டுவரை ஒத்திப்போடப்பட்டது. தற்போது அமைச்சர் மேலும் இந்த விதியை 1975-ம் ஆண்டுவரை ஒத்திப்போட்டுள்ளார்.

ஆங்கிலத்தில் கட்டாயம் சித்தியடைந்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையை முன்னைய கல்வியமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொலையே கொண்டு வந்தார். இவரது இந்த நிபந்தனையை பல்கலைக்கழக மாணவர் மன்றமும் ஆசிரியர்களும் எதிர்த்ததைத் தொடர்ந்தே தேசிய உயர் கல்விச்சபை விஞ்ஞானம், பொறியியல், விவசாயம், மிருக வைத்தியம் ஆகியன பயிலும் மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் சித்தி இருக்க வேண்டுமென்பது கட்டாயமல்லவென முடிவு செய்தது. இந்த அடிப்படையில் தற்போமி வைத்தியத் துறைக்கு அனுமதி பெறுபவர்களுக்கும் ஆங்கிலம் கட்டாயம் அல்ல என உயர் கல்விச்சபை முடிவு செய்துள்ளது.

## பெற்றோர் விரும்பியபடி போதனா மொழி வேண்டும்

### இலங்கை முஸ்லிம் மகாநாட்டில் முடிவு

கோட்டை,செவ்வாய்

முஸ்லிம் பாடசாலைகளுக்கு செல்லும் முஸ்லிம் பிள்ளைகள், பெற்றோர்கள் விருப்பப்படி முதலாவது தரத்திலிருந்து சிங்களத்தை அல்லது தமிழ் மொழியை, போதனா மொழியாகக் கொள்வதற்கான வசதிகள் அளிக்கப்படவேண்டும்.

சகிரா கல்லூரியில் நடந்த அகில இலங்கை முஸ்லிம் கல்வி மகாநாட்டின் செயல் கமிட்டிக் கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

பாடசாலைகளை இரு பிரிவாக தரம்பிரிக்கும் கல்வி மந்திரியின் திட்டம்பற்றி ஆராய, பிரதிநிதிகளின் பட்டியலைத் தருமாறு முஸ்லிம் பாடசாலை அதிபர்களையும், பெற்றோர் ஆசிரியர் சங்கங்களையும் கோருவதென இம் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

ஜி. சி. ஈ சாதாரண பரீட்சையில் சிங்களமொழி கேள்வித்தாள், ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்ட சிங்களர் அல்லாதவர்களின் குழந்தைகளுக்காகத்தான் என பரீட்சைக் கமிஷனரிடமிருந்து தெரியவருகிறதென தலைவர்சபையின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

தமிழ்மொழியைப் போதனா மொழியாகக் கொண்ட குழந்தைகளுக்கும் இதேசலுகையை வழங்கும்படி கல்வி மந்திரியைக்கேட்டுக்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செனட் சபை கலைப்பு நீதிமன்றம் செல்லுமா?

எஸ். எம். ஜி.

செனட்சபையை ஒழித்துக்கட்டுவதென்றுகூட்டணி அரசாங்கம் தீர்மானித்துவிட்டது. செனட் சபையை ஒழிப்பதற்கான மசோதாவும் மக்கள் பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அரசியல் அமைப்புக்குப்பொறுப்பான அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா இந்தமசோதாவைச் சமர்ப்பித்தபோது ஆளும்கட்சியைச் சேர்ந்தவர்கள் அதை உற்சாகத்துடன் வரவேற்றனர். செனட்சபையை ஒழிக்கவும் மக்கள் பிரதிநிதிகள் சபையில் நியமனப்பிரதிநிதிகளின் எண்ணிக்கையை ஆறிலிருந்து எட்டாக அதிகரிக்கவும் இந்த மசோதா வகை செய்கிறது. செனட் சபையை ஒழித்துவிட்டால் இப்போதுசெனட்டர்களாக இருக்கும் நீதியமைச்சர் ஜெயமன்னேயும் தபால் தந்தி அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியரும் மக்கள் பிரதிகள் சபையில் அங்கம் வகிப்பதற்காகவே நியமனப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை எட்டாக அதிகரிக்க வேண்டுமென்பதன் நோக்கமாக இருக்கவேண்டும். இந்த மசோதா நிறைவேறுவதற்குமூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகள் வேண்டும். மக்கள் பிரதிநிதிகள் சபையைப் பொறுத்தவரையில் அரசாங்கத்துக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் இருக்கிறது. ஆனால் இந்த மசோதா செனட்சபைக்குப் போனதும் அங்கு இது நிறைவேற்றப்படுமா? அரசியல்சட்டத் திருத்தமசோதாவைசெனட் சபை நிராகரித்ததன் விளைவாகத்தான் செனட்சபையைக்கலைக்கவேண்டுமென்ற இந்த மசோதாவேவந்திருக்கிறது.

செனட்சபையை ஒழிப்பதற்கு செனட்சபைதான்தீர் மானிக்க வேண்டுமென்பது சட்ட வல்லுனர் சிலரின் வாதம்.

செனட்சபையைக் கலைக்க வேண்டுமென்ற மசோதாவை செனட்சபை நிராகரித்து விட்டால் என்ன நடக்கும்?

செனட்சபையைக் கலைக்க வேண்டுமென்ற மசோதாவுக்கு எதிர்க்கட்சிகள் மத்தியில் எதிர்ப்புத் தோன்றியிருக்கிறது.

இப்போதுள்ள நிலையில் செனட்சபை கலைப்பு மசோதா நீதிமன்றம் செல்லக்கூடும். செனட்சபைவிவகாரத்துடன் இது நின்றுவிடும் என்று சொல்வதற்கில்லை. அரசியல் அமைப்பு விஷயமே நீதிமன்றத்தில் வாதாடும் நிலையேற்படலாம். இந்த நிலையில் புதிய அரசியல் அமைப்பை உருவாக்கும் வேலைகள் தாமதப்படலாம் என்றும் கருதுவதற்கு இடமுண்டு.

## தலைநகரம்

இலங்கையின் தலைநகரத்தை மாற்றவேண்டுமென்று யோசனை கூறப்படுகிறது. சென்றவாரம் மக்கள் பிரதிநிதிகள் சபையில் இது பற்றி சுவையான வாதமும் நடைபெற்றது. கண்டிதான் நாட்டின் தலைநகரமாக விளங்கவேண்டுமென்று ஓர் அங்கத்தவர் சொன்னார். இல்லையில்லை அநுராதபுரம் தான் பழைய ராஜதானியாக விளங்கிய நகரம், எனவே அனுராதபுரம்தான் தலைநகருக்குப் பொருத்தம் என்றார் மற்றோர் அங்கத்தவர். அனுராதபுரம் வெப்பம் கூடிய இடம் அங்கு ஆட்சிமன்றத்துக்கும் அலுவலகங்களுக்கும் குளிர் சாதன வசதி பொருத்தப்படவேண்டியேற்படும். கண்டியைப் பொறுத்தவரையில் இயற்கையே அங்கு குளிர்சாதன வசதியைக் கொடுக்கிறதென கண்டிப்பகுதி உறுப்பினர் ஒருவர் வெட்டிப்பேசினார். குளிர்சாதனவசதியை நாங்கள் பழக்கப்படுத்திக்கொண்டதுதான் தொல்லைகளுக்கெல்லாம்காரணம் என்றார் வடமத்திய மாகாணத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர். ஒவ்வொருபிரதிநிதியும் தங்கள் தங்கள்தொகுதிக்கேதலை நகரத்தைக் கொண்டுபோக விரும்புவார்கள் போலிருக்கிறதேயென மற்றோர் உறுப்பினர் கிண்டல் செய்ய கொழும்புக்குச் சமீபத்தில் தான் வேருவலையிருக்கிறதென அத் தொகுதியின் பிரதிநிதியான சபாநாயகர் நகைச்சுவையுடன் சொன்னார்.

வேலையில்லாத் திண்டாட்டம் வாழ்க்கைச் செலவு உயர்வு போன்ற மிக முக்கியமான அவசர, அவசியமான பிரச்னைகளிருக்கையில் தலைநகரம் பற்றிய விவாதத்தில் வீண் பொழுதைப் போக்க வேண்டுமா என்று திரு. சரத் முத்தெட்டுவகமா கேட்டு அந்த விவாதத்துக்கே முற்றுப் புள்ளி வைத்தார்.

தலைநகரத்தை மாற்றுவதிருக்கட்டும். ஆட்சிமன்றக் கூட்டங்களை வடக்கு, கிழக்கு மாகாணங்களுட்பட சகல மாகாணங்களின் தலை நகரங்களிலும் இடையிடையே நடத்துவதன் மூலம் நாட்டு மக்கள் அனைவரும் தங்கள் பிரதிநிதிகளையும் அவர்களின் ஆற்றலையும் அறிந்து கொள்ளவும் மக்களிடையே நல்லெண்ணமும் நட்புறவும் வளரவும் தென்னிலங்கைத் தொகுதிப்பிரதிநிதிகள் வட இலங்கைத் தொகுதிமக்களின் கஷ்டங்களையும், குறைகளையும் அறிந்து கொள்ளவும் வடஇலங்கைப் பிரதிநிதிகள் தென்னிலங்கை மக்களின் நிலையை அறிந்து கொள்ளவும் இதன்மூலம் நாட்டுமக்களினதும் நாட்டினதும் உண்மை நிலையையும் கஷ்ட நஷ்டங்களையும் தெரிந்துதெளிந்து கொள்ளவும் வாய்ப்பேற்படும்.

# கால் நடைகளின் கடமையை டிராக்டர்கள் நிறைவேற்ற முடியுமா?

ஐயாறன்

'மனச்சோர்வு ஏற்படும் போது என்ன செய்கிறீர்கள்?' என்று ஒரு நண்பரைக் கேட்டேன். 'பகவத் கீதையைப் படிக்கிறேன்' என்றார் அவர். பல நூற்றுண்டுகளுக்குமுன் எழுதப்பட்ட நூல் அது. போர்க்களத்திலே சண்டை செய்ய மாட்டேனென்று மனச்சோர்வு அடைந்து, வில்லை நழுவவிட்ட அர்ஜுனனுக்கு அவனுடைய கடமையைச் செய்யும்படியும், பலனை எதிர்பார்க்கவேண்டாமென்றும், எம்மால் எப்போதோ முடிந்த காரியமென்றும் கண்ணன் உபதேசித்தார். அந்த உபதேசம் மனிதகுல மனைத்துக்கும் என்றென்றும் தைரியமளித்து, வழிகாட்டி, உதவக்கூடியது. சுவாமி விவேகானந்தர் மகாத்மா காந்தி, மகாகவி பாரதியார் உள்ளிட்டு பலருக்கும் உதவியுள்ளது.

பம்பாய் 'சின்மயமிஷனை' சேர்ந்த ஸ்ரீ. ஏ. பார்த்தசாரதி திங்களன்று கொழும்பு வந்து. ஸ்ரீராமகிருஷ்ண மிஷனில் 'கர்மயோகம்' பற்றி உபந்நியாசம் செய்கின்றார். சென்ற ஜுலையும் அவர் இங்கு வந்து செய்த பிரசங்கம் பலர் மனத்தையும் கவர்ந்தது. மீண்டும் அவரை அழைத்து 13-ந் திகதிமுதல் பிரசங்கம் செய்யும்படி ஏற்பாடு செய்துள்ளனர். கொள்ளுப்பிட்டி 'இந்து' சமூக நிலையத்தில் அவர் 14-ந் திகதி முதல் 'கேனோபநிஷத்'பற்றி வகுப்புகள் நடத்துகின்றார்.

இதற்கான ஒழுங்குகள் செய்ய முன்னாள் நீதியரசர் திரு. வி. சிவசுப்பிரமணியம் தலைமையில் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டுள்ளது. முதல்நாளன்று பிரசங்கத்திற்கு செனேட் சபைத் தலைவர் திரு. ஏ. ரத்னயக்கா தலைமை வகிக்கிறார். கல்வி அமைச்சர் திரு. ஸி. குமாரசூரியர், கூட்டத்தை ஆரம்பித்து வைக்கிறார்.

0 0 0

'கீதா அமுதம்' என்று அன்பர் தனபாலசிங்கத்தார் எழுதியுள்ள ஓர் அரிய நூலின் வெளியீட்டு விழாவுக்காக திரு. கி. வா. ஜகந்நாதன் நவம்பர் மாதம் முதல் வாரம் கொழும்புக்கு வருவதாகத் தெரிகிறது.

திரு. தனபாலசிங்கம் சமஸ்கிருதம், பாளி இம் மொழிகளைக் கற்று பட்டம் பெற்றவர். பகவத்கீதையிலுள்ள சாராம்சத்தை தமிழர் சுலபமாக உணர்ந்து பயன்பெறத்தக்க விதத்தில் இதை எழுதியுள்ளார். ஈழத்தில் பொதுவாகத் தமிழர் பலருக்கு பகவத்கீதையைப் பற்றி அதிகம் தெரியாது. அக்குறையைத் தீர்க்க 'கீதா அமுதம்' பயன்படுவதாக இருக்கும்.

0 0 0

எருதுகள் நமக்கு இக் காலத்தில் தேவையில்லையென்று ஓர் அன்பர் சொன்னார். ஏன் என்று கேட்டதற்கு, நிலத்தை உழுவதற்கு 'டிராக்டர்கள்' வந்துவிட்டன. நவீன முறையில் உழுவதற்கு டிராக்டர்களே அதிகம்பயனுள்ளவை. ஆகவே எருதுகளையெல்லாம் கட்டித் தீனி போடுவது வீண்வேலையென்றும், அவற்றைக் கசாப்புக் கடைக்கு விற்றுவிடுவதே பொருளாதார ரீதியில் புத்தியாகுமென்றும் சொன்னார்.

பால்மாடுகளுக்கு எருதுகள் தேவையில்லையா? என்று கேட்டதற்கு ஒரேயொரு பொலிகாளையை வைத்துக் கொண்டால் போதும்தானே என்றார் அந்த அன்பர்! ஆள்பலமும், எருதுகளும் இல்லாத நாடுகளில் டிராக்டர்கள் தேவைதான். ஆனால் அதிகமான ஆட்கள் வேலையில்லாமல் இருக்கையில் டிராக்டர்களையும், மெஷின்களையும் பாவிப்பதால், வேலையில்லாக் கஷ்டம் அதிகரிக்கின்றது. நாட்டின் செலாவணி வெளிநாடுகளுக்கு வெளியேறுவதுடன். நமது விவசாயத்துக்கும் பிறநாடுகளை நம்பி வாழவேண்டியநிலை ஏற்படுகிறது. கால்நடைகள்மூலம் விவசாயம் செய்வதால் விளைவு சற்றே குறையலாம். கால்நடைச் செல்வத்தை நாம் எக்காரணம்பற்றியும் இழப்பது, விவசாயிகளுக்கும் நாட்டுக்கும் நல்லதல்ல.

கால்நடைகளைப் பாவிப்பதால், அதிகமானவர்களுக்கு வேலைகிடைத்து, வேலையில்லாக் கஷ்டம் குறையவும் முடியும். ஆனால் இந்தக்காலத்தில் யார் இதைக் கேட்கப்போகிறார்கள்! கால்நடைகளைக் கசாப்புக்கடைக்கு விற்றுவிடுவதே லாபமென்று பல 'அறிவாளிகள்' கருதுகிறார்கள்! பாவம்!

ஒவ்வொரு கோயிலிலும் ஒரு பசுப்பண்ணை இருக்க வேண்டுமென்று நாவலர் பெருமான் அறிவுறுத்தியுள்ளார். நான்கு கால் உயிரினங்களும், இரண்டு கால் பட்சிசாதியும் வாழ்க! என்பது உபநிடத வாக்கு. 'குறைவிலாது உயிர்கள் (மனிதர்கள் மட்டுமல்ல) வாழ்க' என்று வாழ்த்துகிறது சைவம். கோவில்களாவது பசுக்களையும், கால்நடைகளையும் பேணிக் காப்பாற்றவேண்டாமா? பணத்தைப் பெரிதெனப் பாராமல், உயிரினங்களைப்பேணிக் காப்பதே சைவம் வளரவழியல்லவா?


## தீபாவளி மலிவு விற்பனை

உங்களுக்கும் உங்கள் குழந்தைச் செல்வங்களுக்கும்
விரும்பிய டிசைன்களில் பெறலாம்.

★ றெடிமேட் புறெக்
★ ,, புளவ்ஸ்
★ ,, ஸ்கேட்
★ ,, சிவ்ற்
★ சிறுவர் றெடிமேட் சோட்ஸ்
★ ,, ,, சேட்ஸ்
★ சிறுவர் சண் சூட்
★ ,, பேபி சூட்

பெண்கள் பகுதி
- லங்கா மணிப்புரி சாறி
- ,, கைத்தறி சாறி
- பிளேன் நைலெக்ஸ்
- பிறின்டட் நைலெக்ஸ்
- போடர் நைலெக்ஸ்
- வயில் சாறி

ஆண்கள் பகுதி

சூட்டிங்:- பரகன், குண்டன்மாலிஸ், கெலோன், சின்டெக்ஸ், வெலோஷ, ஜே. பி. ஆகியோரின் தயாரிப்பு

சேட்கள்:- லின்டன், டியூரோ, ஒக்ஸ்போட், டிப்ளோமற், ஸ்கைவே, கன்டி, மக்ஸிகாஷ

"ரொலறம்ஸ்"

(வட இலங்கையின் புகழ்பெற்ற ஸ்தாபனம்)

46, பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

போன்: 7099.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாகர் வாழ்ந்த நாகர் கோயிலில் நாளை நடைபெறும் கப்பல் திருவிழா

**நாகர்கோவில் நாகதம்பிரான் கப்பல் திருவிழா நாளை நடைபெறுகிறது. நாகர்கோவில் பற்றியும் கப்பல் திருவிழா பற்றியும் இக்கட்டுரை சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறது.[ஆ-ர்]**

க. க. ஐயாத்துரை
அம்பன்

''குடக்கோடு வாசி குளிர்
சிந்து கோகனம் மடக்கு
நவசெந் தடவியாஞ்செய்
புடைக்கணுறச் சம்போடரிச்
சனமுந்த நாகர்கோயில்
உற தும்பிமுகர்
பாதந்துணை''

ஈழவள நாட்டின் வடபாகமாகவுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டின் கீழ்த் திசையிற் காணும் நாகர் கோயில் என்னும் தொல் கிராமத்தின் மத்தியில் இப்புராதன புண்ணிய தலம் பொலிந்து விளங்குகின்றது. இங்கு குடிகொண்டெழுந்தருளியிருக்கும் நாகேஸ்வரப் பெருமானின் வரலாற்றைக் கூறப்புகுமுன் இக்கிராமத்தின் வரலாற்றை அறிதல் அத்தியாவசியமாகும்.

நாகர் கோயில் என்னும் இக்கிராமம் மிகப் பழமையுடையதென்பது அதன் பெயராலேயே விளங்குகின்றது. இதற்கு பலரும் பல பல காரணங்களைக் கூறினும் பழங்குடி மக்களாகிய இயக்கர், நாகர் காலத்திலுள்ள நாகர் என்னும் சாதியார் இங்கு வாழ்ந்து வந்த காரணத்தாலேயே நாகர் கோயில் என்னும் பெயர் வந்ததென்று கூறுவது ஏற்புடையதாகும். இயக்கர் பைசாசை வழிபாடு செய்து வந்தனரென்றும் நாகர் சர்ப்பத்தைவழிபாடுசெய்து வந்தனரென்றும் பழைய சரித்திரங்கள் கூறுகின்றன. நாகர் சாதியார் சிவனையே ''நாகதம்பிரான்'' என்ற பெயர்சூட்டி வணங்கி வந்தார்களென அறியக்கிடக்கின்றது. சைவசமயத்தவர்கள் இத்தலத்தை ஓர் சிவ தலமாகவே பூசித்து வருகின்றனர். இங்கு நடைபெறும் நித்திய நைமித்தியங்களும் சிவனுக்குரியதாகவே நடைபெறுகின்றன.

நாகேஸ்வரப் பெருமானின் திருவுருவம் ஐந்து தலைகளையுடைய நாகமாகத் தோன்றுவது பஞ்ச பிராணனைச் சஞ்சாரம் செய்யும் சிவனாகிய சிவனையே குறிக்கின்றது. நாகேஸ்வரப் பெருமான் கோவில் கொண்டிருக்கும் நிலம் சம்புக்கேணி என்ற பெயருடன் திகழ்கின்றது சம்பு சிவன் எனவும் கேணி நீர் நிலையெனவும் பொருளாகும் ஆகவே இவ்விடத்தில் சிவ தீர்த்தம் அல்லது சிவ கங்கை எனப் பொருள்படுகின்றமையினால் இங்கு குடிகொண்டிருப்பவர் சிவபிரான் என்பது தெளிவாகின்றது

## பஞ்சதீர்த்தம்

பண்டைக்கால நாகர் சாதியாரால்நாகதம்பிரானை வைத்து வழிபாடுசெய்து வந்த இடமானது ஆதியில் சந்தனம், மருது. அத்தி, இத்தி, ஆல், மதூகம், குருந்தை. சோகு ஆகிய பெரு நிழல் விருட்சங்களும் தண்டாமரை வாவிகளும், நீராடு கேணிகளும்நிறைந்த ஓர் உன்னத சோலையாய் விளங்கிவந்துள்ளது. இவ்வாலயத்தின்மருங்கில் ஐந்து தீர்த்தங்கள்இருந்தன அவை தற்போது பெண்கள் கேணி என வழங்கப்படும் குளம் சக்தி தீர்த்தமெனவும் உப்புக் கேணி சமுத்திர தீர்த்தமெனவும் நாககேணி நாக தீர்த்தமெனவும் சம்புக் கேணி சிவ தீர்த்தமெனவும் மார்கழிப்பள்ளம்தனு தீர்த்தமெனவும் வழங்கிவருகின்றது

மகத்துவம் மிகுந்த இத்தலத்தை ஆக்கி வணங்கிய நாகர் சாதியினர் அழிந்தொழிந்துபோக பின்னர் சேர, சோழ, பாண்டிய மண்டலங்களிலிருந்து தமிழர் இங்கு குடியேறிய காலத்து நாகர்கோயிலும் அவர் கைப்பட்டது. முன்னர் நாகர் வழிபாடுசெய்த இடத்தில் திருவருட்தன்மை விளங்கக்கண்ட தமிழர் தாமும் அம்மரத்தடியில் நாகதம்பிரானை வழிபட்டு வரலாயினர்.

நாகேஸ்வரப் பெருமானின் திருவருளால், ஆதி காலத்தில் இருந்தே இப்பகுதி மக்கள் எவ்வித கொடிய விஷம் தீண்டிய பொழுதிலும் வைத்தியம் செய்வது கிடையாது. நம்பினார்க்கருள்புரியும் தம்பிரான் தலம் சென்று அங்கு கிடைக்கும் அற்புதமருந்தை பாவித்தால்கணப்பொழுதில் விஷமிறங்கி சித்தியுண்டாகும். இம்மருந்தை கோயில் குருக்களே வழங்குவார். இத்தலத்தின்கண்ணேபல்லாயிரக் கணக்கான மக்கள் விஷ செந்துக்களால் தீண்டப்பெற்றுக் கொணர்ந்து சுகமடைந்து சென்றுள்ளனர். இறைவனின் சித்தே இம் மருந்தாகும்.

7-ம் திருவிழாவாகிய கப்பற் திருவிழாவானது சப்த தாதுக்களாலாகிய கடலாகிய ஓடத்தில் புறச் சமய நாகரிகமானது மக்களைச் சூறையாடி பிறவியாகிய கடலைத் தாண்டுதல் அரிது. உண்மையான சமயப்பண்புகளுடனும், நீதி நேர்மையுடனும், நம்பிக்கையுடனும் வாழ்ந்தால் பிறவிப்பெருங் கடலை நீந்தாது இறைவனடி சேரலாமென்பது ஓடமுள்ள போதலோ ஓடியாடி உழலாம். ஓடமுள்ளபோதலோ உறுதிபண்ணிக் கொள்ளலாம். ''ஓடமும் உடைந்து போய் ஒப்பற்ற வெளியிலே ஆழுமில்லைக் கோலுமில்லை யாருமில்லையானதே'' என்று ஒரு சித்தர் பாடியதன் அர்த்தமே இக்கப்பற் திருவிழாவின் ஞானார்த்தமாகும்.

இற்றைக்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன்பு தென் இந்தியாவிலே திருவனந்தபுரம் என்னும் பட்டினத்திலே மூன்றுமாதகால விடாமழை பொழிந்ததால் அங்குள்ள மக்கள் குளிராலும் பட்டினியாலும் இறந்தனர். இதனால் அந்நாட்டிலுள்ள மாடமாளிகைகளும் கூட கோபுரங்களும், தேரோடும் வீதிகளும், கணக்கிட முடியா நெற்களனிகளும், தேனினுமினிய தீங்கனி மரங்களும் தேடுவாரற்றுக் கிடப்பதை அறிந்த அந்நாட்டுமன்னன் திருவனந்தபுரத்திலே மக்களைக் குடியேற்றவேண்டுமென விரும்பினான். எனவே ஓர் அரச சபையைக் கூட்டி ஆராய்ந்தபொழுது தமது சேய் நாடாகிய இலங்கையிலுள்ள தமிழ் மக்களையே திருவனந்தபுரத்திற்குக் கொணர்ந்து குடியேற்றப்படவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. இதன்பிரகாரம்ஒரு கப்பலில் பெருந்தொகையான பட்டாளங்களையும், உணவு, உடை. சரக்கு வகைகளையும் ஏற்றி இலங்கைக்கு வியாபார நோக்கமாகச் சென்று அங்குள்ள தமிழ் மக்களைக் கொண்டு வரும்படி அந்நாட்டுமன்னன் தளபதிக்குக் கட்டளையிட்டான். அரச கட்டளைப்படியே தளபதி கப்பலை வங்காள விரிகுடா வழியாகச் செலுத்தி காங்கேசன்துறையை வந்தடைந்தனர். கப்பல் அங்கு நங்கூரமிடப்பட்டிருப்பதைக் கண்ட அவ்வூர் மக்கள் அவர்களிடத்துச் சென்றுஉணவு உடை, சரக்கு வகைகள் ஆகியவற்றைக் குறைந்த விலைக்கும் இலவசமாகவும் பெற்றதுடன் திருவனந்தபுரத்தில் குடியேறச்செல்வதற்கும் சம்மதம் தெரிவித்தனர். அவ்வாறான மக்களையும் ஏற்றிக்கொண்டு கப்பல் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை. ஆகிய இடங்களுக்கும் வந்து நங்கூரமிட்டு நின்று அங்குள்ள மக்களையும் ஏற்றிக்கொண்டு நாகர் கோவிலில் கவுத்தந்துறையென்னுமிடத்தில் வந்து நங்கூரமிட்டு ஏழு நாட்களாக நின்றனர். கப்பல் வந்து ஏழுநாட்களாகியும் அப்பகுதி மக்கள் அனுசரியாது, வினவாது விட்டமையால் தங்களை இவ்வூர் மக்கள் அலட்சியம் செய்கின்றனரென கப்பற் தளபதி ஆத்திரமடைந்து தனது படைக்கு இவ்வூரில் தலைமைக்காரன் அல்லது உத்தியோகஸ்தர்கள் இருந்தால்

(14-ம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் நாஸர்

ஜனாதிபதி நாஸருக்கு இலங்கைஅளித்தகௌரவம் இணையற்றது. சுதந்திர இலங்கை எந்த வெளிநாட்டுத் தலைவரின் மரணத்திற்கும் இவ்வளவு தூரம் துக்கம் அனுஷ்டித்தது கிடையாது.

கொழும்பில் நடைபெற்ற நாஸர் ஞாபகார்த்தக் கூட்டத்தில் பிரதமமந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா இதற்கான காரணங்களை எடுத்துரைத்தார்.

இலங்கைமீதும், இந்நாட்டு மக்கள் மீதும் ஜனாதிபதி நாஸர் கொண்டிருந்த அன்பையும், ஆதரவையும் சிறிமாவோ சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய அராபியக் குடியரசிலும், அரபு உலகிலும், ஆசிய-ஆபிரிக்கநாடுகளிலும் பொதுவாக உலகத்தின் சோஷலிஸ சமுதாயத்துக்கு மத்தியிலும் நாஸர் பெற்றிருந்த செல்வாக்கை ஒருசில உலகத்தலைவர்களே பெற்றிருந்தனர் எனலாம்.

கொழும்புக் கூட்டத்தில் உரையாற்றிய பல தலைவர்களும் நாஸரின் கொள்கைகள், சாதனைகள் ஆகியவற்றைப் புகழ்ந்துரைத்தார்கள். இலங்கைக்கு அவர் உற்ற நண்பர் என்பதையும் எடுத்துக் காட்டினார்கள். அவர் ஏகாதிபத்தியத்தின் விரோதி என்பதையே அவர்கள் குறிப்பாகத் தெரிவித்தார்கள்.

ஜனாதிபதி நாஸரின் இறுதிச் சடங்கின் போது அரசாங்கம் ஒருநாள் பகிரங்க விடுமுறை அளித்தது. பிரதமர் சிறிமாவோ, ஜனாஸா நல்லடக்கத்தில்நேரடியாகக் கலந்து கொள்ள வேண்டும் என்றும் மந்திரிசபை தீர்மானித்தது.

எனினும் இப்படியெல்லாம் கௌரவிக்கப்பட்ட நாஸர் உயிரோடிருந்த போது இலங்கைக்கு ஒரு தடவை கூட வந்ததில்லை என்பதை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. மத்திய கிழக்கில் இடைவிடாது நிலைத்தவரும் கொந்தளிப்பே இதற்குக்காரணம்.

பல நூற்றாண்டுகால சரித்திரத்தில் எகிப்திலோ அல்லது இதர அரபு உலகிலோ நாஸரைப்போன்ற ஒரு மனிதர் தோன்றியதில்லை.

ஜனாதிபதி கமால் அப்துல் நாஸரின் சாதனைகள் என்ன?

மன்னர் பாரூக்கின் பிடியிலிருந்து எகிப்தை விடுவித்தது முதலாவது சாதனை.

சோஷலிஸ அடிப்படையில் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு வித்திட்டது இரண்டாவது சாதனை.

நேருவின் மண்டல சார்பற்ற கொள்கையை எகிப்தும், அராபிய உலகின்வேறு சில நாடுகளும் பின்பற்றச் செய்து, கூட்டுச்சேரா நாடுகளின் முப்பெரும் தலைவர்களில் ஒருவராக நாஸர் உயர்ந்தது மூன்றாவது சாதனை.

தான் பதவிவகித்த காலத்தில், நடைபெற்ற இரண்டு யுத்தங்களிலும் எகிப்தின் தன்மானத்தைக் காத்தது நாஸரின் நான்காவது சாதனை.

பிரிட்டிஷ், பிரெஞ்சு, இஸ்ரவேல் படைகளை வாபஸ்பெறச்செய்து சூயஸ் கால்வாயை தேசீயமயமாக்கியது ஐந்தாவது சாதனை

தன்னை ஒழிக்கமுயன்ற பிரிட்டிஷ் பிரதமர் அந்தோனி ஈடனை ராஜினாமாச் செய்யவைத்தது ஆறாவது சாதனை.

அமெரிக்கா கைவிட்ட போதிலும், ரஷ்ய உதவியுடன் மாபெரும் அஸ்வான் அணைக்கட்டை நிர்மாணித்தது ஏழாவது சாதனை.

இஸ்ரேலுக்கு எதிரான போராட்டத்தில் அராபிய உலகை ஒன்றுபடுத்திய மகத்தான செயல் அவரது எட்டாவது சாதனை.

இன்னும் இதுபோன்ற எத்தனையோ சாதனைகள்!

நாஸர் ஒரு வீரபுருஷர். மதப்பற்றுக்கொண்டவராயினும், மத அடிப்படையில் அரசியலை அமைக்க அவர் ஒருபோதும்விரும்பியதில்லை. அவர் ஒரு தேசீயவாதியும் சர்வதேசவாதியும் ஆவார்.

நாஸரைப் போன்ற மனிதர்கள் அபூர்வமாகவே தோன்றுவதுண்டு.

நாஸரின் பதவிக்கு மற்றொருவர் வரலாம், ஆனால் மத்திய கிழக்கில் அவர் வகித்த இடத்தை நிரப்புவது சாத்தியம் அல்ல.

நாஸரை இழந்தது அரபு உலகுக்கு ஏற்பட்ட ஈடு செய்யமுடியாத நஷ்டம் ஆகும். அதே சமயம் இஸ்ரவேலுக்கு இது மேலும் ஒரு வாய்ப்பு

மத்திய கிழக்கு பூகோள ரீதியில் மிகவும் கேந்திரமான நிலையில் இருக்கிறது. எனவே வல்லரசு ஆதிக்கப் போட்டி அங்கு அதிகம். அதே சமயம் அரபு நாடுகளுக்கிடையே பல சச்சரவுகளும், ஒற்றுமையின்மையும் உண்டு இஸ்ரவேல் ஸ்தாபிக்கப்பட்டபின் அப்பகுதிக்கு ஏற்பட்ட சோதனைகள் அனந்தம். பாலஸ்தீன விடுதலை ஸ்தாபனங்கள் பல தோன்றியதும், ஜோர்டானில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தமும் இவைகளில் சில. இத்தனை சோதனைகளுக்கு மத்தியிலும் நாஸர் மத்திய [illegible]கில் முடிசூடா மன்னனாக விளங்கினார். அவரது ஸ்தானத்தை எவரால் நிரப்ப முடியும்?

— மணியம்

வியாபாரிமூலை

ஏன் பெயரைப் பார்த்ததுமே ஏதோ ஒரு மூலையென நினைக்கிறீர்களா?
அதன் அருமை பெருமைகளை அறிய
'ஈழநாடு' வாரமலர் அளிக்கும்
'எங்கள் கிராமம்'
தொடர் அம்சத்தைப் பாருங்கள்;
எழுதுபவர்:
வை. கா. சிவப்பிரகாசம் எம். ஏ.
22—10 70 'ஈழநாடு' வாரமலரில்
'வியாபாரிமூலை'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்துவெளி நாகரிகம் பற்றிய புதிருக்கு விடைகாணும் முயற்சி

**சிந்துவெளி நாகரீகம் பற்றிய விரிவான ஆராய்ச்சிகளை பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அறிஞர்கள், தனியாகவும், கூட்டாகவும் நிகழ்த்தி வருவது தெரிந்ததே. இந்தத் துறையில் பின்லாந்து அறிஞர்களும், சோவியத் நாட்டு அறிஞர்களும் மேற்கொண்டு வரும் ஆராய்ச்சிகள் சமீபகாலத்தில் உலகக் கவனத்தையும் பெரிதாகக் கவர்ந்துள்ளன. சோவியத் அறிஞர்கள் நடத்தியுள்ள ஆராய்ச்சிகள்பற்றியும், அவர்கள் செய்துள்ள முடிவுகள் பற்றியும் கட்டுரை விபரிக்கின்றது.**

## சோவியத் அறிஞர்களின் ஆராய்ச்சியும் முடிவுகளும்

**— ஐ. செரபிரியாகோவ் —**

**[ சோவியத்: கீழைநாட்டு ஆராய்ச்சிக் கழகத்தின் தலைமை ஆராய்ச்சியாளர் ]**

சோவியத் விஞ்ஞானப் பேரவையைச் சேர்ந்த மனித இனப்பரப்பு விளக்கவியல் கழகம் லெனின் கிராடில் நேவா நதிக்கரையில் 300 வருடங்களுக்கு முந்திய பழைய மாளிகை ஒன்றில் அமைந்திருக்கிறது. புகழ் பெற்ற ரஷ்ய விஞ்ஞானியும் பதினெட்டாம் நூற்றாண்டின் சிறந்த ஆராய்ச்சியாளருமான மிகையின் லொமனசோவ் இங்குதான் பணியாற்றிவந்தார்.

இந்தக் கழகத்தில் பேராசிரியர் யூரி கொரைஸோவ் தலைமையில் பல சோவியத் அறிஞர்கள் பண்டைய சிந்துவெளி மக்களின் எழுத்து மாதிரிகளைப் பற்றிச் சில ஆண்டுகளாகவே தீவிரமாக ஆராய்ச்சி செய்து வருகின்றனர். மாயா மொழியின் எழுத்துத் தொகுதியை இனம் கண்டு பெரும் புகழ் பெற்றவர் கொரைஸோவ் என்பது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

இந்த அறிஞர்களின் ஆராய்ச்சிப்பணி எந்த அளவுக்கு முன்னேறியுள்ளது? கடந்த சில ஆண்டுகளில் என்ன புதிய சாதனைகள் புரியப்பட்டுள்ளன? அந்த பழைய மாளிகையின் நுழைவாயிலில் அடியெடுத்து வைத்த போது இவையும் இவை போன்ற இதர கேள்விகளுமே என் மனத்தில் மேலோங்கி நின்றன.

0 0 0

தொல் பொருளாராய்ச்சியாளரின் மண்வெட்டி பல சந்தர்ப்பங்களில் ரகசியங்களைக் கண்டு பிடித்து வெளிப்படுத்தியுள்ளது. இவ்வாறுதான் மொஹஞ்சோதரோவில் இந்திய தொல்பொருளாராய்ச்சியாளர்கள் அகழ்வுப் பணிகளை மேற்கொண்டு ஒரு தொன்மையான நாகரீகத்தைக் கண்டுபிடித்தனர். இந்த நாகரிகம் இங்கு நிலவியது பற்றி உலகம் என்றுமே ஐயம்கொண்டதில்லை. இந்தக் கண்டுபிடிப்பின் போது ரகசிய எழுத்துக்களைக் கொண்ட முத்திரைகள் பலவும் அங்கு காணப்பட்டன. இந்த மறை எழுத்துக்கள் இதுவரை கண்டு பிடிக்கப்பட்டுள்ள எழுத்துக்களுடன் எவ்வகையிலும் ஒத்திருக்கவில்லை

எனினும் இந்த வாசகங்களைக் கண்டு பிடிக்கவும் சித்திரங்களுக்கு அடியிலுள்ள ரகசிய சின்னங்களின் பொருளைத் தெரிந்துகொள்ளவும் ஆராய்ச்சியாளர்கள் உறுதி கொண்டனர்.

இதற்கான கடினமான ஆராய்ச்சிப்பணி தொடங்கியது. ஒத்த வர்சகங்களைக் கொண்டு இப் புதிரைச் சிக்கறுத்திருக்கலாமே என்று கேட்கலாம். ஆனால் அப்படி எகிப்திய எழுத்துக்களோ சுமேரிய எழுத்துக்களோ இந்த முத்திரைகளிலுள்ள மறை எழுத்துக்களை இனம் காண உதவிகரமாயில்லை. இதுவரை தெரியவந்துள்ள மொழிகளில் ஏதேனும் ஒன்று இவ்வகையில் பயனுள்ளதாகவில்லையா என்று கேட்கலாம். ஆனலிது எவ்வகையான மொழியென்றே தெரியாதிருக்கும்போது இத்தகைய ஆராய்ச்சிக்கு மிக நீண்டகாலமல்லவா பிடிக்கும்?

இப் புதிரை விடுவிக்கும் பணியைப்பற்றி பேராசிரியர் கொரைஸோன் அமைதியாக தன்னடக்கத்தோடு விவரித்தார்.

எல்லா வாசகங்களையும் சேர்த்துப் பார்த்தாலும் 1,700 முதல் 2000 சின்னங்களுக்குமேல் இல்லை. ஆனல் எந்த ஆராய்ச்சிக்கும் குறைந்த பட்சம் 10,000 முதல் 30,000 சின்னங்கள் கொண்ட பல்வேறு வகைப்பட்ட வாசகங்கள் தேவை என்பது ஒப்பீட்டு ஆய்வாளரின் முடிவாகும் தவிரவும் இவற்றில் எந்த வாசகமும் நீளமாகவில்லை. முத்திரைகளில் காணப்படும் வாசகங்கள் பொதுவாக அல்லது ஆறு சின்னங்களைக் கொண்டவையாகவே உள்ளன. எனினும் சிந்துவெளி எழுத்துக்களை இனம்காணும் பணியை மேற்கொள்ளுவதென்று 1961ல் நாங்கள் தீர்மானித்தோம். மின்னணுக் கணிதப் பொறிகளின் உதவியுடனேயே நாங்கள் இப் பணியைத் தொடங்க முடிந்தது.

### எந்தவகை மொழி

ஓர் ஆராய்ச்சி முறையை வகுத்து அதன்படி நாங்கள் எங்கள் பணியை ஆரம்பித்தோம். முதலில் இது எந்த வகை மொழியைச் சேர்ந்தது என்பதை தீர்மானிக்க வேண்டியிருந்தது. சொல் வடிவங்களையும் அவற்றிற்கிடையே உள்ள பரஸ்பர உறவுகளையும் தெளிவுபடுத்திக் கொள்வதன் மூலமே இதனைச் செய்ய முடியும். இங்குதான் மின்னணுவியல் கணித எந்திரம் எங்களுக்கு உதவி புரிந்தது. எங்கள் வசமிருந்த எல்லா வாசகங்களையும் அதன் துணை கொண்டு நுணுகி ஆராய்ந்தோம். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட முறை தோன்றும் சின்னங்களும் தனியே பிரிக்கப்பட்டன, மற்ற சின்னங்களிலிருந்து வேறுபட்டு பன்முறை தோன்றும் சின்னங்களும் தனியே பிரிக்கப்பட்டன; இவ்வாறு வாசகங்களைப் பல்வேறு தொகுதிகளாகப் பிரித்துக் கொண்டோம். எனினும் மொழியின் அமைப்பு இன்னதென்று தெளியாமல், வாசகங்களைச் சொற்களாகப் பிரித்துக் கொள்ள முடியவில்லை.

''இது எந்தவகை மொழியைச்சேர்ந்ததுஎன்பதையே இதுவரை எங்களால் தீர்மானிக்க முடிந்துள்ளது. வாசகங்களைத் தொகுதிகளாகப் பிரித்துக் கொண்டதானது இலக்கண அம்சங்களையும் இலக்கணமல்லா[illegible]களையும் புரிந்துகொள்ளவும் அதன்மூலம் இது எந்தவகை மொழியைச் சேர்ந்தது என்பதை நிர்ணயிக்கவும் எங்களுக்குத்துணைபுரிந்தது. பிறகு இவ் வாசகங்களின் மொழியைஇந்தோ-ஐரோப்பிய மொழிகளுடனும் ஹுரீரி, முண்டா மொழிகளுடன் ஒப்பிட்டுப்பார்ப்பதும் சாத்தியமாயிற்று. இவற்றின் இலக்கணஅமைப்புகளை ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டுப் பரீட்சித்தும் பார்த்து, ஆதி-இந்தியஎழுத்துக்களின் மொழி முன்னிடைச் சொற்களல்லாத மொழிகளின் இனத்தைச் சேர்ந்தது என்ற முடிவுக்கு வந்தோம். இத்தகைய மொழிகள் உலகில் ஒரு சிலவே உள்ளன. இவை அநேகமாக திராவிடமொழிகளாக இருக்கக்கூடும், என்பதை பூகோள அமைப்பே கூடஎடுத்துக்காட்டுகிறது.

### முடிவை வெளியிட துடித்தோம்

''நாங்கள் இந்த முடிவை வெளியிடத் துடித்தோம் ஏனென்ருல் எங்கள் பணி முழுவதற்கும் இதுதான் அடித்தளமாக அமைந்துள்ளது. எனினும் இத்தகைய முக்கியமான பிரச்னையில் அவசரப்படக்கூடாது என்று எண்ணினேம். எங்கள்முடிவு சரியானதுதான் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு எல்லாவிவரங்களையும் மீண்டும் சரிபார்ப்பது அவசியம் என்று உணர்ந்தோம். இதற்கு மேலும் ஆறுமாதங்கள் பிடித்தன.

''இதற்குப் பிறகு எங்கள் முடிவு சரியானதுதான் என்பது உறுதியாயிற்று.''

''ஆதி இந்திய வாசகங்களில் சற்றே புதுமையானவையும் சொற்பொருள் மாறுபாடுகளுக்கு இடமளிக்கக் கூடியவையுமான பல சின்னங்கள் உள்ளன. இந்த சின்னங்களும் சின்னத் தொகுதிகளும் திராவிட மொழி இயல்பைச் சேர்ந்தவை என்று நாம் கொள்ளலாம். இவற்றில் ஒரு தொகுதி முக்கியமானது.

அதில் இரண்டு சின்னங்கள் இடம் பெற்றுள்ளன. ஒரு சின்னம் ''ஆறு'' என்ற எண்: மற்றொன்று ''மீன்'' என்று [illegible] னம். 'மீன்', 'மின்' என்னும் இரண்டு திராவிட [illegible] வேர்ச் சொற்களைக் கணக்கிலெடுத்துக்கொண்டு பார்த்தால் இந்தச்சின்னங்களுக்கு நியாயமான பொருள் கொள்ளமுடியும், தவிரவும் இந்த இரண்டுசின்னங்களும் கார்த்திகை விண்மீன் குழு அல்லது ''ஆறு விண் மீன்கள்'' என்னும் பண்டைய தமிழ்ச்சொற்களைப் பிரதிபலிப்பவைவாகவும் உள்ளன. ஏனென்ருல் 'மீன்' என்னும் சொல்லுக்கு 'நட்சத்திரம்' என்ற பொருளும் உண்டு. இந்த ஆதி ...... வாசகங்களை நாங்கள் ஒப்பிட்டுப் பார்த்து வேறுஎந்தமொழியிலும் இத்தகைய பெயரைக் காண முடியாது.

### 'மீன்' எனும் சொல்

'பண்டைய தமிழ் ணபுரா இலக்கியங்களில் 'ஆறு நட்சத்திரங்கள் (மீன்)'என்னும் சொற்றெடருடன் சப்தரிஷிமண்டலத்தைக் குறிக்கும் இரு நட்சத்திரங்கள் (மீன்)' என்னும்சொற்றெடரும் இடம்பெற்றிருப்பது நம் கவனத்திற்குரியதாகும். ஹரப்பாவில் அகழ்வாராய்ச்சி நடத்திய காலத்தில் கிடைத்த ஒரு முத்திரையில் 'ஏழு-மீன்' ஆகிய சின்னங்கள் காணப்படுகின்றன இதன்றி, தோளில் காவடி சுமந்து செல்வதுபோல் சித்தரிக்கும் ஒரு சின்னம் பல சாசனங்களுக்கு அடியில் இடம்பெற்றிருப்பதும்இங்கு குறிப்பிடத்தக்கது. திராவிட மொழிகளில் 'காவடி' என்னும் சொல்லும் 'காத்தல்', 'காவலன்' என்பதைக் குறிக்கும். 'கா' என்னும் திராவிட வேர்ச்சொல்லும் ஒரேபொருளுடையனவாகும். இவற்றையெல்லாம் கொண்டு பார்க்கும்போது ஆதி - இந்தியவாசகங்களில் சில பாதுகாப்பு இயல்பு கொண்டவை அதாவது இன்றும் (உதாரணமாக சில கடவுளர்கள்) நம்மைக் காப்பாற்றுவாராக என்னும் ரீதியில் அமைந்துள்ளவை என்று நாம் ஊகிக்க இடமிருக்கிறது. பிற்கால இந்திய கல்வெட்டுகளிலும் இவைபோன்ற தொடர்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன. சுருக்கமாகச் சொன்னல், மொழியின் தன்மையை நிர்ணயிக்கும் தன்மையிலிருந்து, கட்டத்திலிருந்து திராவிட இயல் கண்ணேட்டத்தில் சாசனங்களின் தன்மையை நிர்ணயிக்கும் கட்டத்துக்கு நாங்கள் தற்போது படிப்படியாக மாறிவருகிறேம்.

### ஆதி இந்திய சின்னங்கள்

'1965-ல் எங்கள் கால பணிகளைப்பற்றியும் அவற்றல் மிகவும் பூர்வாங்கமான பலாபலன்களைப் பற்றியும் சில விபரங்களைப் பிரசுரித்தோம் பிறகு எட்டாவது சர்வதேச மனிதஇன ஆராய்ச்சியாளர் இனப்பிறப்பு விளக்கவியலாளர் காங்கிரசுக்கு மூன்று ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தயாரித்தோம். ஆதி-இந்திய வாசகங்களைப் பூர்வாங்கமாக ஆராய்ந்து நான் ஒரு கட்டுரை தயாரித்திருந்தேன். ஆதி இந்திய சின்னங்களுக்கு பொருள்கொள்ளும் பிரச்னை குறித்து பி, ஒய். வொல்செக் ஒரு கட்டுரை தயாரித்திருந்தார், திராவிடமொழிகளின் அடிப்படையில் ஆதி-இந்திய வாசகர்களுக்கு மொழி ரீதியாக அர்த்தம் கொள்ளும் கண்ணேட்டம் பற்றி எம். வி. குரோசை ஒரு கட்டுரை தயாரித்திருந்தார்.

### சோவியத் இந்திய சகாக்கள்

''இதைக்கொண்டு நாங்கள் மூவர்மட்டுமே இப்பிரச்னை குறித்து ஆராய்ந்து வருகிறேம் என்ற முடிவுக்கு வந்துவிடக்கூடாது. இதில் எங்கள் சோவியத் சகாக்களதும் இந்திய சகாக்களதும் ஒத்துழைப்பைத் தொடர்ந்து பெற்று வருகிறேம். எங்களுக்கு உதவி செய்தவர்களில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் எம். ஷெச்சதெங்கோ, மொழி இயலாளர்கள் எம். ஆந்திரனேவ், டி. டி. கதனிஞ, எஸ். ருதின் ஆகியோர் முக்கியமானவர்களாவர்.

''எங்களுக்கு நட்புறவான முறையில் ஆலோசனைகள் கூறியும் பல விபரங்களை அளித்தும் உதவிய புகழ்பெற்ற இந்திய தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களான திரு. லால், திரு. குப்தா, திரு. தாபர், திரு. ராவ் பேரன்றோரையும் நாங்கள் மறக்கமாட்டோம். இவர்களுடன் நாங்கள் நீண்டகாலமாகவே தொடர்பு கொண்டுவருகிறேம்''.

பேராசிரியர் கொனரஸோவ் என்னிடம் இரண்டு பிரசுரங்களை அளித்தார். இவற்றில் ஒன்று 1965ல் ரஷ்ய மொழியில் பிரசுரிக்கப்பட்டதாகும். மற்றொன்று ஆதிகால இந்தியா; ஆதி -இந்திய வாசகங்கள் பற்றிய ஆராய்ச்சியின் சுருக்கமான அறிக்கை(1968) என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டதாகும். ''இப்பிரச்னை குறித்து ஆராய்ந்து வரும் எல்லா நிறுவனங்களுக்கும் தனி நபர்களுக்கும் இப்பிரசுரங்களை நாங்கள் அனுப்பியுள்ளோம். இவை அளவில் சிறியவையானுலும் பெரும் ஆராய்ச்சி முடிவுகள் இவற்றில் இடம் பெற்றுள்ளன'' என்று அவர் கூறினர்.

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மன் அருள்




முற்றத்தில் நின்றபடி வானத்தை ஏறிட்டு நோக்குகிறார் கனகசபாபதி வானத்தில் இருள் மண்டிக்கிடக்கிறது. மணி ஏழு என்பதற்கு அறிகுறியாக அவர் வீட்டிற்கு அருகிலிருந்த பிள்ளையார் கோவிலில் பூசை ஆரம்பமாவதற்குரிய மணியோசை கேட்கிறது. கனகசபாபதி இருள் மண்டிக் கிடந்த வானத்தையே ஒரு கணம் வெறிக்க உற்றுப் பார்த்தபடி நிற்கின்றார். வானத்தில் மட்டும்தானா இருள்? அவர் இதயத்திலும் இருள்மண்டிக் கிடக்கிறது என்பதை அவரிடமிருந்து கிளம்பிய உஷ்ணம்மிகுந்த நெடுமூச்சொன்று வெளிப்படுத்துகிறது. அடுத்த கணமே அவர் தமது பார்வையைப் பிரித்து திண்ணையை ஏறிட்டு நோக்குகிறார்.

திண்ணைக் குந்தின் மீது வைக்கப்பட்டிருந்த போத்தல் விளக்கின் மங்கலான ஒளியில் அவருடைய மனைவியின் உருவம் தெரிகிறது. அவர் எதுவும் பேசவில்லை. ஆனால் அவரிடமிருந்து செருமல் ஒன்று வெளிக்கிளம்பி மடிகிறது. அவருடைய செருமல் சத்தத்தின் அர்த்தத்தைப் புரிந்துகொண்டவள்போல் அவருடைய மனைவி குந்தின்மீதிருந்த போத்தல் விளக்கை ஊதியணைத்துவிட்டு திண்ணையை விட்டு முற்றத்திற்கு வருகிறாள். சற்றுமுன் மங்கலான ஒளி பரவிக்கிடந்த அந்தத் திண்ணையில் இப்பொழுது இருள் மண்டிப்போய்க்கிடக்கிறது. அதுவரை திண்ணைத் தாழ்வாரத்தின் ஓரத்தில் உடம்பைச் சுருட்டிக்கொண்டு படுத்திருந்த கனகசபாபதியரின் வீட்டுநாய் எதையோ உணர்ந்துகொண்டாற்போல் ஓடிவந்து கனகசபாபதியரின் காலை நக்கிக்கொள்கிறது.

''அடீ...! சனியனே...அப்பாலே போ...'' அதுவரை அவர் அடக்கிவைத்திருந்த ஆத்திரமெல்லாம் அவருடைய வார்த்தைகளில் வெம்பி வெடித்துச் சிதறுகிறது. காலால்நாயை உதைத்துத்தள்ளிவிட்டு வெளிப்படலையை நோக்கி நடக்கிறார். 'லொள் என்றுமுனகியபடியே அந்தநாய் மீண்டும் திண்ணைத் தாழ்வாரத்தில் முடங்கிக்கொள்கிறது.

'கிரீச்' ...

வெளிப்படலை திறந்து மூடிக்கொள்கிறது கனகசபாபதியரும் அவருடைய மனைவியும் வெளிப்படலையைத் தாண்டி வெளியே வருகின்றனர். தெருப்படலை திறந்து மூடிக்கொண்ட சப்தத்தில் பக்கத்து மரத்திலிருந்த இனம்புரியாத பறவைஒன்று கீச்சிட்டலறி இரவின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கிறது. கனகசபாபதி வெளிப்படலையைப் பூட்டினால் நன்றாகப் பூட்டிவிட்டுச் சாவியை இடுப்பில்செருகியபடி தெருவில் இறங்கிநடக்கிறார். அவரைத்தொடர்ந்து அவருடைய மனைவி அவர் பின்னே நடக்கிறாள். சல்லி அம்மன் கோயிற் திருவிழாவைக் கண்டு களிப்பதற்காக மக்கள் கூட்டங்கூட்டமாக நடந்துகொண்டிருக்கின்றனர். கார்களும் பஸ்ஸுகளும் இருள்பூத்துக் கிடந்த தெருவில்ஒளிவெள்ளத்தைப் பாய்ச்சியவாறுசல்லிஅம்மன் கோவிலை நோக்கி விரைந்துகொண்டிருக்கின்றன. ''சரியான இருளாகக் கிடக்கு...'' -கனகசபாபதியரின் மனைவி நல்லம்மா முனங்கியபடியே தட்டுத்தடுமாறி கனகசபாபதியருக்குப் பின்னால் நடந்துகொண்டிருக்கிறாள். கனகசபாபதியர் எதுவும் பேசவில்லை. மீண்டும்செருமல்ஒலி மட்டும்வெளிக்கிளம்பிமடிகிறது. மடியினுள் செருகிவைத்திருந்த கனயான சுருட்டொன்றை எடுத்துப் பற்றவைத்துப் புகையை உள்ளுக்கிழுத்து வெளியே ஊதியவாறு நடக்கிறார். நேரம் நழுவிக்கொண்டிருக்கிறது.

''ம் ... ம் ... கெதியா... நடங்க...'

'பெரியவனைக் கவனமாகக் கையிலை பிடித்துக்கொள்ளுங்கோ...... கோவில் கிட்டிட்டுது...''

'என்னப்பா...இதுஇழவு... இயமனைக்கொன்றஇருட்டு.

கோவிலைநோக்கி விரைந்துகொண்டிருக்கும் சனக்கூட்டத்தின் மத்தியிலிருந்து பலவிதமான குரல்கள் எழுந்து மடிகின்றன. சனக்கூட்டம் தெருவிலிருந்து இறங்கி தென்னந்தோப்புகளுக்கூடாக இடைமறித்துச் சென்ற குறுகலான பாதை வழியாக ஊர்கிறது. கனகசபாபதியரும் நல்லம்மாவும் கூட்டத்தோடு கூட்டமாக ஊர்கின்றனர்.

சல்லி அம்மன் கோவிலும் அதன் பெருவீதியும் ஒளிப்பிரவாகத்தினுள் ஆழ்ந்து கிடக்கின்றன. சனக்கூட்டம் வீதியெங்கணும் ஆக்கிரமித்தவாறு திரள் திரளாக ஆங்காங்கே கூடியிருக்கிறது. பலவிதமான பொருள்களையும்வைத்து வியாபாரஞ் செய்யும் வியாபாரிகள் பலவிதமான குரலில் பேசி மக்களைக் கவருவதற்காகப் பிரயத்தனம் செய்துகொண்டிருக்கின்றனர். காலடிஎடுத்து வைத்து நடந்துகொள்ள முடியாத அளவிற்குச் சனக்கூட்டம் நிரம்பிப்போய் கிடக்கிறது.

கனகசபாபதியரும் அவருடையமனைவியும் ஏரிக்கரையோரமாக இருந்த பாதை வழியாக சல்லியம்மன் கோவிலை நோக்கி விரைந்து நடக்கின்றனர். நிரம்பியிருந்த சனக்கூட்டத்தை ஒருவாறு கடந்து கோவிலின் முன்புறத்திற்கு வருகின்றனர். கோவிற் படிக்கட்டில் பக்தர்களினால்போடப்பட்ட கற்பூரம் நறுமணத்தை எழுப்பியவாறுஎரிந்துகருகிக் கொண்டிருக்கின்றது. தேங்காய்உடைக்கப்படும் கல்லைச் சுற்றித் தேங்காய்ச் சிதறல்கள் சிறு குவியலாகக் குவிந்து கிடக்கிறது. இருவரும் வாசலில் நின்று சல்லி அம்மனுக்குத் தமது வணக்கத்தைச் செலுத்திவிட்டு அப்பால் நகருகின்றனர். கடற்கரையை அண்மித்தாற்போல் வெகு கம்பீரத்தோடு அமைந்திருக்கிறது சல்லியம்மன் கோயில். வெண்மணல் பரவிக்கிடந்த கடற்கரையோரமாகவும் கோவிலைச் சுற்றியுள்ள பெருவீதியிலும் பக்தர்கள் கூட்டம் நிரம்பிக் கிடக்கிறது. கனகசபாபதியாரும் நல்லம்மாவும் கடற்கரையோரமாக மணலில் அமர்கின்றனர். இருவரிடையேயும் மௌனம் நிலவுகிறது.

நீண்டுகிடந்த நீலக்கடல் 'ஸ்...ஸ்...' என்ற சப்தநாதத்துடன் அலையெழுப்பி ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கிறது. அக்கடலில் தவழ்ந்துகொண்டிருந்த குளிர்காற்று 'ஜில்'லென்று வேகமாக வீசிக்கொண்டிருக்கிறது. கனகசபாபதியர் தோளில் கிடந்த சால்வையை இழுத்தெடுத்து தனது உடம்பை நன்றாக மூடிக்கொள்கிறார். அவருடைய மனைவி கையோடு கொண்டு வந்திருந்த வெற்றிலைக்குட்டானை அவிழ்த்து வெற்றிலை போடுவதில் முனைகிறாள்.

கோவிற் திருவிழாக்களில் நடைபெறும் அத்தனை அம்சமும் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கோவிலுக்கருகே அமைக்கப்பட்டிருந்த மேடையின்மீது மேளக்கச்சேரி வெகு சுவாரஷ்யமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நீண்ட கடற்கரை மணலில் அடுப்பு மூட்டிப் பிட்டு அவித்துக் கொண்டிருக்கும் பெண்களிடம் பிட்டும் பலாப்பழமும் வாங்குவதற்காக பக்தர் கூட்டத்தின் ஒரு பகுதி அலைந்து கொண்டிருக்கிறது.

கனகசபாபதியர் தம் மனைவியின் முகத்தைக்கூட ஏறிட்டுப்பார்க்க மனமில்லாமல் இருள் பூத்துக்கிடந்த வானத்தையே பார்த்தவாறு அமர்ந்திருக்கிறார். அவரிடமிருந்து நீண்டதொரு நெடுமூச்சொன்று வெளிக்கிளம்பி காற்றோடு கலந்து மறைகிறது. அவருடைய மனம் கடந்த காலத்தில் நடந்து முடிந்துபோன சம்பவமொன்றை அசைபோட்டுக் கொள்கிறது.

அப்பொழுது கனகசபாபதியருக்கு இருபத்திநாலு அல்லது இருபத்திஐந்து வயதிருக்கும். வாலிபமுறுக்கோடு வாழ்ந்த காலம். நினைத்த காரியத்தைச் செய்துமுடிக்கக்கூடிய திடகாத்திரமான உடலமைப்பும் திண்மையான நெஞ்சுத் துணிவும் வசதியும் படைத்தவராக வாழ்ந்தவர் கனகசபாபதியர். நாலெழுத்துப் படித்து உத்தியோகமென்று எதுவும் பார்க்காவிட்டாலும் வியாபாரத்துறையில் அவருடன் போட்டி போடக்கூடியவர்கள் அந்தக்காலத்தில் யாரும் இருக்கவில்லையென்பது உண்மை. கோவில் திருவிழாக்காலங்களில் அவர் கண்டிப்பாகக் கலந்துகொள்ளுவார்.

அன்று......!

சல்லியம்மன் கோயிற்திருவிழா சல்லியம்மன் கோயிற் பெருவீதியிலும் கடற்கரையிலும் சனக்கூட்டம் நிரம்பி வழிந்தது. நேரம் நள்ளிரவைத் தாண்டியும் சனக்கூட்டத்தின் இரைச்சல் அடங்கவில்லை. சல்லியம்மன் கோவிலைச் சுற்றியிருந்த சுற்றாடலே அமளிதுமளிப் பட்டுக் கொண்டிருந்தது. கனகசபாபதி தனது உற்ற நண்பர்கள் ஐவரும் புடைசூழ மாநில மன்னன் போல சல்லியம்மன் வீதியில் பவனி வந்துகொண்டிருந்தான், இடுப்பில் பட்டு வேட்டி, விம்மிப் பூரித்து மதமதர்த்து நின்ற தோள்களையும் அகன்று விரிந்த மார்பையும் மூடியவாறு பட்டுச்சால்வை. பரந்து கிடந்த நெற்றியில் வகிடு விரித்துப் பூசப்பட்ட திருநீறு. பூசப்பட்ட திருநீற்றின் நடுவில் அகலமான சந்தனப் பொட்டு. இவைகள் சகிதம் அவனைப் பார்ப்பவர் பெரிய பக்திமான் என்றே எண்ணுவார்கள். கனகசபாபதி கூட்டத்தை விலக்கிக் கொண்டு தன் நண்பர்களுடன் பிட்டும் பலாப்பழமும் விற்பனை செய்யப்படும் கடற்கரையோரமாக வந்து சேர்ந்தான்.

நடுத்தர வயதுப் பெண்கள் பலர் கடற்கரை மணலில் அடுப்புமூட்டிப் பிட்டு அவித்துக் கொண்டிருந்தனர்.

'டேய்! மயிலு... மணி ரெண்டிருக்கும்போலை கிடக்கு... இனிப் புட்டுச் சாப்பிட வேணும்... போய்ப் புட்டு வாங்கிவாடா...'' ஐந்து ரூபாய் நோட்டொன்றை அலட்சியமாக இழுத்து மயில்வாகனம் என்பவனிடம் கொடுத்தனுப்பிவிட்டு மணலில் அமர்ந்தான் கனகசபாபதி. மற்ற நண்பர்களும் அவனுடன் அமர்ந்து கொண்டனர். கடல் இரைந்து கொண்டிருந்தது நேரம் நழுவிக்கொண்டிருந்தது. பிட்டு வாங்கப்போன மயில்வாகனம் வரவில்லை. கனகசபாபதியும் நண்பர்களும் மயில்வாகனத்தைத் தேடி கடற்கரை மணலில் நடந்தனர். மயில்வாகனம் பிட்டு விற்கும் பெண் ஒருத்தியுடன் தர்க்கப்பட்டுக் கொண்டிருந்தான். கனகசபாபதியும் நண்பர்களும் அந்த இடத்துக்கு வந்து சேர்ந்தனர்.

'டேய் மயிலு...! என்னடா நடந்தது...?' - கனகசபாபதி கேட்டான்.

'இந்த மனுசி முதல் வந்த ஆக்களுக்கெல்லாம் பிட்டுக் கொடுத்துப் போட்டுத்தான் எனக்குத் தருமாம்... பெரிய கரைச்சல்...' என்றான் மயில்வாகனம், பிட்டு அவித்துக்கொண்டிருந்த வயது

(12-ம் பக்கம் பார்க்க)

— "வேங்கைக்குமரன்" —

படிப்பனைக்கதை

# சிங்கமும் பூனையும்

சந்தனக்காடு என்னும் வனத்திலே அரிமாதவன் என்ற சிங்கம் அரசு புரிந்து வந்தது. அதற்கு நிரம்ப வயதாகிவிட்டபடியால் பற்கள் எல்லாம் தளதளத்துப் போயின. தான் கொல்லும் மான், முயல் முதலிய சிறிய மிருகங்களின் எலும்புகளைக் கடிக்க முடியாமல் தனி இறைச்சியை மட்டும் தின்னும். அது மிச்சம் விடும் எலும்புகள் நரிகளுக்கும், ஓநாய்களுக்கும் விருந்தாகின.

அந்தக்காட்டில் எலிகள் குழாம் அதிகம். அரிமாதவன் நிறையச் சாப்பிட்டுவிட்டு நித்திரைகொள்ளும் சமயம் எலிகள் கூட்டமாக வந்து சிங்கம் குறட்டை விட்டுக்கொண்டிருக்கையில் அதன் பல்லிடுக்குகளில் அடைந்திருக்கும் சிறு இறைச்சித்துண்டுகளைப் பிடுங்கித் தின்னும். இதனால் சிங்கத்துக்கு நித்திராபங்கம் ஏற்பட்டு அது விழித்தெழுவதற்குமுன் எலிகள் ஓடி மறைந்துவிடும்.

இந்தக் கரைச்சலைத்தாங்க முடியாத சிங்கம் ஒருநாள் தனது ஆஸ்தான மந்திரிகளை அழைத்து ஆலோசனை நடத்தியது, அப்பொழுது சம்புநாதன் என்னும் நரி எழுந்துநின்று, 'ஓ! அரசகேசரியே! இச்சிறு விஷயத்துக்காக தாங்கள் கிலேசப்படலாமா? நாட்டிலிருந்து ஒரு பூனையை அழைப்பித்து அதற்கு கொத்தவால் உத்தியோகம் கொடுத்துவிடும். எலிகள் உம்மை நெருங்க மாட்டா!' என்று கூறியது. சிங்கம் சபாஷ் என்று கூறி உடனே ஒரு பூனைக்கு ஓடர் கொடுத்தது.

மாற்சாலன் என்னும் அந்தப்பூனை வந்தநாள் தொடக்கம் சிங்கம் நிம்மதியாகத் தூங்கியது. எலிகள் அதை நெருங்கவில்லை. பூனையோ அவற்றை விரட்டித துரத்தியதே ஒழிய ஓர் எலியையாவது பிடித்து, தன் வயிற்றுக்கு இரையாக்கவில்லை. இது மற்ற மிருகங்களுக்கு பெரும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. எலிகளின் பரமவைரியான பூனை ஒன்றையாவது புசிக்காமல் விட்டதற்குக் காரணம் என்ன?

அது மாற்சாலனுக்கு மட்டுமே தெரிந்த ரகசியம். எலிகளைப் பிடித்துப் பசியாறிவிட்டால் தனக்குச் சேவகம் போய்விடும். அதோடு சிங்கராஜன் கொடுக்கும் சுளையான சம்பளமும்போய் விடும். எலிகள் உயிரோடிருந்தால்தான் கொத்தவால் உத்தியோகம் நிரந்தரமாகும். இந்தவிதமாக யோசித்து அது எலிகளைக் கொல்லாமல் விட்டுவிட்டது.

இப்படி இருந்து வரும் காலத்தில் ஒருநாள் மாற்சாலன் வெளியூர் போக வேண்டிய நிமித்தம் ஏற்பட்டதால் தன்னுடைய மகனை கொத்தவால் உத்தியோகம் பார்க்கும்படி கூறிவிட்டுப் போய்விட்டது. குட்டிப்பூனை சுட்டியானது வாலிபத்தின் முறுக்கேறி விறுவிறுப்பாயிருந்தது. எலிகளைக் கண்டதுதான் தாமதம் அது ஒரே பாய்ச்சலில் பாய்ந்து நாலாபக்கமும் சாடி அவற்றைத் துவம்சம் செய்தது. ஒரு பகல் ஓரிரவில் எலிக்குலம் அழிந்து போய்விட்டது.

மாற்சாலன் திரும்பி வந்து எலிகள் வளைக்கு வளை செத்துக் கிடப்பதைப் பார்த்து 'ஐயோ. மகனே! என்ன காரியம் செய்தாய்? என் வாயில் மண்ணைப் போட்டு விட்டாயே! எலிகளை ஏன் கொன்றாய்?' என்று கேட்க 'அப்பா, எங்கள் குலவழக்கத்தின்படி செய்தேன். இதில் என்ன தவறு' என்று மகன் சொன்னது.

எலிகளைக் கொல்ல வேண்டாம் என்று சொல்லாமற் போனது தன் தவறு என்று மாற்சாலன் உணர்ந்தது. 'பணத்திற்காகப் பகைவனையும் கொல்லாமல் விட்டேன் இப்படி நடக்குமென்று தெரியாமற் போய்விட்டது' என்று மனம் வருந்தியது.

எலிகளின் தொந்தரவு இல்லையென்பதைக் கண்ட சிங்கம் பூனையின் சேவகத்தை அந்தமாகத் தோடு [illegible] விட்டது.

படிப்பனை: [illegible] வெல்லும்

வி. என். பி.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எங்கும் மோகம்! எதிலும் மோகம் ஆனால்--?

## டி. என். சுகி. சுப்பிரமணியன்

[பணத்தை நியாய வழியில் சம்பாதிக்க முடியாது என்று பாமரன், பண்டிதன், வருமானவரி இலாகா, பொருளாதார நிபுணர், தத்துவதரிசி அயோக்கியன் உள்பட யாவரும் எண்ணுகிறார்கள். இது யந்திர வளர்ச்சியில் பிறந்த இந்நாள் மனப்பான்மையா? என்று ஒரு கேள்வியைக் கேட்டு சமூகத்திலுள்ள மோகம்பற்றி சிந்திக்கவைக்கிறார் பிரபல எழுத்தாளரும் நாடகாசிரியரும் நாடகத் தயாரிப்பாளருமான திரு. டி. என். சுகி சுப்பிரமணியன்.]

நிறைய சொத்து! நிறைய சுதந்திரம்! நிறையப் பணக்குவியல்! இந்நாளில் எவரிடமும் கொழுந்துவிடும் ஆசையாக இருப்பது இவைதாம். ஆசை, பற்று, மோகம் யாவும் சமயப்பற்று உள்ளவர்களிடம் இருத்தல் கூடாது என்பது பள்ளிப் படிப்பின் அறிவுரை. வாராவாரம் கோவில் உண்டியல்களில் விழும் பொன்னும், மணியும் சமயப்பற்று உள்ளவர்களின் செயலாக இருக்கிறது. தனக்குப் போகத் தானம் செய்கிறவர்களின் மர்மச் செயலாக இருக்கிறது. தர்மதரிசனமாக இருந்த நாட்கள் போய் எங்கும் பணத்தின் வரவிற்குப் பின்னரே கடவுளர் காட்சி தருவது இயல்பாகிவருகின்றது. நாள் கணக்காக, மாதக்கணக்காக, ஆண்டுக்கணக்காகப் பாடுபட்டுத் தேடிய பணத்தைக் கோவில் உண்டியலுக்குள் போட்டால்தான் தங்கள் கடவுள் பக்தி நிறைவேறுகிறது என்று ஆஸ்திகர்கள் எண்ணுகிறார்கள். பணவரவு செலவுக்காக இந்நாளில் கோவிலுக்குப்போய் வருகிறார்கள்.

பணத்தின்மீது பற்றற்று இருப்பவனை, பன்றிக்குச் சமம் என்று கூறுவர். சாக்கடையிலும், அழுக்கிலும் அழுந்திவாழவேண்டியவன் அவன். பிச்சைக்காரனுக்குக்கூட வங்கியிலே கணக்கு இருக்கிற உலகத்தில் நாம் வாழ்ந்துவருகிறோம்.

துறவு நிலையைச் சித்தரிக்கும் மடங்களும், மடாதிபதிகளும் பல வங்கிகளில் பெருந்தொகைக்குக் கணக்கு வைத்திருக்கிறார்கள். பணத்தைச் சேர்த்து வைப்பது அதர்மம் அநீதி என்ற சமயப்பற்றுள்ள நாடு நமது நாடு. காஷாயம் தரிப்பது தாடி வளர்ப்பதுபோல பாங்கிக் கணக்குவைக்கும் வழக்கம் துறவிகளின் செயலாக இருத்தலைக் காண்கிறோம்,

சமய நோக்கத்தை நாம் மறந்துவிட்டோமா?

இல்லை பணத்திற்குத் தாஸர்கள் ஆகிவிட்டோமா?

பணமே இல்லாது உழல்வதைவிட கொஞ்சம் பணத்தோடு உழல்வது மேம்பாடான காரியம் என்று எண்ணிவிட்டோமா?

பொழுது விடிந்ததுமுதல் அடையும்வரை நமக்குத் தேவை பணம் என்பதை இன்றைய உலக வாழ்க்கை கூறிக்கொண்டிருக்கிறது. செவிட்டில் ஓங்கியடித்த மாதிரி பணம் பணம் என்ற ஓசையை நீக்கமற எங்கும் கேட்கிறோம்.

நம்முடைய கண் முன் காணுகிற கட்டிடங்கள், கடைகள், சாலைகள், அணைக்கட்டுகள், காடுகள், கழனிகள் யாவும் நமது முன்னோர் தங்கள் வருங்கால சந்ததியார்களுக்காக விட்டுச்சென்ற தாவர ஜங்கம செல்வங்கள். தத்தம் மனைவி மக்கள் சுகமாக வாழ எதையாவது உதவிக்கு விட்டுச்செல்வது கடமை என்று நினைக்கிறார்கள். குழந்தைகள் தத்தம் பெற்றோரின் சேமிப்பை பிதிரார்ஜிதமாக அடைகின்றனர். ஆனால் தத்தம்பெற்றோரின் உழைப்பு, ஊக்கம், முயற்சி, திறமை, சாதுர்யம் இவற்றையும் அடைவதற்கு முழுமுயற்சி செய்வார் இல்லையே? அவ்வாறு முயற்சி செய்பவர்களும் குறைவாக இருக்கிறார்கள் எங்கும் பலனை அடையத்தான் மக்கள் தவித்துப் பறக்கிறார்களே தவிர, பாதையை அணுகிக் காணும் ஆவலையும், திறனையும் காணோம்.

மேலும் ஒருஉண்மையைப் பார்ப்போம். தந்தை கர்ணனாக இருந்தால் மகன் கருமியாகவும், கஞ்சனாகவும் இருக்கிறான் இதற்குமாறுபாடாக கஞ்சன் வயிற்றில் கர்ணன் பிறப்பதையும் பார்க்கிறோம். பிறர்க்குக் கொடுத்து [illegible] இருப்பனவற்றையெல்லாம் தமது வயிற்றுக்கென்று பேராசை படைத்தவர்களாகவாழ்வதையும் பார்க்கிறோம்.

தந்தை சேமித்தால். மகன் சேமிப்புச் செய்கிறான். கிட்டத்தட்ட அண்மைக்காலம் வரை உயிரை ஒடுக்கி, உடம்பை ஒடுக்கி, வீடு வாசல், நிலபுலம் விருத்தி செய்தநமதுமுன்னோர்களைப் போன்று, கால்நூற்றாண்டுக் காலமாக இத்தகையசேமிப்பில் ஆசையற்று விருதாவாகச் செலவழிக்கும் கூட்டத்தையே எங்ஙணும் காண்கிறோம்.

அறிவுச் சேமிப்பு பணச் சேமிப்பு, இவற்றின் மீது இந்நாள் இளைஞர்களுக்கு அக்கறையில்லை. உல்லாசமாக வாழ எண்ணுகிறார்கள். சேமிப்பு என்பது தகாத காரியம், உடல் உழைப்பதும் தீமை என்ற எண்ணம் பரவிய யுகத்துள் வாழ்கிறோம். இப்படி இருப்பின் நாடு எங்ஙனம் உருப்படும்?

உடுத்த, நாகரீகமான உடை, ஏறிச்செல்ல, சொந்த மோட்டார், கைச்செலவுக்குக் குளிரக் குளிரப்பணம் இவை இந்நாள் இளைஞர்தம் உடனடியான தேவை. அன்றாடச் செலவையும் அவ்வப்போதைய இன்பத்தையும் சொர்க்கமாக எண்ணும்உலகத்துள் இவர்கள் வாழத் துடிக்கிறார்கள். நமது கைக்குள் கிடைக்கும்செல்வத்தை நாம் பயன்படுத்தி நமக்குப் பின்னர் தோன்றும் சமுதாயத்திற்குக் கொடுக்காது போனால் செல்வங்கள் அழிந்துபோகும். வருங்காலத்தினர் வாழ்வும்கசந்து போகும். கண்ணில் காண்பன' கைபடுவனயாவும்நமக்காகமட்டும் இல்லை. நமது வருங்காலச் சந்ததியாரின் உரிமைகள் என்ற எண்ணத்தை சிந்திப்பவர்கள் சீர்திருத்தவாதிகள் இவர்களிடம்இருத்தல் வேண்டும்.

இந்நாள் உடையலங்காரம் இருக்கிறதே இது விளம்பரத்தின் பிரதிபலிப்பாக இருக்கின்றது. பாதி கிறுக்குத்தனம்: பாதி போக்கிரித்தனம். இதுதான் இந்நாள் அலங்காரத்தின் நோக்கம்,

முடிமுதல் அடிவரை இத்தகைய அலங்காரத்தைப் பார்க்கிறோம், வாழ்க்கை மீது வெறுப்புக்கொண்ட இளம் துறவிகள்போல தலையலங்காரம் இருந்தாலும், வயசும், வாலிப உடலும் இவர்களுக்குச் சும்மா இல்லை, என்னதான் உலகப்போக்கில் வெறுப்பு வளர்ந்தாலும் அன்றாடம் உண்டு உறங்கி வாழ்ந்தாக வேண்டுமே, சமுதாயத்தின் எல்லாப்பகுதியும் உண்டு உறங்கி செயல்பட்டாக வேண்டுமே. எனவே நிஜ சந்நியாசியாகத் தன்னை மாற்றாமல் குழந்தைகுட்டிகளுடன் சன்யாசி மனப்பான்மை வாழ்க்கை வாழ்வது தவறு.

துறவு என்பது மனத்தளவிலும் செயல் அளவிலும் ஈடுபாடுகொண்டு இரட்டை வாழ்க்கை வாழ்வது தனக்குக்கேவலம். தான் பிறந்த தான் பிறப்பிக்கும் சமுதாயத்திற்கும்மானக்கேடு'

நம்மவர் மனநிலை என்ன? நமக்கு யாராவது ஆயிரம் பதினாயிரம் தரமாட்டார்களா? இல்லை லட்சக்கணக்கில் லாட்டரிச்சீட்டுகொண்டு வந்து தராதா தராதா என்று எண்ணுகிறார்கள், தன் செலவு இனத்திற்கும், தன் இன்பத்திற்கும் பணமும், உலகமும் இருக்கின்றன: இது இந்நாள் வாழ்வுக்கொள்கை,

இங்கேதான் தவறு கிளைவிடுகின்றது, நமது தந்தைக்கும் பாட்டனுக்கும் வாழ்க்கை என்பதுருசியுள்ள திகில். நமக்கோ திகில் போய் வெறும் திகைப்பே மிச்சம். அவர்களுக்கு வாழ்க்கை இனிப்பாய் இருந்தது. நமக்கோ வாழ்க்கை கசப்பாக இருக்கிறது. வருங்காலத்திய சந்ததியார் வாழ்வைக்கருதி அவர்கள் நியம நிஷ்டையுடன் பாவம் செய்யப் பயந்து வாழ்ந்தார்கள்' பலன்வாழ்க்கை வாழ்ந்தார்கள், நாம்? பதர்வாழ்க்கை வாழ்கின்றோம். அதாவது வருங்காலத்திற்கு நாம் விட்டுச் செல்வது பதர் வாழ்க்கை,

யாரைப் பார்த்தாலு 'போர்' அடிக்கிறது என்று கூறுகிறார்கள், காரணம் என்ன? வாழ்க்கையும் பள்ளிப்படிப்பும், கலையை அனுபவிப்பதுபோன்ற ருசியான நிகழ்ச்சி இல்லை. நாவலைப் போல சுவையான நிகழ்ச்சிக் குவியல் இல்லை, அது தண்ணீருக்குள்ளே மூழ்கிய ஒருவன் அடையும் மூச்சுமுட்டிய தவிப்புநிலை சதா நீந்தத் தெரியவேண்டும், சதா முயற்சி செய்யவேண்டும். அப்போதுதான் பள்ளிப் படிப்பு பயனுள்ள படிப்பாகும். வாழும்வாழ்க்கைவளமிக்க வாழ்வாகும்.

எங்கேபார்த்தாலும் கேட்கப்படுவது என்ன? நிலம் யாருக்கு? கம்பனி லாபம் யாருக்கு? எத்தனைவீடு ஒருவனுக்குத் தேவை? வருமானத்தில் எவ்வளவு தொகை அரசாங்கத்திற்குத் தேவை? உழைப்பைப் பற்றிக்கொண்டு வாழ்ந்த காலத்தில் லாபத்தைப்பற்றியோ லாபப் பங்கீட்டு முறையைப் பற்றியோ சமுதாய உணர்வு வரவே இல்லை இப்போது எங்கே பார்த்தாலும், எந்தத்துறையைப் பார்த்தாலும் உழைப்பைப்பற்றிய அக்கறை இல்லை, லாபத்தை எங்ஙனம் பங்கீடு செய்வது என்பதைத்தான் கூச்சலாகவும், கொள்கையாகவும் வைத்திருக்கிறார்கள்.

உடைமையாக்குவது செழிப்பாக்குவது விருத்தி செய்வது என்ற ஆர்வம் குறைந்துகொண்டும்குன்றிப் போய்க்கொண்டும் இருக்கிறது. தனியார் துறையிலும் சரி, அரசினர் துறையிலும சரி உடைமையை அணுகுவதைவிட லாபஇனத்தைப் பங்குபோடுவதில் குறியும், ஆசையும், நாட்டமும் உண்டாகிவிட்டன.

முதலாளிகள் தங்கள் தொழிலை இழக்கச் சம்மதிக்கிறார்கள் முதலை இழக்கச் சம்மதிக்கிறார்கள் தொழிலாளர்கள் தொழிலை இழக்கச்சம்மதிக்கிறார்கள். வேலையையும் இழக்கச் சம்மதிக்கிறார்கள் ஆனால் லாபப்பிரிவினையை மட்டும் இருபாலாரும் இழக்கச் சம்மதிக்கமாட்டேன். என்கிறார்கள்.

முந்நாளில்எந்தக்காரணம் கொண்டும் விளைநிலத்துக்கு நெருப்பும், அழிவும் செய்யமாட்டார்கள். காரணம் அது மனிதகுலத்தின் பசிக்குரிய மாமருந்து அழிவு உண்டாக்குவதைவிட, அழிவுக்குக் காரணமான அக்கிரமத்தைகளையவே அந்நாளைய சான்றோர்கள் விரும்புவார்கள். தேசவுடைமை, ஊர்ச்சொத்துக்கள் இவைகளை நாசம் செய்வது மனிதகுலத்திற்குச் செய்யும் நாசம், மனித குலத்திற்குச்செய்யும் தீமை என்பது பண்புடைய

(14-ம் பக்கம் பார்க்க)

# பஞ்சாமிர்தம்

### இயற்கையில் இறைவன்

விண்மீன் பூத்த வானத்தின் விநோதம்
இரவு நீங்கி பகல் தொடரும் மர்மம்,
செத்த மண்ணுக்கு உயிரூட்டும் தீம்புனல் வர்ஷம்,
கடலைக் கடக்கும் கப்பல், வானில் பறக்கும்பறவை,
பாயும் குதிரை, அசைவற்ற ரோஜா, மௌனமான
கல், காற்று, முகில், நெருப்பு, நீர்,
மங்கையின் மருட்சி, குழந்தையின் சிரிப்பு.
சாய்ந்தாடும் மரம், கனிந்திடும் பேரீஞ்சு.
இவைதான், ஓ விஸ்வாஸமுள்ளவர்களே,
அல்லாஹ்வின் சக்திக்கு சான்று.

—திரு குர் ஆன்.

### அவர் எழுதிய தமிழ்

சந்திர சூரியர் திசை மாறினாலும், சமுத்திரம் தடை மீறினாலும், மகாமேரு நிலை குலைந்தாலும் மனம் கலங்காது, விவகாரங்களில் பழுதுவராமற் பாதுகாக்கின்ற நீங்கள் இன்று நீதியில்லாத சில குறும்பர் அரசரைக் கூடி, அவ்வரசர் தூளியென்றால், நீர்த்துளியென்றும்; கரும்பு கசப்பென்றால் எட்டிக்காய் போன்ற கசப்பென்றும்; தாயைக் கொலை செய்வது தக்கதென்றால் வேதத்தின் முதற்காண்டத்தில் விதித்திருக்கிறதென்றும்; வெள்ளத்தில் கல் மிதக்குமோவென்றால் ஆற்றில் அம்மி மிதக்கக் கண்டோமென்றும்; கல்லின்மேல் நெல் முளைக்குமென்றால் கொத்தால் ஆயிரம் குலையால் ஆயிரமென்றும்; கள்ளனைப் பிடிக்கலாமோ வென்றால் பிடித்தால் பெரும் பாவமென்றும்; பொய்யாயிரம் சொல்லலாமோ ஐயாயிரம்மட்டும் சொல்லலாமென்றும், சொல்லுகின்ற துர்மந்திரிகளைப் போல நியாயம் பாராது நயிச்சிய வார்த்தைகளைச் சொன்னீர்கள்.

...வடலூர் இராமலிங்க வள்ளலார்

### அம்புலியின் துரோகம்

சந்திரனைப்பற்றியும் அதன் ஒளியைப்பற்றியும் கவிஞர்களும் காதலர்களும் பரவசமடைந்து பாடலாம். ஆனால் சந்திரன் பூமியிலுள்ளவர்களுக்கு ஒரு பெரிய துரோகம் செய்கிறதென்று, தெரியுமா?

சூரிய வெளிச்சம் சந்திரனில் விழுந்து பிரதிபலித்துதான் பூமிக்கு நிலவாக வருகிறது. இதுபோலவே பூமியிலும் சூரியவொளி பிரதிபலித்து சந்திரனுககு 'பூமியொளி'யாகப்போகிறது. ஆனால் சந்திரன் தான் வாங்கும் ஒளியில் பதினேனில் ஒரு பங்கைத்தான் எமக்குப் பிரதிபலித்து அனுப்புகிறது. நாமோ சூரியவொளியில் மூன்றில் ஒரு பங்கைச் சந்திரனுக்கு அனுப்புகிறோம். முழுப் பூரணை நிலாவைவிட இது அறுபது மடங்கு பிரகாசமானது.

அர்த்த சந்திரனின் ஒளியைவிட பூரண சந்திரனின் ஒளி ஏழு மடங்கு அதிக பிரகாசமானது. இரண்டு மடங்கல்ல. இதற்குக் காரணம் சந்திரனின் பிரதிபலிக்கும் சக்தி குறைவாயிருப்பதே. இதுவுமன்றி பூரணையில் சூரிய ஒளி நேரடியாக சந்திரனில் விழுகிறது. அர்த்த சந்திரனில் சூரிய ஒளி சாய்வாக விழுந்து சந்திர மலைகளின் நிழல் ஒளியைத் தடுக்கிறது.

### நாடித் துடிப்பு

குழந்தை பிறக்கும்போது அதன் நாடி நிமிடத்துக்கு சராசரி 140 தடவை அடித்துக்கொள்ளும்' நடுத்தர வயதில் நிமிடத்துக்கு 72 தடவை. வயது போக துடிப்பு அதிகரிக்கும். ஆண்களை விட பெண்களுக்கு நாடித் துடிப்பு அதிகம். தேகாப்பியாச விளையாட்டுகளில் ஈடுபடுகிறவர்களுக்கு நாடித் துடிப்பு குறைவானது. தேகத்தின் உஷ்ண நிலை ஒரு டிகிறி அதிகமானால் நாடித் துடிப்பு பத்து கூடுகிறது. மனதில் பரபரப்பு உண்டானாலும் துடிப்பு அதிகரிக்கும். கிளி, மைனா போன்ற சிறு பட்சிகளுக்கு நாடி ஆயிரத்துக்கு மேலாகவும் அடித்துக் கொள்ளும்.

### சுவாரஸ்யம்

இரண்டு பெண்கள் ஒரு கலியாண வீட்டில் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள். சம்பாஷணை தன்பாட்டுக்கு நடந்துகொண்டிருந்ததேயொழிய இருவருடைய புலன்களும் வந்துபோகிறவர்கள் மீதே லயித்திருந்தது. பேச்சில் ஒரு கட்டம்:

'என்ன சொன்னாய், விமலா?'

தெரியாது, எனக்கு கேட்கவில்லையே!'

தயாரிப்பு: — வழிப்போக்கன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக் கூத்துக்கு புத்துயிரளிக்கும்

# "ஆனைக் கோட்டை நாடகக்குழு"!

ஈழத்தில் 'நாட்டுக் கூத்து'க்கு ஒரு காலம் நல்ல மவுசு இருந்தது. பின் அது அருகி மீண்டும் இப்போது பெரும் சிறப்பிடத்தைப் பெற்றுவருகின்றது!

'ஆனைக்கோட்டை நாடகக்குழு' பொன்னூல் (பாலசூரன்) என்ற நாடகத்தை, சுமார் 30 ஆண்டுகளுக்குப் பின் 15 வது தடவையாக கடந்த 21-9-70 ல் மேடை ஏறியது. இந்த நாடகத்தின் முழுச் சிறப்பிற்கும் காரணம் பின் வலேந்திரிராசாவாக வந்த நடிக கலாமணி எஸ். சிலுவைராசா இன்னும் இரண்டொரு பேருமாகும். நடிக கலாமணி சிலுவைராசாவின் கம்பீரியம் நிறைந்த தோற்றமும், வசீகரமான பார்வையும், அலங்காரம் செய்து தருக்களைப் பாடும் பாவனையும், வசனங்களை நறுக்காகவும் இறுக்கமாகவும் ஒரு இராஜ பாவத்துடன் செல்கின்ற விறுத்தமும் பாராட்டக் கூடியவை. நடிப்பின் திறமை அதன் சிகரத்தையே எட்டிப் பிடித்து விட்டது. நாட்டுக் கூத்துக்களில் இப்படித் திறமையாக நடித்த ஒரு ராஜ பாத்திரத்தை இதுவரை காணவே இல்லை. இவர் ஈழத்துச் சிறுகதை நாவலாசிரியர் எஸ். அகஸ்தியர் அவர்களின் மூத்த சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது. அகஸ்தியர் கர்நாடக சங்கீதத்தின் பக்கவாத்தியமான மிருதங்கக் கலைஞர் என்பதும் குறிப்பிடவேண்டிய ஒன்று. கலையும் இலக்கியமும் சேர்ந்த குடும்பத்தினர்!

பின் பாலசூரனாக நடித்த திரு. சின்னத்துரையின் குரல் இனிமையாயிருந்தது. நடிப்பும் நன்றாக இருந்தது. முன் பாலசூரனாக வந்த செல்வன் ராஜ் நடிப்பும் நன்று. முகபாவம் அற்புதம். நடுப் பாலசூரனாக வந்த திரு, சு. பிரான்சிஸ்பிள்ளையும் சுமாராகப் பாடினார். பின் மனோரஞ்சிதமாகவந்த ஆ. ஆரோக்கியநாதர் இனிமையோடு நன்றாகப் பாடினார். பாலராஜனாக வந்த திரு. வ. நல்லதம்பியின் குரல் நன்று; நடிப்பும் நன்று செட்டி-வழிப்போக்கனாக வந்த திரு. தொ அந்தோனிப்பிள்ளை தாள லயத்துடன் பாடினார். மந்திரவாதியாக வந்த திரு. அ. சூசைமுத்து பாட்டுக்களை வசனமாகப் பாடியது ரசனை குறைந்து காணப்பட்டது. நடிப்பும் தாள லயமும் நன்று. செல்வன் சு. டுக்மணிகாந்தனும், செல்வன் பி. குமாரும் தாளத்தைக் கவனித்து இனிமையாகப் பாடி நடித்தனர். மனைவியாக நடித்த தொ. திரவியம் பெண் வேஷம் அருமை. நடிப்பும் நன்று. இன்னொரு பெண் வேஷமிட்ட திரு. ஆ. லூர்த்தையாவின் குரலும் நடிப்பும் நன்று. மந்திரியாக நடித்த திரு. லொ. இராசு, சேனைபதிகளாக நடித்த சி. அந்தோனிப்பிள்ளை, ச. தியாகராசா ஆகியோர் கொடுத்த பாத்திரத்தை உணர்ந்து நடித்துள்ளனர். பாலராசாவாக நடித்த திரு. க. சுவாம்பிள்ளை சோபிக்கவில்லை. பேய் வேஷத்தில் நன்றாயிருந்தது. ச. செபஸ்தியாம்பிள்ளை கள்வர் வேடத்தில் நன்று. தியாகராசாவும் நன்று. இடையனாக நடித்த நீ. இராசு தாளத்தைக் கவனித்திருக்கவேண்டும். செல்வி யோ. பத்மாவின் குரல் நல்ல இனிமை. நாடகத்தில் எல்லோரும் நன்று.

> நாடக விமர்சனம்:
> பொன்னூல்

அண்மையில் நிகழ்ந்த நாட்டுக் கூத்துக்களில் இது உயர்ந்து காணப்பட்டது குறிப்பிடத்தக்கது. ஆசிரியர் மு சூசைப்பிள்ளை, சி. நவஜீவா மேடை நிர்வாகிகளாகவும், திரு. த. அந்தோனிப்பிள்ளை (கொ. கி. ச. அங்கத்தவர்) ஏ. கிளமென்ற் மா. குருசுமுத்து (அழகு) நிர்வாகஸ்தர்களாகவும், திரு சு. பிரான்சிஸ்பிள்ளை, நடிக கலாமணி எஸ். சிலுவைராசா, அ. சூசைமுத்து. தா. மணிவர்ணம் ஆகியோர் இயக்குநர்களாகவும், எழுத்தாளர் எஸ். அகஸ்தியர் இசை இயக்குநராகவும் விளங்கி நாடகத்தைத் திறம்படச் செய்துவைத்தமை போற்றற்குரியது. நாட்டுக் கூத்துக்குப் புத்துயிரளித்து வரும் 'ஆனைக்கோட்டை நாடகக்குழு' வினரைப் பாராட்டவேண்டும்.

—எஸ்.

## தவிலும், மிருதங்கமும் இணைந்து லய மழை பொழிந்தது!

இசைமாரி பொழிந்து வரும் இசைவிழா மேடையிலே ஈழத்தின் தவில் வித்துவான்களின் வரிசையில் முன்னணியில் திகழ்பவர்களுள் ஒருவரான, தவ்ல் வித்வான் நாச்சிமார்கோயில் திரு. கே. கணேசனின் தவிலும், நந்தி இசைமன்ற ஸ்தாபகரும், ஆசிரியருமாகிய, மிருதங்க வித்வான் திரு. எம். என். செல்வத்துரையின் மிருதங்கமும் இணைந்து லயமழை பொழிந்தது போற்றுதற்குரியதாகும்.

திருநெல்வேலி பரமேஸ்வராச்சந்தி விநாயகர் ஆலய முன்றலில். சைவ முன்னேற்றக்கழக 2-வது ஆண்டு இசைவிழாவின் மூன்றும்நாள் நிகழ்ச்சிகளில் புதுமையான நிகழ்ச்சியாக இடம்பெற்றது. இத் தாளவாத்தியக் கச்சேரி. "இதுவரை எங்குமேஇப்படியானதொரு நிகழ்ச்சிநடைபெறவேயில்லை" என ரசிகர்கள் கதைத்துக்கொண்டார்கள்.

இசைமணி திரு. கே. சித்தி விநாயகம், அமிர்தவர்ஷணி இராகத்தில்- ஆதிதாளத்தில் அமைந்த "என்னை நீ மறவாதே" என்றகிர்த்தனையை உயரிய முறையிலே, வயலினிலே இசைத்து, சுரம் வாசித்து- தவில், மிருதங்க வித்வான்களிடம் விட்டுவிட்டார். பின்னர் சொல்லவும் வேண்டுமா?

இருவரும் மாறிமாறி வாசித்தனர். கண்டத்தில் திஸ்ரமும், திஸ்ரத்தில் கண்டமும் சேர்த்து வாசித்தமை கச்சிதமாக அமைந்திருந்தது. இரு வித்வான்களுடைய சிறப்பையும், அத்துடன் மிருதங்கமும் - தவிலும் இணைந்தால், லயவிந்நியாசத்தில் எத்தன்மை சிறப்புடைத்து என்பதையும் ஓரளவு சிந்திக்கவும் வைத்தது. இப்புதுமையான நிகழ்ச்சியை அமைத்த, இசைவிழா அமைப்பாளரைரசிகப்பெருமக்கள் பாராட்டினர். இப்படியானநிகழ்ச்சிகளை மேன்மேலும் நடாத்த கலைஞர்கள் முன்வரின் ஈழத்தின்கலையுலகில் மேலும் சிறப்புக் காணலாம்.

— தாவடியூர் சம்பந்தன்




# கதையில் புதுமை ஒன்றுமில்லை

# ஆனாலும் பரவாயில்லை!

கொழும்பில் இப்போது நாடக சீசன் என்றே சொல்லவேண்டும். எங்கு பார்த்தாலும் நாடக மன்றங்கள். ஒவ்வொரு போயாவும் நாடகங்கள். ஆனால் 29-9-70 அன்று இரண்டு நாடகங்கள் மேடை ஏறின. ஒன்று காதல் ஜாக்கிரதை' மற்றது 'மாறிய நெஞ்சம்.'

பொரளை வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடந்த 'மாறிய நெஞ்சம்' நாடகத்தைப் பார்க்க நானும்போயிருந்தேன். மண்டபம் ஒரு அளவுக்கு நிரம்பியிருந்ததை பார்த்தபோது தயாரிப்பாளர் தப்பியிருப்பார் என்று எண்ணத் தோன்றியது

கதையில் புதுமை ஒன்றும் இல்லை. சாகத்துடிக்கும், விரக்தியுற்ற பார்வதியை வாழவைப்பதற்காக, கட்டிப் பிடிப்பது, காதல்போல் நடிப்பதும் என்னவோ போலிருந்தது. பின்னர் அதையெல்லாம் 'அவள் மனம் மாறி வாழ்வதற்காகவே செய்தேன்' என்று கதாநாயகன் சொல்லுவது புதுமைக்குப் பதிலாக பெண்மைக்குக் களங்கம் கற்பிப்பதுபோல இருந்தது. ஒரு பெண்ணைத்தொட டாக்டருக்கு உரிமை இருந்தாலும், கணவனாகநடிப்பதை எந்தப் பெண்ணும் விரும்பமாட்டாள் அல்லவா? பார்வதியின் கணவன் போலவும் பார்வதி போலவும் எத்தனையோ பேர் வாழ்கிறார்கள். ஆனால் அவர்களின் பாத்திரப் படைப்பு அவ்வளவாக மக்களை கவரும் முறையில் சிருஷ்டிக்கக்கதாசிரியர் தவறிவிட்டார். ராதாவின் சந்தேகத்தை தெளியவைத்து அவளின் காதலனையே கணவனாகவும் ஆக்கியிருந்தால் ராதாவின் நெஞ்சமும் மாறி இருக்குமல்லவா.

கதை வசனம் எழுதிய எஸ். ஏ. கீர்த்தி திறமையாக நடித்தார். அவர் நடிப்பு சுமாராக இருந்தது போல அவரின் வசனம் அமையவில்லை. குமாரி லீலா ரஞ்சனியின் குரல்மேடைக்கு உகந்ததாக இல்லை. ஆனால் அவரின் நடிப்பில் துடிப்பிருக்கிறது. குமாரி மல்லிகா விரக்தியுற்ற பெண்ணாக மாற முனைந்தார் என்றாலும் மக்களை ஒருவாறு திருப்திப் படுத்தினர்.

பாடல்களைப் பதிவுசெய்து பின்னணியாக போட்டார்கள். பாடியவர்களும் நன்றாகப் பாடியிருந்தார்கள். நடித்தவர்களும் நன்றாக நெருங்கி, ஆடைமேலே வந்ததும் தெரியாமல் நடித்தார்கள். என்றாலும் ஏனோ... அந்தக் காட்சிகள் அவ்வளவாக எடுபடவில்லை. பின்னணிக்கும் மேடைக்கும் என்ன பகையோ?

அழகான வீட்டு 'செட்' ஒன்று போட்டு, அதிலே விரைவாக காட்சிகளை நடத்தினார்கள். காட்சிகள் தாமதமின்றி வேகமாகநடந்தது பாராட்டக்கூடியதாக இருந்தது. ஆனால் எல்லாச் சம்பவங்களும் ஒரே வீட்டில் நடப்பது அவ்வளவுபொருத்தமாக அமையவில்லை.

ஒலி, ஒளி நன்று. சந்திரனை ஒரு காட்சியில் காட்டினார்கள். அது ஓடாமல் ஆடாமல் செயற்கையென்பதை காட்டிவிட்டது.

இயக்குநரான கே சி ஆனந்தனுக்கு இது வெற்றியென்று சொல்லமுடியாது. ஆனால் தோல்வியுமில்லை. இன்னும் பாடுபட்டு பயிற்சி அளிக்க முடிந்தால் நிச்சயம் வெற்றி அடைவார்.

நகைச் சுவை அளித்த சாமுவேல் மக்களின்பாராட்டைப் பெற்றார், மொத்த நாடகம் பார்க்கக்கூடியதாக இருந்தது.

தலைமை வகிக்க இணங்கிய சமாதான நீதவான் திரு. ஏ. சங்கதாச சில்வா அவர்கள் மனம் மாறி மக்களை அனுப்பிவைத்ததற்கு இளம் கலைஞர் முன்னேற்ற மன்றத்தார் பெரிதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்கள்.

— [illegible]

## கீரியும் பாம்பும் எலியும் ஒன்றாக விளங்கிய நவாலி

சென்ற வாரமலரில் 'நவாலி'யைப்பற்றி வெளிவந்த கட்டுரையை வாசித்துவிட்டு, 'மக்கள் கவிமணி' வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம் அவர்கள் பின்வரும் குறிப்புகளை அனுப்பியுள்ளார்:-

### சுவாமிநாதர்

இவர் இலக்கண இலக்கியங்களில் மாத்திரமல்ல சோதிட சாஸ்திரத்திலும் வல்லவர். இவர் வட்டுக்கோட்டை கிழக்கிலிருந்த வித்துவான் க. முத்துக்குமாரருக்குப் புத்திரர். வடக்கு அராலியில் செட்டிகள் பகுதியில் சம்பந்தம்பண்ணினவர். கீர்த்திபெற்ற சண்முகச்சட்டம்பியாருக்குத் தந்தையார். இருபாலைசேனாதிராய முதலியார் இவரிடம் இராமாயணப் பொருள் கேட்டவர். கவி பாடுவதில் திறமை யுடையவராயிருந்தவர்.

நவாலியில் கலையோடை கண்ணகையம்மாள் கோயிலில் கந்தப்புராணத்துக்கு உரைகூறப்போயிருந்த போது அங்குள்ள பற்றைக்குச் சமீபத்தில் கீரியும் பாம்பும் எலியும் விளையாடிக் கொண்டிருந்ததைக் கண்டு

மலியாணவ மலிமாய்
கையை நீக்கி
மலர்ப்பதத்தைத்
துளியாகர வொடு
கோத்திரஞ் செய்யச்
சுகந்தருவாய்
எலியஉடர வொடு
கீரியொன் றாகி
இனிதிசைந்து
கலியாண மாயுறையுங்
கலையோடை யற்
கண்ணகையே!

(யாழ்ப்பாணவைபவ கௌமுதி)

### சுவாமிகளைத் திருடல்

சென்றவாரம் நவாலிக் குறிச்சியிலே குருக்கள்மடம் என்ற வழக்கப்பேர் பெற்ற அட்டகிரி கந்தசுவாமி கோவிற்றிருவுருக்கள் இரண்டைக் கள்வர் திருடிப் போனார்கள். ஆறுமுக சுவாமியாரைத் தனிவிட்டுத் தெய்வானை அம்மன், வள்ளியம்மன் என்னும் இருவர்களையும் கொடு போயினர் துணிந்த கள்வர்!

(உதயதாரகை, 16-10 1890)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியாலை

எங்கள் கிராமம் - 3

# தடுக்கி விழுந்த இடமெல்லாம் அறிவைத் தரும் சமூக நிலையங்கள்

அதிகாலையில் மூச்சு இரைக்க இரைக்க இழுத்துக்கொண்டுவரும் மெயில் புகையிரதம் யாழ். புகையிரத நிலையத்தை அடைவதற்கு நான்கைந்து நிமிடங்களுக்குமுன்னர் புங்கன் குளம் புகையிரத நிலையத்தில் சில நிமிடங்கள் 'அப்பாடா என்று ஓய்வெடுக்கிறது' தூக்கக் கலக்கத்தை நீங்கள் முறியடித்துத் தடுமாறிக்கொண்டு, இறங்கினுல் நீங்கள் மிதிப்பது 'சுத்தமான' அரியாலை மண்! பதிலாகத் தூக்கக் கலக்கம் உங்களை முறியடித்து நீங்கள் சிலநிமிடங்கள்'நே' யென்று இருந்துவிட்டால் மெயில் வண்டி யாழ் — புகையிரத நிலையத்தை அடைந்துவிடும். ஆனுல் பயப்படத் தேவையில்லை. ஐந்துசத வண்டிச் சத்தத்தில் உங்களை அரியாலையின் மேற்கெல்லைப் புறமான கச்சேரியடியில் இறக்கிவிட இ.போ. ச.பஸ்கள் தாராளமாக உண்டு.



அரியாலை சனசமூக நிலைய விளையாட்டுத் திடல்

### 'சுத்தமான மண்!'

ஆரம்பத்தில் நல்லெண்ணெய் விளம்பரம் போலச் 'சுத்தமான அரியாலை மண்' என்று நான் குறிப்பிட்டதற்குக்காரணம் நிச்சயமாக உண்டு. சில ஊர்களில் கறுப்புமண், செம்மண், இன்னும் பலவிதமான மணல் வகைகள் செறிந்து காணப்படுவதுண்டு. ஆனுல் அரியாலையில் அந்தமாதிரி நிறபேதங்களைககாணமுடியாது. குறிப்பிடத்தக்க விசேஷமில்லாத சாதாரண மணலே எங்கும் காணப்படுகிறது. இருந்தாலும் விவசாயிகளை வஞ்சிக்கும் மணலல்ல இது! அரியாலையில் கிழக்குப் பகுதிகளில் மாரிகாலத்தில் 'சோ' வென்றுபசுமையாகத்தோன்றும் செழித்தவயல்கள் தான் நாவற்குழி கழிந்து, பஸ்ஸில் யாழ்நகரின் நுழைவாயிலாக விளங்கும் அரியாலையை ஊடறுக்கும் கண்டிவீதிவழியே பிரயாணம் செய்யும் உங்களுக்கு 'வணக்கம், வருக!' கூறுகின்றன.

அரியாலை பரந்த இடம். கிழக்கு — மேற்கு மாநகர சபையில் இக் கிராமத்தைப் பிரதிநிதிப்படுத்துகிருர்கள்.

இருந்தாலும் அரியாலை விவசாயத்தில் தன்னிறைவு பெற்றுவிட்டதாகச் சொன்னுல் அது பொய் — அல்லது புளுகு. பெரும்பாலானேர் விவசாயத்தில் ஈடுபாட்டைத் தளர்த்திப் பிற முயற்சிகளுக்கு முதலிடம் கொடுப்பதே காரணம் பெரும்பாலான வயல் நிலங்கள் தரிசு நிலங்களாகக் கிடப்பதைப் பஸ்ஸில் பிரயாணம் செய்வோர் காணலாம்.


முன்னர் பெருமாளை வணங்குவோர் எங்களூரில் வசித்த காரணத்தினுலேயே 'அரியாலை (அரி- ) எனும் பெயர் வந்ததாகக் கூறுவோருமுளர்.

### சமூக நிலையங்கள்

இங்கு நிறைய சனசமூக நிலையங்களும், வாசிகசாலைகளும்' இருக்கின்றன. 'யாழ்ப்பாணத்தில் தடுக்கி விழுந்தால் தூக்கிவிடுபவர் ஒரு எழுத்தாளராயிருப்பார்!' என்று கல்கி கூறியதுபோல அரியாலையில் தடுக்கிவிழுமிடமெல்லாம் பொது அறிவை விருத்தி செய்யும் நூல்நிலையங்களும், விளையாட்டுக் கலைத்துறைகளில் முன்னேறும் சனசமூக நிலையங்களும் காணப்படுகின்றன. நாடகத்துறையிலும் அரியாலை கணிசமான அளவு முன்னேறியுள்ளதை நான் குறிப்பிடாதுவிட முடியுமா? அகில இலங்கை ரீதியான கம்பன் கலைக்கழக முத்தமிழ் மன்றப் பரிசில்களைப் பெற்ற பெருமை அரியாலை நாடக மன்றத்தாரின் 'பாதுகை'க்கு உண்டு.

### இசை மழை!

நாடகத்துறையில் மட்டுமின்றி இசைத்துறையிலும் அரியாலையின் இடம் சிறப்பானதே. பல இசைஞர்கள் தோன்றி மறைந்திருக்கிருர்கள். எல்லோரையும் எழுதினுல் இது 'சரமகவி'யாக மாறுமென்ற பயமுண்டு. இன்று இலங்கை வானெலி முதல் கலையரங்கங்கள் ஈருக இசைமழைபொழியும், அரியாலை- சகோதரர்கள்' எனப்படும் திரு. பாலசிங்கம் திரு. பரமசிவம் ஆகியோரும் அரியாலை மண்ணில் ஜனித்தவர்களே!



இலங்கைச் சட்டநிரூபண சபையில் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப் படுத்திய திரு. க. கனகரத்தினம்

யாலை சனசமூகநிலைய உதைபந்தாட்டக்குழு பல வருடங்களில் யாழ்ப்பாணத்தில் முன்னின்றிருக்கிறது. மேலும் இந்தோ— சிலோன் விளங்கியிருக்கிறது. தவிர ஆசிய டேபிள்டெனிஸ் போட்டியில் பங்குபற்றிய இலங்கை வீரர் குழுவின் மனேஜராக விளங்கிய திரு.

# மந்திரி, அறிஞர்கள் 'கிங்மேக்கர்'களை தந்த ஊர் இந்த ஊர்!

### விளையாட்டுத்துறை!

இரண்டு பெரிய விளையாட்டு மைதானங்களைக் கொண்டிருக்கும் எங்கள் கிராமம் விளையாட்டுத் துறையில் சோடைபோக நியாயமில்லை. சனசமூக நிலையங்களின் வடமாகாணச் சமாஜ விழாப் போட்டிகளில் மிகப் பல தடவைகள் [illegible] பாணத்தில் சிறந்த நிலையமாகக் கணிக்கப்படும். அரி





கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

விளையாட்டுப் போட்டியில் உயரம் பாய்ச்சற் போட்டிக்கான முதலிடத்தை அரியாலைக் கிராமத்தைச் சேர்ந்த செல்வி பிரபாவதி சிவகுரு சுவீகரித்தமை அன்று அரியாலை விளையாட்டுத் துறையில் வகித்த சிறப்பிடத்தைக்காட்டாமல்வேறென்ன செய்கிறது? அத்துடன் 1948-ம் ஆண்டு தொடக்கம் 1958-ம் ஆண்டுவரை யாழ் மெய்வல்லுநர் போட்டிகளில் யாழ்நகர சம்பியனுக அரியாலை ஐக்கிய கழகம் த, ஆலாலசுந்தரம் மற்றும் பிறதுறைகளில் சிறப்பெய்திய திரு. பி. பஞ்சலிங்கம், ரி. துரைச்சாமி, வி, மகாதேவா, கே. மகாலிங்கம். கே, சண்முகலிங்கம், எஸ். சத்தியமூர்த்தி ஆகியோரும் இங்குதான் பிறந்தவர்கள்!

### ஆலயங்கள்

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்' என்று கருதுபவர்கள் அரியாலையின் எந்த மூலையிலும் தாராளமாகக் குடியிருக்க லாம். எங்கும் விநாய அம்மன், வீரபத்தி கோயில்கள்! இவற்றுள் திரப் பிரசித்திபெற்ற யம் அரியாலை சித்திவி கர் ஆலயம்!

இந்த ஆலயத்திலு சித்திவிநாயக விக்கிர மிகவும் புராதனமா கும். இவ்விக்கிரகம் இ யாவிலுள்ள தொண் நாட்டிலிருந்துயாழ்பாடி காலத்தில் அவரின் லமைச்சர் சேதிராய வேண்டுகோளின்படி க கணேசையர் எனும் பி ஞத்தமரால் கொ வரப்பட்ட இ வேண்டுமென்று 'யாழ் ணச் சரித்திரத்தில்' (பக் ஸ்ரீ ஆ. முத்துத்தம் பிள்ளை அவர்கள் குறிப் டுள்ளார்கள்.

### கர்ணபரம்பரைக் கதை

இவ்வாலயத்தைப் ப சுவையானகர்ணபரம்ப கதையுமொன்றுண்டு. வாலயம் அமைந்து இடத்தில் முன்னர் மேய்த்த சிறுவர்கள் யாடும்போது ஒரு விநாயக விக்கிரகத் கண்டெடுத்தார்கள் என் அதை வைத்து அவ சுவாமிவிளையாட்டு வி டுவதைக்க பெ கள் அவ்வ த்தில் லயத்தை அமைத்தா என்பதும்கதை, இவ்வா 1018-ம் ஆண்டில் பெரியார் ஸ்ரீ விஸ்வந காசிப்பிள்ளையவர் க புனருத்தரணம் செய் பட்டது. இன்றும் தால் அழியாது காட்சி கும் இதன் பாரிய கல் வாயில் அன்று லிருந்த உன்னத நில சான்று பகன்றுகொண் கிறது! இப்பொழுது வாலயத்துக்கான இ கோபுரமென்று 'வி ன்'று வளர்ந்துகொண் கிறது! இக்கிராமத் கிழக்குப் பகுதியில் சுவாமிகள் சிறிதுகால சிரமமமைத்துத் தவமி யும் உள்ளார்!

இவற்றுடன் பிரப் குளம் மகாமாரியம் கோவிலும், கொட்டுக்கி றுப்பிள்ளையார் கோ எழிலான சூழலில் தவை. வயல்வெளி ஒருகுலதெய்வமாக வி கிறது கொட்டுக்கிண பிள்ளையார்கோயில்.

### புதுமை

கோயில்களில் ஒரு பு மைச் செய்திருப்பவர் ஞர் வே. ஐயாத்துரை கள். எங்குமில்லாத மையாகத் தன் கவி பரிசுபெறச்செய்த சர தேவிக்கு ஆலயம் அ ருக்கிருர் இவர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அரசியல்துறை

அரியாலையிற் பிறந்து அரசியல், மதமலர்ச்சித் துறையில் சேவையாற்றியவர்களையிட்டு எழுதுவதானல் எனக்கு அதிகம்இடம்வேண்டும். ஆனுல்ஆசிரியரதுஆணை என்கைகளைத் தடுக்கிறது.


சென்றமாதம் ரயிலில் பிரயாணம் செய்துகொண்டிருந்தேன். வயதானவர் ஒருவர் என்முன்னமர்ந்திருந்தார். கொட்டாவி விட்டார். 'ஏதாவது பேசவேண்டும்!' என்பதற்கு ரயில் பிரயாணிகளின் சமிக்ஞை இது. 'நீர் எவ்விடம்'' என்று கேட்டார்.

'அரியாலை!' என்றேன்.

சிலகணங்கள் புருவத்தைச் சுளித்தார். யோசிக்கிறார். பிறகு. 'அது...முந்தித்தபால் மந்திரியாயிருந்த சிற்றம்பலத்தாற்றை ஊரெல்லோ... அவருடைய சகோதரர் பொன்னம்பலம்-முந்தியாழ்ப்பாண மேயராயிருந்தவர்-அவர்ஒரு 'கிங்மேக்கர்!' ... தெரியுமோ?'' என்று கேட்டார்.

மாவட்டநீதிபதி, மாஜிஸ்ரேட் பதவிகளை வகித்ததுடன் யாழ். இந்துக்கல்லூரியினதும், அதனது கிளைக்கல்லூரிகளாகவிளங்கியவட்டுக் கோட்டை, உரும்பராய், கொக்குவில், சாவகச்சேரி இந்துக்கல்லூரிகளின் மனேஜராகவும் கடமையாற்றினர்.

பசுபதிச்செட்டியார், 'அப்புக்காத்து நாகலிங்கம்' ஆகியோருடன் சேர்ந்து இந்துக் கல்லூரியைக்கட்டிமுடிப்பதில் திரு. விஸ்வநாதர் காசிப்பிள்ளையவர்களின் உழைப்பு மகத்தானது. கல்வி-சைவசமய மறுமலர்ச்சியில் மிக்க அக்கறை காட்டிய இவர் அரியாலையில் 1913-ம் ஆண்டு ஸ்ரீபார்வதி வித்தியாசாலையைத்தோற்றுவித்தார். ஊர்த்தகராறுகள் சகலவும் இவருடையசொல்லிலேயேதீர்ந்துபோகும்நிலை அன்று யாழ்ப்பாண மடங்கிலும் இருந்தது. இவர் 1936-ம் ஆண்டு காலமாகிய போது யாழ்ப்பாணச்சங்கத் தலைவராகவிருந்த வண. டாக்டர் ஐசாக் தம்பையா சொன்னது:



அரியாலை மத்திய விளையாட்டு மைதானம்

நான் ''ஓம்'' என்றபாவனையில் தலையசைத்தேன்.

திரு. ஸி. பொன்னம்பலம் அவர்கள் 'யாழ். மேயர்களை ஆக்குபவர்' என்று அழைக்கப்பட்டதையே அவர் 'கிங்-மேக்கர்' என்றுகுறிப்பிட்டிருக்கவேண்டும்.

''30 தொடக்கம் 40 ஆண்டுகள் வரை யாழ்ப்பாணத்தில் திரு. காசிப்பிள்ளை முடிசூடாமன்னராகத் திகழ்ந்தமைக்குக் காரணம் அவருடைய அபாரத்திறமைமட்டுமல்ல; சேவையுணர்ச்சியும் நேர்மையுமே!''

## த. இந்திரலிங்கம்

இவ்வாறாக அரசியல் துறையில் எங்கள் கிராமத்தின் இடம் வெளித்தெரிய முன் கல்வி - மதமலர்ச்சியிலும் சிறக்கவழிசெய்த திரு. விஸ்வநாதர் காசிப்பிள்ளையையிட்டுக் குறிப்பிடுவது மிகஅவசியம்.

வழக்கறிஞரான திரு. விஸ்வநாதர் காசிப்பிள்ளை

அதிகாரி ஏ. நாகநாதன் கூறியது:

''நாக்கையசைத்து நாட்டையசைத்தவர்!'' ''இலங்கைத் தமிழர்களின்

பொதுவாழ்க்கையில்இராமநாதன் குடும்பத்திற்கு அடுத்ததாகக் காசிப்பிள்ளை குடும்பம் விளங்கியது!'' என்ற கூற்றையிட்டு இக்



திரு. ஏ. கதிரவேற்பிள்ளை

கிராமமக்கள் பெருமையடையாதிருக்க முடியாது!

திரு. விஸ்வநாதர் காசிப்பிள்ளையின் சகோதரர் திரு. ஆறுமுகத்தின் புத்திரர்களான திரு. கதிரவேலு, கனகரத்தினம் ஆகியோரும் சிறந்து விளங்கியவர்கள். திரு. ஏ கதிரவேலுமாவட்ட, உயர்நீதிபதி பதவிகளிலும், தலஸ்தாபன சபைகளின் முன்னேடியாக 1917ல்ஸ்தாபிக்கப்பட்ட உள்ளூர்ச்சபைகளில் அங்கத்தவர் பதவியிலும் கடமையாற்றியவர். சைவமத மறுமலர்ச்சி இதழான 'இந்துசாதனத்தின்' முதலாவது ஆசிரியர். 'இலங்கைத் தேசாபிமானி' (Ceylon Patriot)எனும் ஆங்கிலப் பத்திரிகையை விலைக்கு வாங்கி 1908-ம் ஆண்டு 'படித்த இலங்கையர்' தொகுதியில் திரு. எச். எம். பெர்னண்டோ எனும் சிங்களவருக் கெதிராகப் போட்டியிட்ட திரு. சேர். பொன்னம்பலம் இராமநாதனுக்காகப் பிரச்சாரம்செய்த துணிச்சல்காரர். இவருடைய தேசிய உணர்ச்சி காரணமாகவே இக்கிராமத்தில் 1919-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சுதேசியதினவிழா வருடா வருடம் கொண்டாடப்பட்டுக் கடந்த வருடம் பொன்விழாவை முடித்தது. இவர் ஹரிசனங்களின் முன்னேற்றத்துக்காக ஒரு பாடசாலை கட்டி வித்தியாசபையிடம் ஒப்படைத்தார்.

திரு. ஏ. கனகரத்தினம் அவர்களின் சேவையும் சாதாரணமானதல்ல; இவரே கனகரத்தினம் மத்தியமகாவித்தியாலயத்தைக் கட்டுவித்தவர்.

### சட்டநிருபண சபையில்...

இலங்கையில் தேசிய உணர்வையூட்டிய தலைவர்களிலொருவராகக் கருதப்படும் திரு. க. கனகரத்தினம் அவர்கள், இலங்கைச் சட்டநிருபணசபையில் (Legistative Council of Ceylon) வடமாகாணமக்களைப் பிரதிநிதித்துவப் படுத்திய பெருமையைப் பெற்றவராவர்!

மேலும் திரு. விஸ்வநாதர் காசிப்பிள்ளையின் மகனான திரு. ஸி. அருளம்பலம் கூட்டுறவு இயக்கத் துறையில் பெருந்தொண்டாற்றி, இலக்கிய - மத மறுமலர்ச்சியில் ஈடுபட்டுச் 'சைவப்பழம்' எனப்பட்டம் பெற்றவர். இவரது புத்திரரே இன்று சமசமாஜப் பிரமுகராக விளங்கும் திரு. அ. விஸ்வநாதன் அவர்களாவர். இதனுற்றுன் யாழ். மாநகரசபைக்கு முதன்முதலாக ஒரு சமசமாஜ உறுப்பினரை (திரு. குகதாசன்) அனுப்பிய பெருமையையும் இக்கிராமம் சுவீகரித்துள்ளதுபோலும்!

மேலும் திரு. ஸி. கனகரத்தினம் அவர்களின் மக்களான திரு. சி. சிற்றம்பலம், திரு. பொன்னம்பலம் ஆகியோரும் அரசியல்துறையில் செல்வாக்குடன் திகழ்ந்துள்ளனர். இதுவரை யாழ். நகருக்கு மூன்று மேயர்களை அளித்த இக்கிராம மக்கள் இவர்களுள் திரு. ஸி. பொன்னம்பலம் பல தடவைகள் நகரபிதாவாக இருந்துள்ளார் என்று பெருமிதமுறுவதில் நியாயமுண்டு.

### எல்லைகள்

இவ்வாறு சிறந்த அரசியல் பின்னணியுடன் திகழும் எங்கள் ஊருக்கு இன்னொரு அருமையான சிறப்புமுண்டு.

'ஈழநாடு' பரிசு பெற்ற காவியம்

# தித்திக்கும் தேன் நிலவே!

— கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம் —

## 4. சாக்கடையிலிருந்து சந்தனத்துக்கு!

கடந்த காலத் தென்வாழ்வை
கருதி மனத்தாற் பார்க்கையிலே,
நடந்த தெதுவும் இன்பத்தை
நல்க வில்லை! முள்ளாகிக்
கிடந்தென் நெஞ்சைப் புண்ணுகக்
கிண்டிக் கிளறிக் கொல்கிறவே!
குடங்கி நெஞ்சுள் கிடக்கின்ற
கோயில் நினைவு கள்மட்டும்,

தேனைச் சொரியும் அனுபவமாய்
சிந்தை குளிரச் செய்கிறவே!
நானந் நாளிவ் வனுபவங்கள்
நறுமை உணர்ந்தும் போற்றவில்லை!
கூனல் ஆசைக் குலமென்னைக்
குருட ணுக்கி வைத்தனவே!
ஈனத் தன்னலக் குட்டைகளில்
இறங்கி ஆடிக் கெட்டேனே!

தெள்ளத் தெளிந்த அறிவாலே
தெய்வச் சாயல ஒங்கலனூர்
பள்ளிச் சிறுவர் மனங்களிலே
பட்டொளி வீசி நிற்கின்றுர்!
கொள்ளும் பொருளின் விலையாலே
கூடும் குறையும் பைமானம்!
உள்ளம் போற்றும் பொருளாலே
உயர்வு தாழ்வு மனிதர்க்குள்!

இச்சை மிருகக் காடாகி
இயங்கி நலிந்த என்வாழ்வை
நச்சுத் தனங்கொன் றுய்வித்து
நல்ல கதிக்கு வழிசெய்தார்!
கச்சை கட்டி யிருந்தாலும்
கடவுள் நினைவில் மூழ்கிட்டால்
எச்சம் இன்றி நிறைவான
இறைவன் இன்பம் எய்திடலாம்!

இறைவன் பற்றைத் தவிர்த்தெந்த
இச்சை யுந்தீங் கானதுவே!
பெறஇச் சைப்பட் டொருபிள்ளை
பெற்றுர் பட்ட தெவ்வளவு!
''துறவு! துறவு!'' என்றோடித்
தூயன் பாதந் தொழுவோரே
நிறைவு தழுவி நீளின்ப
நீச்ச லடித்து வாழ்ந்திடுவர்!

இனியென் வேலை ஆன்மாவிற்
கின்பந் தேடித் திரிவதுவே!
தனிமை யாக்கி இதயத்தை
சாக டித்தே ஆசைகளை
பனிவெண் சடையான் திருவடியிற்
படைத்துக் கோயிற் றெண்டுகளின்
இனிய அனுப வங்களிலே
ஈடு பட்டு மகிழ்ந்திடுவேன்!

குறுக்கே வருகிற பெண்ணுசை
கொன்று வெல்வேன் திருவருளால்!
இறுக்கங் கொண்ட மனதோடே
என்து கடமை பற்றின்றி
வெறுப்பு மின்றிச் செய்திடுவேன்!
விடிவென் னுயிர்க்குத் தேடுவேன்!
பொறுக்கி விற்றென் உடைமையெலாம்
போக்கு வேன்பெற் றூர்கடனை!

(வளரும்)

நல்லூர்த்தொகுதியில்விளங்கும் இக்கிராமத்தின் கிழக்கெல்லையாகச் சாவகச்சேரித் தொகுதியும், வடக்கெல்லையாகக் கோப்பாய்த்தொகுதியும், தென்மேற்கு எல்லையாக யாழ்ப்பாணத் தொகுதியும் விளங்குகின்றன. உங்கள் ஊருக்கு இச்சிறப்பு இருக்கிறதா?

ஓர் உப தபால் நிலையம், பிரசவவிடுதி, சந்தைகள், உபமின்நிலையம், குளங்கள் (கோடையில் இங்கு மணல் தான் ஓடும்!) ஆகியவற்றுடன் மிகையான போக்குவரத்துவசதிகளும் சேர அமைதியாகத் துயில்கிறது எங்கள் கிராமம்!

சந்தேகமிருந்தால் வந்து பாருங்களேன்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் கவிநயம்—5

# ஈயும் சிறுவனும்

'சுத்தம் சுகம் தரும்' என்பது ஒரு பழமொழி. தம்பி தங்கைகளாகிய நீங்கள் ஒவ்வொருவரும் சுத்தமாக இருத்தல்வேண்டும். காலையில் எழுந்தவுடன் பல் துலக்கிமுகங்கழுவுதல்வேண்டும். பின் ஸ்நானம்செய்து தூய உடை அணிந்து பாடசாலைக்குச் செல்லுதல் வேண்டும். உங்கள் புத்தகங்களை அழுக்குப்படியாமல் வைத்திருத்தல் வேண்டும். அழுக்கான உடையணிந்து அசுத்தமாக இருக்கும் பையனை யாரும் விரும்ப மாட்டார். அவனைப் படிப்பிக்கும் ஆசிரியர் விரும்ப மாட்டார். அவனோடு கூடி விளையாடக்கூட ஒருவரும் விரும்பமாட்டார்.

நல்லூர் என்னும் ஊரிலே செல்லத்தம்பி என்னும் சிறுவன் இருந்தான். அவன் தாய் தந்தையரின் சொல்லைக்கேட்கமாட்டான் பள்ளிக்கூடத்துக்குப் போக மாட்டான். எந்த உணவைக் கொடுத்தாலும் சாப்பிட மாட்டான். செல்லப்பிள்ளை அவன். அவன் ஒருநாளும் குளிப்பதில்லை. நல்ல உடைகளை அணிந்துவிட்டாலும் உடனே அழுக்காக்கிவிடுவது அவன் வேலை. தலையைச் சீராக வாருவதில்லை. நகத்தை ஒழுங்காக வெட்டுவதில்லை.

இந்தச் செல்லத்தம்பியை யார்தான் விரும்புவர்? அவனோடு விளையாட யாரும் விரும்பவில்லை. அவனைத் தூரத்தே கண்டாலும் எல்லோரும் ஓடி ஒளித்துக் கொண்டனர். பாவம் செல்லத்தம்பி. அவன் ஒருநாள் தனக்கு நேர்ந்த அவமானத்தைச் சொல்கிறான் கேளுங்கள்:

பச்சைக் கிளியை வா
என்றேன்
பக்கம் வரவும்
மறுத்தது வே
ஆட்டுக் குட்டியை வா
என்றேன்
அதுவும் துள்ளி மறைந்
தது வே
கன்றுக்குட்டியைத்
தொடச்சென்றேன்
கட்டை அறுத்து
ஓடியதே.

சொல்லிவிட்டு ஓடிவிட்டது.

பச்சைக்கிளியும் பசுக்கன்றும் ஆட்டுக்குட்டியும் மறுத்துவிட்டன. ஆனால் அவனோடு விளையாட ஒரு பிராணி சம்மதித்தது. அது ஓர் ஈ. அவனுக்கு வெகு புளுகம். அவன் மகிழ்ச்சியோடு ஈயைக் கேட்கிறான்.

ஈயே நீதான் என்னுடனே
இணைந்தே ஆட வந்தது
மேன்?

ஈ சொன்ன பதில் அவனைத் திடுக்கிட வைக்கிறது. அவன் மகிழ்ச்சி எல்லாம் எங்கேயோ பறந்துவிட்டது.


ஈ சொல்லிய பதிலை நீங்களும் கேளுங்கள்:

—இரசிகமணி கனக செந்திநாதன்—

அவனோடு ஒத்த வயதுடைய பிள்ளைகள் விளையாட மறுத்துவிட்டார்கள். அவன் பச்சைக்கிளியை விளையாட வரும்படி கேட்டான். அதுவும் மறுத்துவிட்டது. ஆட்டுக் குட்டியைக் கேட்டான். அதுவும் மாட்டேன் எனத் தலையாட்டியது. பசுக்கன்றைப் பரிதாபத்தோடு கேட்டான்; தொடச்சென்றான். அது போ போ என்று

அசுத்தம் எங்கே இருக்
கிறதோ
அங்கே நானும்
இருப்பேனே.
அசுத்தமான நண்பன்
உனை
அடியேன் விரும்ப
மாட்டேனோ?
இருவரும் கூடி எப்பொ
ழுதும்
இனிதாய் ஆடி மகிழ்
வோமே

ஈ சொல்லிய பதில் செல்லத்தம்பியைச் சிந்திக்க வைத்தது. அவன் ஈயைப் பார்த்துச் சொல்கிறான். அசுத்தமாக நான் இருப்பதனுல் ஆனந்தமான என் தோழர்கள் என்னை விரும்பவில்லை. நோயும் நொடியும் பெருக்குகின்ற நீ என்னை விரும்புகின்றாய். மெத்த நல்லது




நோயும் நொடியும்
பெருக்குகிற
பேயே எனைவிட்டோடி
விடு!
நாளும் நாளும் குளிப்
பேனே
நன்றாய்த் துவைத்தே
உடுப்பேனே.
ஆடும் கிளியும் இனிமேலே
ஆடி மகிழ்ந்திடும்
என்னுடனே!

'கந்தையானாலும் கசக்கிக் கட்டு. கூழானாலும் குளித்துக் குடி' எனப் பச்சையாகச் சொல்லாமல் சிறு நாடகம்போல - சிறுவர் பாடி நடிப்பதற்கேற்ப இப்பாடல் அருமையாக அமைந்திருக்கிறது. நல்ல குறிக்கோளை வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோலக் கவிஞர் குழந்தைகளின் மனதில் ஆழுத்தமாகப் பதியவைக்கிறார். இந்த நல்ல சிறுவர் பாடலை இயற்றியவர் கவிஞர் கனக சபை. அவருடைய சிறுவர் இலக்கிய நூல்- நாளைய உலகம். காரைக்குடி அழகுப் பதிப்பகத்தார் அழகிய அட்டைப் படத்துடன் வெளியிட்டிருக்கிறார்கள். பாடலை ஒரு சேர மீண்டும் படியுங்கள். ஈக்கு ஒரு சிறுவனும் செல்லத்தம்பிக்கு ஒரு சிறுவனுமாக மாறிமாறிப் படியுங்கள். பாடல் அப்போது தான் இரசிக்கும்.

செல்லத்தம்பிகேட்கிறான்.

பச்சைக் கிளியை வாவென்
றேன்
பக்கம் வரவும் மறுத்ததுவே!

ஆட்டுக் குட்டியை வா
என்றேன்
அதுவும் துள்ளி மறைந்
ததுவே
கன்றுக் குட்டியைத் தொடச்
சென்றேன்
கட்டை அறுத்தே ஓடியதே
இப்படி இந்தத் தோழ
ரெலாம்
என்னை வெறுத்தே
ஓடுகையில்
ஈயே நீதான் என்னுடனே
இணைந்தே ஆடவந்தது
மேன்?

ஈ பதில் சொல்கிறது!

அசுத்தம் எங்கே இருக்கி
றதோ
அங்கே நானும் இருப்பேனே,
அசுத்தமான நண்பன்
உனை
அடியேன் விரும்ப மாட்
டேனோ?
இருவரும்கூடி எப்பொழுதும்
இனிதாய் ஆடி மகிழ்வோமே

செல்லத்தம்பி சொல்கிறான்.

ஓ! ஓ!!சேதி அப்படியா?
உண்மையை அறிந்து
கொண்டேனே.
நோயும் நொடியும் பெருக்கு
கிற
பேயே எனைவிட்டோடி விடு
நாளும் நாளும்
குளிப்பேனே
நன்றாய்த் துவைத்தே
உடுப்பேனே
ஆடும் கிளியும் இனிமேலே
ஆடி மகிழ்ந்திடும் என்னு
டனே.

# மகிழ்ந்து பந்தடிப்போமே!

—சி. ஆறுமுகம்—

நடுவர் முன்பு அணியில் நின்று
நண்புக் கரங்கள் குலுக்கியே
நமது பக்கம் நாடி நிலைகள்
நண் ணி ஓடி ஆடுவோம்!
முடுகிப் பந்தை முந்தி எடுத்து
முறையிற் கொண்டு கொடுத்துநாம்
முன்னம் மின்னல் வேகத் தாக்கில்
கோலின் வாயுள் புகுத்துவோம்!

தாவிப் பாய்ந்து பந்தைத் தலையால்
தட்டிக் கொடுத்துச் சாய்ந்துமே
தரையில் விழுந்தும் பந்தைக் காலால்
சாடி எழுந்தும் ஆடுவோம்!
ஏவி எததி எடுத்தே எவரும்
ஏத்தி யார்ப்ப எதிருளார்
எண்ணும் முன்னம் கண்ணும் மின்ன
அடித்தே யெடுப்பம் கோல்களே!

வெற்றி! வெற்றி!! வெற்றிஎன்றே !!!
வீரர் நெஞ்சம் விம்மவும்
விரும்பி யாட்டம் பார்ப்போ ருள்ளம்
வீறுகொண்டு துள்ளவும்
பற்றிப் பந்தை யுருட்டி வெட்டித்
தட்டி யடித்துப் பண்புடன்
பாய்ந்து எதிரிப் பக்கம் ஏங்கப்
பந்தைக் 'கோல்'வாய்ப் புகுத்துவோம்.

வான ளாவிப் பந்தெ ழும்ப
மகிழ்ந்த காலம் போச்சுது!
மண்ணாற் பந்து மருவ அடித்து
மக்கள் மகிழ ஆடுவோம்!
மானம்! வீரம்! பேணிக் கோலின்
வாய்க்குள் பந்தைப் புகுத்தியே
வாழ்க எங்கள் கழகம் என்றே
வண்ணக் .கோல்கள் எண்ணுவோம்!

கடல் புரண்டு வந்த தென்னக்
களிதி ரண்டு நிற்பவர்
கைகள் கொட்டிக் குதித்துக் கலித்துக்
காணிக் கைகள் எடுக்கவும்
மடை திறந்து பாயும் வெள்ளம்
மான வீரர் ஓடியே
வலமும் இடமும் மாறிக் கொடுத்து
மகிழ்ந்து பந்த டிப்பமே!

'வெற்றி வீரர் இவர்கள்' என்றே
விண்ணும் அதிர எண்ணிலார்
மிடைந்து குடைந்து புகுந்து தூக்கி
வீசி ஆர்த்து நிற்பதைச்
சற்று நேரந் தன்னிற் கண்டு
தழைக்கும் வாய்ப்புச் சாரவே
சால ஆடி ஓடிப் பந்தைச்
சாடிக் கோல்கள் போடுவோம்!

சிந்தனைச்சுருள் [4]

# நமது கடமையில் சித்தி பெற..

## காலை எழுந்தவுடன் படிப்பு

நம் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் இன்றியமையாத பெரும் செல்வம்—

கல்விச் செல்வம்!

நம்மை மனிதனாக்கி, நாமும் சமுதாயத்தில் தலை நிமிர்ந்து நிற்க, நமக்காக மட்டுமல்ல, நம் நாட்டுக்காகவும் வாழ வழிகாட்டுவது கல்வி!

பெற்றவர் போற்றும் நன் மக்களாக வாழவகை செய்வது — கல்வி!

நம்மில் எத்தனை பேர் டாக்டராக வேண்டும், ஆசிரியராக வேண்டும், பத்திரிகையாளனாக வேண்டும், அரசியல்வாதியாக வேண்டும் என்றெல்லாம் கனவு கண்டு வருகிறோம்,

அப்படி ஏதோ ஒருவகையில் சமுதாய திறகுச் சேவை செய்ய நாம் ஆசைப்படுவது நியாயமானதே!

இத்த கய சிறப்புமிகு கனவுகளை நனவாக்க கல்வி அவசியம்.

அக்கல்வியை நாம் திறமையுடன் கற்பதற்குத் தெளிந்தமனம் வேண்டும்! இத் தெளிந்தமனம் நமக்குக் காலைவேளையில் தானே கிடைக்கிறது. காலைப்போதில் கற்கும் கல்வி வீண் போகாதல்லவா?

மனதிலே தெளிவும், புதிய உற்சாகமும், கிரகிக்கும் ஆற்றலும் அதிகாலையில் இயற்கையாக அமைந்திருப்பதால் அதிகாலையில் படிக்கும்படிப்பு பசுமரத்தாணிபோல் மனதில் பதிந்துவிடும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. —நீலா

## இந்திர போகம்

சின்னச்சின்னப் பூச்சி
சிவந்த பட்டுப் பூச்சி

செந்தணலின் பழமோ
உந்தன் எழில் வண்ணம்

மாதுளம்பூச் சிகப்போ
மயக்கும் உந்தன் வண்ணம்

பழுத்த கொவ்வை கனியோ
கொழிக்கும் அந்த
வண்ணம்

கோடைக் காலம் பூமி
குடைந்து வசித் தாய்நீ

மாரி காலம் தோன்ற
மகிழ்ந் தெழுந்த தேனோ.

—வி.என்.பி.

நாள்தோறும் தன் முகத்தையும் தலையையும் ஒழுங்குபடுத்திக் கொள்வதுபோல், தன் உள்ளத்தையும் ஒழுங்குபடுத்திக் கொள்ளவேண்டும். தலைவாரி அமைத்துக்கொள்ள கண்ணாடி வேண்டும். அதுபோல உள்ளத்தை ஒழுங்குபடுத்த நாட் குறிப்பு எழுதும் வழக்கம் வேண்டும். அல்லது ஏசு, புத்தர், திருநாவுக்கரசர் போன்ற அறத்தின் வீரர்களைத் தியானம்செய்துகொண்டு நேற்றைய இன்றைய செயல்களையும், சிந்தனைகளையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

—டாக்டர் மு.வ. — 'அல்லி'

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமெண்ஸ்
74A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துச்செல்வம் (5)

## பழமை என்ற விளக்கு

நம்மைப் பொறுத்தமட்டிலும் பழங்காலத்தை வெறுக்கும் சிலர் இருக்கின்றனர். அப்பழங் காலத்தை அறவே சம்பந்தமற்றதாக நாம் செய்து விடவேண்டுமென்ற அளவிற்கு இவர்களுடைய வெறுப்பு அவ்வளவு தீவிரமாக இருக்கிறது. வேறு சிலர் பழங்காலத்தை மிகுந்த பக்திசிரத்தையுடன் போற்றுகின்றனர். இந்த இரண்டுவிதமான கொள்கைகளிலும் அபாயமிருக்கின்றது. அபாயத்தைத் தான் இங்கு அழுத்தமாக வற்புறுத்த விரும்புகிறேன். வெளித்தோற்றத்திற்கு ஒன்றுபடுத்த முடியாத இவ்விரு பான்மைகளையும் நாம் சிறிது ஆராய்ந்து பார்ப்போம். பழமையை வெறுப்பவர்கள் ஏதாவதொன்று புதிதாயிருந்தால் போதும், அதை எவ்வித முன்யோசனையுமின்றி ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறார்கள். புதிதாயிருக்க வேண்டும் என்பதொன்றே அவர்கள் விரும்பும் யோக்கியதாம்சம். நூற்றுக்கு நூறு புதிய அம்சம் இருக்கவேண்டுமென்று அவர்கள் கேட்கின்றனர். புதியது, பழையதைக் காட்டிலும் மோசமானது என்றுகூட அவர்கள் ஆராய விரும்புவதில்லை. அவர்களுக்கு நவீன நாகரிகமே நல்லதாக-நூற்றுக்கு நூறு நன்மையானதாக எல்லாவகையிலும் எல்லாத்தோற்றத்திலும் உகந்ததாகத் தோன்றுகிறது. நவீன நாகரிகத்தில் போதியளவு அனுபவம் அவர்கள் அடையாதபடியால்தான் புதியதை இவ்விதம் கண்மூடித்தனமாக போற்றிப் புகழ்கின்றனர், நவீனம் அதிகமாவதால் ஏற்படும் கெடுதியை அவர்கள் அறிந்து கொள்வதில்லை. நவநாகரிகம் என்ற இந்த வனோதநோய் அதன் பிழையான அவசர பரபரப்பினாலும், வேறுபட்ட பல நோக்கங்களைக் கொண்டதனாலும், இருதயம் இன்னலுற்றிருப்பதனாலும் புத்தி நுணுக்கம் அளவிற்கு மிஞ்சியிருப்பதனாலும் சில சமயங்களில் சிலவழிகளில் நமக்கிழைத்துவரும் கெடுதிகளை இவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை. இழுக்கும் சக்தி அதிகம் வாய்ந்த ஒரு மோட்டார் கார் செங்குத்தானகுன்றிலிருந்து வெகுவேகமாக ஓடிவர, அதன் கூடிவரும் வேகத்தைத் தடுக்கச் சக்தியற்று கீச்சுக்கீச்சென்று கத்திக்கொண்டு ஒரு குரங்கு அதை இயக்கும் ஸ்டியரிங் சக்கரத்திற்குமுன் உட்கார்ந்திருக்கும் அபாயமான நிலைமைக்குத் தற்கால நவநாகரிகம் சில விஷயங்களில் ஒப்பிடப்படுகிறது என்பதையும் அவர்கள் அறிந்திருப்பதாகத் தெரியவில்லை.

நம்மிடையே மற்றொருசாரார் இருக்கின்றனர். இவர்களுக்கு நவநாகரிகம் சிறிதளவும் உபயோகமுள்ளதாகவில்லை, தற்கால நாகரிகம் மனிதவர்க்கத்திற்கு அளித்திருக்கும் நன்மைகளைப்பற்றி அவர்கள் ஒன்றும் தெரிந்துகொள்ளவில்லை. 'அசையாமல் நிற்பது' என்பதுதான் இவர்களுடைய கொள்கையாகும். ஒன்று முன்னே போகவேண்டும், இல்லாவிடில் தவிர்க்கமுடியாதபடி பின்னேறவேண்டியதுதான் என்பதையும் இவர்கள் புரிந்துகொள்ளவில்லை. சில சந்தர்ப்பத்திற்குத் தகுந்த முறையில் வாழ்க்கையைப் பொருத்திக்கொள்ள வேண்டுமென்பதை இவர்கள் அறியாமலிருக்கிறார்கள் ஆனால் துரதிர்ஷ்டவசமாக இவர்கள் கடவுள் பெயரை (முஸ்லிம்கள் இஸ்லாத்தின் திருநாமத்தை) தங்களுக்கு வேண்டியபொழுது உதவிக்கு அழைத்துக் கொள்கின்றனர்.

—ஏ. எம். ஏ. அஸீஸ், 'இலங்கையில் இஸ்லாம்' என்ற நூலில்.

## காந்தி வாக்கு

■ தேவைகளை அதிகரித்துக்கொண்டே செல்வது நாகரிகமல்ல. தாவே விரும்பித் தேவைகளைக் குறைத்துக் கொள்ளவேண்டும்,

■ ஒரு நோக்கமுமில்லாமல் வெறுமனே இலக்கியத்தைப் படிப்பதைவிட நல்ல விவேகத்தோடு கைத்தொழில்பயிற்சி பெறுவது அறிவை விசாலப்படுத்த எவ்வளவோ உதவியாக இருக்கும்,

■ உண்மையான எந்தக் காரியத்தையும் சாதிப்பதற்கு முதற்படியாக நமது நெஞ்சத்தில் அஞ்சாமை வேரூன்றி நிற்கவேண்டும். சமய உணர்ச்சி விழிப்படைந்தாலன்றி அஞ்சாமை என்ற நிலையை நாம் அடைய முடியாது. அஞ்சா நெஞ்சமும் சத்திய உபாசனையும் உள்ள வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் எவ்வித தோல்வியும் நம்மை அணுகாது. சத்தியத்தில் நிற்பதென்பது பஞ்சணையில் படுத்திருப்பதல்ல. உண்மையைக் கடைப்பிடிப்பதற்குத் தியாகம் தேவைப்படுகிறது. வானமே இடிந்து தரையில் விழ்வதாயிருந்தாலும் நாம் உண்மையைக் கடைப்பிடித்து ஒழுகவேண்டும்.

■ நான் மனிதருக்குப் பணி புரியும் சாதனையால் இறைவனைக்காண முயல்கிறேன். ஏனெனில் எவன் ஒருவன் எல்லாச் சீவராசிகளிடத்தும் நேர்மையாய் இருக்கிறானோ அவன் இறைவனிடத்தில் நேர்மையாயிருக்கிறான்.

சிறந்த எதிர்காலத்துக்கு சிறப்பான

# குரு குலம்!

தமது எதிர்காலத்தைத் தாமே நிர்ணயித்துக்கொள்ள சிறுவர் சிறுமியர்களுக்குக் கற்றுக்கொடுக்கப்படுகிறது!

எங்கே என்று கேட்கிறீர்களா?

எங்கும் போக வேண்டாம்! சமீபத்திலுள்ள கிளிநொச்சிப் பகுதியில், ஏழாம் வாய்க்காலிலுள்ள கரடிப்போக்குச் சந்தியிலிருந்து உருத்திரபுரம் வீதிவழியாக இரண்டரைக்கல் தூரத்தில் இடப்பக்கம் திரும்புங்கள்!

### வாழ்வாங்கு வாழ ...

மாணவர்களை வாழ்வாங்கு வாழப்பயிற்சி அளிக்கும் அந்தக் குருகுலக் கல்விநிலையம் நிமிர்ந்து நிற்கிறது.

இந்தியாவில், திருமங்கலம் கல்லுப்பட்டியிலுள்ள 'காந்திநிகேதத்தில் பயிற்சி பெற்ற பெரியார் வே. கதிரவேலு இந்தக் குருகுலத்தின் தலைமையாசிரியர். அவர் துணைவியார் சின்னம்மா அவருக்குத் துணையாக இருந்து குருகுலத்தைச் சிறப்பாக நடாத்திவருகிறார்.

நான் அங்கு போன போது —

பன்னிரண்டு மணியிலிருந்து சில நிமிடங்கள் தாண்டிச் சென்றுவிட்டன.

நாலுமுழத் துண்டொன்றுடன், தாடி வைத்திருந்த பெரியவர் ஒருவரே என்னை எதிர்கொண்டழைக்கின்றார்!

அவரது முகப்பொலிவும், அன்பான பார்வையும் அவரே பெரியார் கதிரவேலு என்பதை எனக்குச் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தது!

### குழந்தை உள்ளம்

'வணக்கம்' என்றேன். அவரும் அமைதியாக பதில் வணக்கம் தெரிவித்துவிட்டு-பேசினார்; ஆம், என்னுடன் அவர் மனம்விட்டுப் பேசினார்!

குழந்தையுள்ளம் அவருடையது!

அந்தக் குருகுலத்துக்கு என்றே பிறந்தவராக இருக்க வேண்டும்!

கடும் சொற்கள் அவர் வாயிலிருந்து வரவில்லை. சிறார்களைக் கவர்ந்திழுத்து, அவர்களுக்கு நல்ல பாதை வகுத்துக்காட்டக்கூடிய உயரிய தன்மைகள் அவரது சொத்துக்கள் என்பதை அவருடன் பேசிய சில நிமிடங்களிலேயே உணர்ந்துகொண்டேன்!

மதியபோசனத்துக்கு அழைத்தார்! சாப்பாட்டுக்கு முதல் பிரார்த்தனை. சிறார்களுடன் இணைந்து சாப்பிட்டோம். சாப்பாட்டுக்கு பின்னர் —

குருகுல மாணவர்களை அபிப்பிராயம் கேட்க ஆரம்பித்தேன். அவர்களும் என்னிடம் தமது வயதிற்கேற்ற அறிவுக்கு எட்டியதைச் சொன்னார்கள்.

### மாணவி பேசினார்

பதினாறு வயதான செல்வி நடனவதி என்ன சொல்கிறார் என்று பார்ப்போமா?

'மூன்றாண்டு காலமாக இக்குருகுலத்தில் வாழ்ந்துவருகிறேன். நாமே நமது வேலைகளைக் கவனிக்கிறோம். படிப்பும் சொல்லித்தருகிறார்கள். கடவுள்வணக்கம் இங்கு முக்கியம். நல்ல சாப்பாடு கிடைக்கிறது' என்றாள் நடனவதி!

வேறுசில மாணவரும் தங்கள் அபிப்பிராயத்தைச் சொன்னார்கள். ஒரு குறையுமில்லாமல், நிம்மதியாக இருக்கிறார்கள் என்பதை மட்டும் என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.



குருகுலத்தின் தையல் ஆசிரியையாகக் கடமையாற்றும் செல்வி ச. புவனேஸ்வரி மிகவும் இனிய உள்ளம் படைத்தவர். தையல்துறையில் நல்ல அனுபவமும், தேர்ச்சியுமுள்ளவர் என எனக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. சில நிமிடநேரம் அவருடனும் பேசிப் பார்த்தேன்.

'ஒன்றரை வருட காலமாக குருகுலத்தில் தையல் பயிற்சி அளித்து வருகிறேன். பெண்பிள்ளைகள் எவ்வித பயமுமின்றி துணிந்து பயிற்சி பெற சிறந்த இடம் இக்குருகுலம் என்பது என் தாமையான கருத்து தொழிற்பயிற்சிக்குச் சிறந்த இடம்'— என்றார் செல்வி புவனேஸ்வரி.

இளைப்பாறிய கணக்காளர் திரு. ஆர். கோபாலசாமி இக் குருகுலத்தில் இருந்து தூயபணி ஆற்றுகிறார்.

சித்திர ஆசிரியர்கணபதிப் பிள்ளையின் கைவண்ணத்தை குருகுலத்தில் கண்டு வியந்தேன்.

சிவதொண்டன் நிலையத்தில் இருந்த அண்ணாசாமியாரும் அங்கு இருக்கிறார்.

### இதயம் பேசியது

இப்படியே சில நிமிட நேரத்தைக் கழித்துவிட்டு தலைமை ஆசிரியரான பெரியார் திரு. கதிரவேலு அவர்களை மீண்டும் அணுகினேன் அவர் பேசினார்.

'பிள்ளைகள் அடிப்படை ஆதாரக் கல்வியால் தான் பயன் அதிகம் அடைவர், இதனை நல்ல முறையில் பயிற்ற பொருளாதாரம் முக்கியம். வசதியுள்ள நம்மவர்கள்தான் இதற்கு உதவ வேண்டும்.

வளர்ந்துவரும் எமது குருகுல நிலையம் மேலும் வளர பல்வேறு பிரிவுகளாக — அதாவது, குழந்தைகள் பராமரிப்பு நிலையம். பாலர் விடுதி, பாலர் பூங்கா, இளைஞர் விடுதி, வாசிகசாலை என உயரநிதி வேண்டும். அதனைச் செய்துதர பணம் படைத்தவர்கள் முன்வர வேண்டும்.'

1928-ம் ஆண்டு திருநெல்வேலி அனாதை நிலையத்தில் பயின்றவர் கதிரவேலு பெரியார். அன்று தொடக்கம் காந்தியடிகளைப் பின்பற்றினார். காந்தியடிகளது நெசவு நூற்றல் போன்றவற்றில் ஈடுபாடு கொண்டு, தனது பிறப்பிடமான நெடுந்தீவிலும் நெசவு நிலையமொன்றையும் நிறுவினாராம்!

### சுமை நீங்கியது

ஏழைப்பிள்ளைகளை வாழவைக்கும் நிலையமாகத் திகழும் இக்குருகுல நிலயத்துக்குத் தலைமை ஆசிரியராகப் பணியாற்றுவதற்குச் சகல தகைமைகளும் பெரியார் கதிரவேலுக்கு இருக்கின்றன.

என் மனத்திலே பெரிய சுமையாக இருந்த கேள்வியொன்றையும் அவரிடம் கேட்டுவைத்துவிட்டேன்.

''அனாதை நிலையங்களிலுள்ள மாணவர்கள் பெரிதும் இம்சைக்குட்படுத்தப் படுகிறார்களாமே!''

—நான்கேட்ட இக்கேள்வி அப்பெரியாரை எப்படித் துன்புறுத்தப் போகிறதோ என்ற ஏக்கம், கேள்வியைக் கேட்ட அடுத்த விநாடியே என் இதயத்தைச் 'சிக்' கென்று பிடித்துக்கொண்டது.

ஆனால்—

அவர் முகத்தில் எவ்வித மாற்றமுமில்லை! சலனமில்லை. அவர் அமைதியாக சொன்னார்.

''நான் ஒடுகிற சைக்கிளிலேயே மாணவர்களும் ஓடுகிறார்கள். இதனைவிட வேறென்ன சொல்வதென்றே தெரியவில்லை. நீங்களே இங்குள்ள பிள்ளைகளிடம் நேரில் விசாரித்தறியுங்கள் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை வைத்துக்கொண்டு ஒரு முடிவுக்கு வரலாம்.''

[redacted] கு. வி. மகாலிங்கம்

(14- பக்கம் பார்க்க)

உத்தரவாதமுள்ள தங்க - வைர
நகைகளைப் பெற்றுக் கொள்ள
நம்பிக்கை வாய்ந்த ஸ்தாபனம்
எஸ். எல். எம். தீபி அன் சன்ஸ்
[illegible] — வைர வியாபாரிகள்
[illegible] (R. G. பில்டிங்) யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

போன பெண்ணைப் பார்த்து இதைக் கேட்டதும் அந்த வயதுபோன பெண்ணுக்கு அருகில் அமர்ந்து தேங்காய் துருவிக் கொண்டிருந்த இளம்பெண் படபடத்தாள். 'மனிசி கினிசி எண்டு மரியாதக் குறைவாய்ப் பேசவேணும்...' நாங்களும் மற்றவர்களைப் போல மனிசர்தான். மரியாதையாகப் பேசுங்கோ...''- குரல்வந்த பக்கமாகஏறிட்டு நோக்கிய கனகசபாபதி மதி மயங்கிப்போய் நின்றான். வானத்து நிலவொளியில் பிட்டுக்காரக்கிழவியின்மகள் நல்லம்மாவின் மேனியழகு பளிச்சிட்டது. இதுவரைஎந்தப் பெண்ணையும் மதித்து மரியாதையாகப் பேசாத அவனுடையவாய் அன்று என்ன பேசுவதென்றறியாமல் தவித்தது.

''டேய் மயிலு...! என்னடா சும்மா சண்டைக்குப் போறாய்?...அவையள் தரும்போது வாங்கலாந்தானே...?''

மயில்வாகனம் திகைத்துப் போய் நின்றான். எவருக்கும் அடங்காத கனகசபாபதி எதற்காக எதிர்வார்த்தையாடாமல் அடங்கிப்போய் விட்டான்? பிட்டுக்காரக் கிழவியின் மகள் நல்லம்மா கனகசபாபதியை ஒரு

# சிறுகதை

தடவை நிமிர்ந்து பார்த்துவிட்டுத் தன் அலுவல்களில் மூழ்கினாள். கொஞ்சநேரத்திற்கெல்லாம் அவர்களிடம் பிட்டும், பலாப்பழமும் வாங்கிக்கொண்டு சாப்பிடுவதற்காக மீண்டும் கடற்கரை மணலில் அமர்ந்தனர் கனகசபாபதியும் நண்பர்களும்

''அண்ணே! பிட்டுக்கார மனிசியின்ர பெட்டையைப் பாத்தீங்களே...?'' மயில்வாகனந்தான் கேட்டான். கனகசபாபதி இலேசாகச் சிரித்தான்.

''டேய் மயிலு...! நீவேணுமெண்டாப்பாரு. நான் உயிரோட இருந்தா அடுத்தவருஷம் சல்லியமமன் திருவிழாவுக்கு நான் அவளோடதான் திருவிழாப் பாக்க வருவன்...'' வானத்தில் நீந்திக்கொண்டிருந்த நிலவைப் பார்த்துக்கொண்டே பேசினான் கனகசபாபதி. கனகசபாபதி சொல்லியதுபோல் அடுத்தவருடம் சல்லியம்மன் திருவிழா நடைபெறு முன்னமே பிட்டுக்காரஆச்சியின் மகள் நல்லம்மாவைத் திருமணம் செய்துகொண்டான். ஆனால் அவர்களுடைய திருமணக் காட்சியைக்காண மயில்வாகனத்திற்குத் தான் கொடுத்து வைக்கவில்லை. அவன் எதிர்பாராமல் நடைபெற்ற ஒரு விபத்தில் இறந்துபோய்விட்டான்.

''க்... காக்... த்... தூ... த்தூ...'' நல்லம்மா வெற்றிலைச் சாற்றுடன் கூடிய உமிழ்நீரைக்காறி உமிழ்ந்து வெளியே துப்புகிறாள். சிந்தனையோட்டத்தின் பிடியிலிருந்து விடுபட்ட கனகசபாபதியர் சுற்றுமுற்றும் பார்க்கிறார். சனக்கூட்டம் அலைமோதிக் கொண்டிருக்கிறது. வானத்தில் முழுநிலவு தலைநீட்டியிருக்கிறது. கனகசபாபதியரின் உள்ளம் அமைதியிழந்து கிடக்கிறது! என்னுடனே இருபத்தைந்துவருஷ காலத்தை ஓட்டிவிட்ட அவள் அப்படிப்பட்டவளாக் இருப்பாளா? எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ? பெண்களை எப்படி நம்பமுடியும்? அவன் யோகனுடன் கள்ளநட்பு வைத்திருக்கிறாளெண்டுஊருக்குள் அடிபடும் கதை உண்மையாயிருக்குமோ?...'' கனகசபாபதியரின் மனம் கேள்விமேல் கேள்விகளைக் கேட்டுப் பதிலைக் கண்டுபிடிக்கமுடியாமல் பெரிதாக ஓலமிடுகிறது. ''அவளிடமே எப்படி இதை நேரிடையாகக்கேட்பது?...'' அவர் தயங்கிப்போய் உட்கார்ந்திருக்கிறார். ''சல்லியம்மா நீதான் அருள்புரிய வேணும்...'' அவருடைய மனம் சல்லியம்மனைப் பிரார்த்தித்துக் கொள்கிறது. வாய்ப் [illegible]ளிச்சலைப் போக்கிக்கொள்ள மடியைத் தடவுகிறார். மடியினுள் வைத்திருந்த சுருட்டுகள் எங்கே? எங்கேயாவது வழியில் விழுந்துவிட்டனவோ? சுருட்டு வாங்கிவருவதற்காக எழுந்துகடற்கரைமணலில் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த கடையொன்றை நோக்கிநடக்கிறார். அவருக்கெதிரே...! சனக்கூட்டத்தை ஊடறுத்துக்கொண்டு ஒரு நடுத்தர வயதுடைய பெண்ணுக்குப் பின்னால் விரைந்த சென்றுகொண்டிருப்பதுயார்? கனகசபாபதி உற்று நோக்குகிறார். சந்தேகமில்லை, அது யோகன்தான். இந்த இரவு வேளையில் அறிமுகமில்லாத இந்தப் பெண்ணுக்குப் பின்னால் எங்கே போகிறான்? கனகசபாபதி ஒருகணம் அவர்களையேஉற்றுநோக்கியபடி நிற்கிறார். மறுகணம் அவர்களைத் தொடர்ந்து அவர் கால்கள் கடற்கரை மணலில் நடக்கின்றன. கனகசபாபதியரின் தூரத்து உறவினன்தான் யோகன். அவருடைய உறவென்று சொல்லிக்கொள்ள அவன் மட்டும்தான் மிஞ்சியிருக்கிறான்: பல வருஷங்களாக எங்கேயோ வாழ்ந்துகொண்டிருந்த அவன் மீண்டும் சொந்த ஊருக்குத் திரும்பி வந்து கொஞ்சக்காலந்தான் ஆகிறது. கனகசபாபதியரின் வீட்டுக்கு அவன் போவது உண்டு. ஆனால் கனகசபாபதியர் வீட்டில் இல்லாத நேரத்திலும் அவன் அடிக்கடி அவர்வீட்டிற்குப்போகிறான் என்ற விஷயம் ஊருக்குள் அடிபட்டு வந்து அவர் காதுகளில் விழுந்த பின்புதான் அவர் அமைதி இழக்க ஆரம்பித்தார். கடற்கரை மணலில் அமர்ந்திருந்தசனக் கூட்டத்தையும் தாண்டிஅந்தப் பெண்ணும் யோகனும் நடக்கின்றனர். இருள் ஆலேசாக மண்டிக்கிடந்த தென்னந்தோப்புக்குள் இருவரும் விரைந்து நடக்கின்றனர். அவர்களைத் தொடர்ந்து கனகசபாபதியர் விரைந்து நடக்கிறார். இருவரும்தென்னந்தோப்பிற்கு மத்தியிலிருந்தஒருகுடிசைக்குள் நுழைகின்றனர். கனகசபாபதியர் கதவுகளில்லாத யன்னலோரம் வந்துநின்று உள்ளே ஏறிட்டு நோக்குகிறார். உள்ளே..! ஒரு சிறுமேசை மீது குப்பி விளக்கொன்று மங்கலான வெளிச்சத்தைப் பரப்பிக் கொண்டிருக்கிறது. அந்த வெளிச்சத்தில்...! அந்தப் பெண் யோகனை இழுத்

(14-ம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் தனித்து இயக்கும் புரட்சிகரமான பாடசாலை

குவிந்து கிடக்கும் பல ரக நூல்களில் விரும்பியவற்றைத் தேர்ந்தெடுத்து வெகு உற்சாகமாக அறிவை நுகருகிறார்கள் பிரிட்டிஷ் மாணவிகள், வாழ்க்கைக்கு இன்றியமையாத கல்வி அறிவைத் தாமாகவே தேட அவர்களுக்குப் பெருந்துணை புரிகின்றது ஒரு புதுமைப் பள்ளி.

ஒழுங்குக் கட்டுப்பாடுள்ள பொறுப்பும், சுதந்திரமும் மிக்க ஒரு தனி உலகம் இங்கு காணப்படுகிறது. பிரித்தானியாவில் இன்று பெருந்தொகையான மாணவிகள் ஆறுவது படிவத்தையடையும்வரை பாடசாலையிலேயே தங்கி விடுகின்றனர். இப்பள்ளிகளில் தங்கிப்படிக்கும் பெரும்பாலானோர் பல்கலைக் கழகங்களுக்கும் பயிற்சிக் கல்லூரிகளுக்கும் வேறு பிற ஸ்தாபனங்களுக்கும் செல்கின்றனர். இளம் மக்கள் தங்களுக்குள் தாமே எதையும் சிந்திக்கவும், வெளியுலகைப் புரியவும் கூடியவர்கள். இதேவயதில் அவர்களது பெற்றோர் கொண்டிருந்த திர்ச்சியைவிட அவர்கள் இன்று கூடியளவு அனுபவஸ்தர்களாக அதிக விஷயம் தெரிந்தவர்களாக இருக்கிறார்கள்' இதனால் சிலசமயங்களில் அவர்கள் மனஅமைதி இழந்து. தடுமாற்றம் உள்ளவர்களாகவும், நிர்வாகத்தின்மீது சந்தேகம் கொள்பவர்களாகவும் ஒழுங்குகளை மீறுபவர்களாகவும் இருக்கின்றனர்.

இப்புதிய கல்வி ஸ்தாபனம் பெண்களை மரபுவழிகளிலிருந்து விடுவித்துக்கொள்ளக்கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கிறது. இதன்பெயர் வைகோம்ப்

### வாழ்க்கைக்கான கல்வியை வழங்கும் முழுநேர கட்டுப்பாடான கல்வி நிலையம்

உயர்நிலைப்பள்ளி என்பதாகும்.

பெண்களுக்காக அமைக்கப்பட்ட இப்பாடசாலை பக்கிம்ஷயரில் இருக்கிறது. இப்பாடசாலை கென்னிங்கிலாந்திலுள்ள மிகப் பெரிய பெண்கள் பாடசாலைகளில் ஒன்று. ஒருவருடஒத்திகைக்குப்பின்னர்தான் இப்பாடசாலை அண்மையில் திறக்கப்பட்டது. இங்கு சுமார் 260 பெண்கள் ஆறும் படிவத்தில் பயில்கின்றனர். இப்பெண்களே இப்பாடசாலையை நடத்துகின்றனர். 16 பெண்களையும் 6 ஆசிரியர்களையும் கொண்ட பொதுக்கமிட்டி ஒன்றின் மூலம் இப்பாடசாலையைநிர்வகிக்கிறார்கள். பொதுவாகத் தலைமையாசிரியையின் தலைமையில் ஒன்றுகூடித் தீர்மானங்களை மேற்கொள்கின்றனர். இத்தீர்மானங்களை அங்கீகரிக்காமல் விடும் அதிகாரமும் அவர்களுக்குண்டு.

இப்பாடசாலையில் பயிலும் மாணவிகள் பிரித்தானிய பாடசாலைகளில் வழங்கி வரும் யூனிபாரங்களை அணிவதில்லை. பெரும்பாலும் அவர்கள் வயதுவந்த பெண்களின் ஆடைகளையே அணிகிறார்கள். தலைமை மாணவிகள் என்ற தம கடமைகளையும் அவர்கள் ஐந்தாம்படிவ மாணவிகளுக்கு அளித்துவிடுகிறார்கள், இந்தவழியில் அவர்கள் கூடிய பொறுப்புணர்ச்சியை கீழ்ப்படிவ மாணவிகளுக்குப் புகட்டிவிடுகின்றனர். இங்கே சிறந்த நூல்நிலையம். போதனை அறைகள். சாப்பாட்டு அறை, ஆய்வு அறை போன்ற பல விசேஷ அறைகள் இருக்கின்றன. இங்கு பயிலும் பெண்கள் தமது பரீட்சைக்குரிய பாடங்களை தாமாகவே ஆயத்தப்படுத்தலாம்.

பழைய சந்ததியைச் சேர்ந்தோர் இன்றைய சந்ததியினரின் விருப்பு வெறுப்புகளை அறிந்து அதற்கேற்பச் செயற்படவேண்டும். இருசந்ததியினருக்குமிடையே யாதொரு பிளவும் இருப்பதுகூடாது என்ற நோக்கங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இன்று நற்பயன் தருகின்கின்றது என்பதில் சிறிதும் ஐயமில்லை எனபல பிரிட்டிஷ் அறிஞர்கள் கருதுகின்றனர்.

— மைக்கேல் பட்லர் —

# பொறாமையெனும் தீ!

மனிதன் பிறக்கிறான், இறக்கிறான். அப்படியான இடைப்பட்ட காலத்துக்குள் தான் மனிதன் போட்டி' பொறாமை போன்றவற்றில் திகழ்ந்துவிடுகிறான். இது தான் மனிதனின் பண்பு போலும். ஒருவனுடைய கையில் சிறிது பணம் கிடைத்து. சிறிது செல்வாக்கும் அவன் பெற்றுவிட்டானேயானால் அவனை எப்படியாவது மட்டம் தட்டிவிட வேண்டும் என்ற எண்ணம் சிலரின் மனதிலே முளையிட ஆரம்பித்துவிடுகின்றது. இதனால் அவனின் வாழ்வு நீர்க்குமிழிபோல் மாறிவிடுகின்றது. மனிதமனம்பாசம்பற்று அன்பு, பண்பு, அறம் என்னும் செடிகளினால் பிணைந்து கிடக்கவேண்டியதொன்று ஆனால் பேதம், பிளவு, பொறாமை, சந்தேகம், பேராசை என்ற இக் கொடிய எண்ணங்களை மனதில் வைத்துக்கொண்டு மற்றவர்களை அழிக்க முனைகிறான். வாழ்ந்துகொண்டிருப்பவர்களைப் பார்த்து வாழத் தெரியாதவன் பொறாமைப் படுகிறான்.

பிறரின் வாழ்வையும், புகழையும் பார்த்து பொறாமைப்படும் மனிதன், தன்னைத்தானே அழித்துக்கொள்வதற்குச் சமமாகும். தன்னைப்போலவே பிறரும் வாழப் பிறந்தவர்கள் என்பதை உணராமல் தான்மாத்திரமே வாழவேண்டும், புகழ் பெறவேண்டும் என்ற அற்ப ஆசையுடன் வாழும் மனிதர்களை நாம் அறியாமலில்லை. இதற்காக நாம் உயர முடியாமல் இருப்பது நியாயமா?

"அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே
உச்சிமீது வானிடிந்து
வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே"

என்ற பாரதியாரின் கருத்துக் கனியை நாம் இனிமையுடன் சுவைத்து மகிழவேண்டும். பொறாமையிலிருந்துதான் அற்பத்தனமே தோன்றுகிறது. பிறரின் வாழ்க்கையைப் பார்த்து பொறாமைப்படுபவனே இறுதியில் கொலை, கொள்ளை போன்ற இழிவான தொழிலில் தன் கவனத்தைச் செலுத்த முற்படுகிறான். சொற்பகாலத்துக்கே வாழப் பிறந்தவர்கள் நாம் எதற்காக ஏன் பிறரைப் பார்த்துப் பொறாமைப்படவேண்டும்? இதனால் விளையும் நன்மைதான் என்ன? 'அவன் நம்மைப் பார்த்து இப்படியெல்லாம் பொறாமைப்படுகிறானே அவன்மீது நாம் உறவு கொள்வதா' என்ற

நாவல்நகர்

சித்தி பரீடா

அடிப்படையில் பொறாமைப் படுபவனை சமுதாயத்திலிருந்தும் விலக்கிவிட நாம் துணிகிறோம். பிறர் வாழ்வைப் பார்த்து. பிறர் மகிழச்சியைப் பார்த்து பெருமைப்படும் எந்த ஒரு ஆணோ அன்றிப் பெண்ணோ நல்லவாழ்வு வாழக் கூடியவர்கள் அல்ல என்பதே முடிவு. பிறருடைய கருத்தை உணர மறுப்பதும், பிறருடைய ஆசையை, பிறருடைய உரிமையை ஒப்ப மறுப்பதும் போன்ற தீய குணங்கள்தான் போரை விளைவிக்கின்றன.

ஒருவனை ஒருவன் அழித்து வாழ விரும்பவே கூடாது. தன்நலம் ஒன்றையே கருதி பிடிவாதத்தோடும் கருமித்தனத்தோடும் வாழ்பவர்களைக்கூட இவ்வுலகம் கெட்டிக்காரன், திறமைசாலி என்று கூறுகிறது. இரக்க குணம் படைத்து, விட்டுக்கொடுத்து பிறருக்கு உதவி செய்து வாழ்பவர்களைக்கூட இவ்வுலகம் ஏமாளி என்று கூறி நகைக்கின்றது. காரணம் பொறாமை என்ற பொக்கிஷம் மனித மனதில் வேரூன்றி வளர்வதனால் தான். சகிப்புத்தன்மையிலிருந்துதான் பெருந்தன்மையே உருவாகின்றது.

பிறர் புகழிலிருந்து பெருமையடையவேண்டும். பிறரைப்போல் தன்னால் வாழவோ, புகழடையவோ முடியாவிட்டால் பிறரை அழித்து வாழ எண்ணக் கூடாது. இப்படியான தியாக உள்ளம் எங்கெல்லாம் வாழ்கிறதோ அங்கெல்லாம் இறைவனின் கருணை நிச்சயம் கிடைக்கும்.

## தாயின் அன்புச் சேவை

தாய் இராப்பகலாய் குழந்தைக்கு வேண்டியதை கவனித்து செய்கிறாள். அவளிடம் நாம் நீ செய்த வேலைகளை விவரமாக எழுதித்தா என்றால் அவள் எழுதித்தருவாளா? அவள் செய்பவை ஏட்டில் அடங்கமாட்டா. நாம் வற்புறுத்தினால் நான் குழந்தைக்கு ஒன்றுமே செய்யவில்லையே என்று ஒரே வாக்கியத்தில் எழுதிக் கொடுத்துவிடுவாள். அவள் தன் வேலையின் விவரத்தை இவ்வளவு சுருக்கமாய்த்தருவது ஏன்? அதற்குக் காரணம் இருக்கிறது, அது என்னவென்றே அவளுக்குத் தெரிவதில்லை தன் குழந்தையிடம் இருக்கும் அன்பில் தான் எதுவுமே செய்யவில்லை என்று தோன்றுகிறது. குழந்தைக்காக அவள் படும் சிரமங்கள் கொஞ்சமல்ல. ஆனால் அவை அவளுக்கு சிரமமாக தோன்றுவதில்லை. ஆகையால் நம்முன் பெரிய நோக்கம் ஒன்று இருந்தால் நாம் அதை எய்துவதற்காக செய்துள்ளவை எல்லாம் நமக்கு மிகவும் குறைவாகவேபடும்.

மகாத்மா காந்தி

## சப்பாத்தி

தேவையானபொருட்கள்:
கோதுமைமா(ஆட்டாமா) ஒரு ருத்தல்
உப்பு, நெய் — தேவையான அளவு

மாவை உப்புடன் நீர் ஊற்றிப்பிசைந்து சிறிது நேரம் ஊறவைக்கவேண்டும். இம்மாவைப் பின்னர் உருண்டைகளாக உருட்டிப் பலகையில் வைத்துத் தட்டையாகச் சப்பாத்திகளைத் தட்டவும். தோசைக்கல்லை அடுப்பில் வைத்துச்சப்பாத்திகளைத் திருப்பிப்போட்டு வெந்தவுடன் எடுத்து நெய் தடவி அடுப்பில் உள்ள தணலில் சப்பாத்திகளைப்போட்டுக் கருகாமல் சுட்டெடுக்கவும்.

## தயிர் சட்னி

தேவையானபொருட்கள்:
தேங்காய் ஒரு பாதி.
வறுத்த கடலைப் பருப்பு 3 மேசைக்கரண்டி,
பச்சைமிளகாய், உப்பு, கடுகு — தேவையான அளவு

செய்முறை:-
தேங்காய், கடலைப்பருப்பு இவை இரண்டையும் சமமாகச்சேர்த்துப் பச்சை மிளகாய், உப்புஇவைகளைத் திட்டமாய்ச் சேர்த்து வைத்து அம்மியில் நன்றாக அரைத்து எடுத்துக்கொண்டு கடுகைத் தாளித்து இதில் சேர்க்கவும். இத்துடன் சிறிதளவு தயிரையும் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

# குடும்பச் சுடர்

தயாரிப்பு: குணம்

## தானாக இயங்கும் தொலைபேசி சாதனம்



சுயமாக, இயங்கி தொலைபேசி அழைப்புகளை பதிவுசெய்து அதற்குரியவருக்கு செய்தியை அளிக்கும் அற்புதமான கருவி ஒன்றை இங்கு படத்தில் காணலாம். 'என்ஸபோன்' என்ற இந்தக் கருவியை பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கின்றனர் காரியாலயத்திலோ, வீட்டிலோ எவரும் இல்லாத சமயத்தில் வரும் அழைப்புகளை பதிவுசெய்துவிடுகிறது இக்கருவி. தொலைபேசி அழைப்புக்களுக்கு எத்தகைய பதில் சொல்லவேண்டுமென்பதை இக்கருவியில் பதிவுசெய்து விட்டால்போதும் அது தானாகவே அழைப்புகளுக்கு பதில்சொல்லிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கும் மோகம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சமூதாயம் தந்த தீர்ப்பு. இந்நாளில்!

தனக்குப்பயன்இல்லாதது. தன் கொள்கைக்கு எதிரானது, அழிந்துபடவேண்டுமென்பது சித்தாந்தமாக இருக்கக்காண்கிறோம்.

பாலங்கள் தகர்க்கப்படுகின்றன. ரயில்கள் பெயர்க்கப்படுகின்றன. நாட்டின் யந்திரசிருஷ்டிகள், உணவுப் பண்டங்கள், உற்பத்திப் பொருள்கள் ஆங்காங்கு வீணுக்கப்படுகின்றன. அது தனக்குக்கிடையாத பொருள் என்ற எண்ணமும் எனவே அதனை அழித்துவிடவேண்டுமென்ற வேகவெறியும்எழுகிறது. இது தேசத்தில்விளைந்த பொருள். தேசத்தின் மூலைமுடுக்கிலுள்ள சமுதாயத்தின் பொதுச்சொத்து. அதனை அழிப்பது மக்களின் முயற்சியை, ஊக்கத்தை, நல்வாழ்வை அழிப்பதற்குச் சமம் என்று சொல்வாரும் இல்லை. உணர்வாரும்இல்லை.

தேசத்தின் சிறுதுரும்பையும் எவன், தானும் பயன்படுத்தாமல், பிறரையும் பயன்படுத்தவிடாமல் செய்கிருனே அவன்மக்கள்இடையில் பிறந்த அசுரன், அரக்கன்-குலத்தைக்கெடுக்கவந்த கோடரிக்காம்பு சமுதாய வளர்ச்சியில் நம்பிக்கை இல்லாத நஞ்சு மனத்தினன்.

இந்த அழிவு மனப்பான்மை, பலதுறைகளிலும் உண்டாகிவிட்ட புற்றுநோய். இது ஆக்கத்தின் எதிர்; வளர்ச்சிக்கு நஞ்சு. தேசஉடைமையாகப் பல தொழில்களை மாற்றுவதற்குத் தனியுடைமையாளர்கள் விரும்பினுலும் தேசம் வேண்டாமென்று தட்டிக் கழிக்கிறது. பொறுப்பே இல்லாமல் லாபத்தில் பங்கு பிரிக்கத்தான் தனியார்துறையினரும், அரசினர்துறையினரும் ஆசைப்படுகிருர்கள்.

பணத்தை நியாயவழியில் சம்பாதிக்கமுடியாது என்று பாமரன், பண்டிதன் வருமான வரி இலாகா, பொருளாதார நிபுணர், தத்துவ தரிசி, அயோக்கியன் உட்பட யாவரும் எண்ணுகிருர்கள். இது யந்திர வளர்ச்சியில் பிறந்த இந்நாள் மனப்பான்மை.

## சிந்து வெளி

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

### பின்லாந்து அறிஞர்களின் ஆய்வு

''இத்துறையில் பிறநாடுகளில் என்ன சாதிக்கப்பட்டுவருகிறது என்பதை நீங்கள் அறிவீர்களா'' என்று கேட்டேன்.

''சந்தேகமில்லாமல் அறிவோம். நாங்கள் அக்கறைகொண்டுள்ள இப்பிரச்னை குறித்து ஏராளமான நூல்களைப் படித்துவருகிருேம். இதுவிஷயத்தில் பின்லாந்து அறிஞர்கள் மேற்கொண்டுவரும் முயற்சிகளையும் கூர்ந்து கவனித்து வருகிருேம். 1965 ல் நாங்கள் கண்ட முடிவுகளுடன் ஏறத்தாழ ஒத்திருக்கும் அவர்களுடைய முடிவுகள் நாங்கள் பின்பற்றிவரும் முறைகள் சரியானவையே என்பதை உறுதிப்படுத்தியுள்ளன. நாங்கள் செல்லும் பாதையிலேயே அவர்களும் சென்றுவருகின்றனர்''

''ஒளிவுமறைவின்றி உங்களிடம் ஒரு கேள்வி கேட்கலாமா? சிந்து வெளி வாசகங்கள்பற்றிய புதிரை முற்றிலுமாக விடுவிப்பதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?''

''யாராலும் இந்தக் கேள்விக்குப் பதிலளிக்க முடியாது. ஆனாலும் ஒன்றுமட்டும் சொல்ல முடியும். இந்தப் புதிர் நாளையே கூட சிக்கறுக்கப்பட்டாலும் படலாம்.''

---

பொருள்உடைமை என்னும் நோயால் உலகமே அவதியும், அவநம்பிக்கையும் கொண்டு அல்லற்படுகிறது. அறிவுடைமைக்காக சிறுபகுதியிரும் அக்கறைப்படக்காணுேமே. ஆனந்த உடைமைபற்றி நினைக்கவே ஆள் இல்லையெனும் படித்தாக இருக்கிறது

இதென்ன விரக்தி உலகம்! விசித்திர உலகம்! பணவுடைமை உலகம்!

நன்றி: திட்டம் ஆகஸ்ட் 70

## குருகுலம்

(11-ம் பக்கத்தொடர்ச்சி)

நான் அங்குள்ள பிள்ளைகளை மறைமுகமாக கேள்விக்கு மேல் கேள்வி போட்டு 'துளை'த்தேன். ஒருகுழந்தையாவதுகுறைசொல்லவில்லை! அவர்கள் உள்ளம் நிறைந்திருந்தது. கவலையில்லாத வாழ்க்கை வாழ்கிருர்கள்!

### பிரிய மனமில்லை

பெரியார் கதிரவேலு அவர்களின் துணைவியார் சின்னம்மா அம்மையார் 65 குழந்தைகளுக்கும் தாயாக இருந்து கவனிக்கிருர்!

புனிதப் பணியாற்றும் இவர்கள் பணியை நெஞ்சார வாழ்த்திக்கொண்டு பிரியமனமில்லாமல் விடைபெற்றேன்.

## நாகர்..

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

அழைத்து வரும்படி கட்டளையிட்டான். தளபதி கட்டளைப்படியே அவ்வூர் மக்களை அழைத்து வந்தனர். தளபதி அவ்வூர் மக்களை நோக்கி 'உங்கள் பொலிவிழந்த முகங்களையும், மெலிந்த தேகங்களையும், பார்க்க எனக்குக் கவலையாய் இருக்கிறது. நீங்கள் நீர்வள நிலவளமற்ற இந்தக் கிராமத்தில் இருந்து உங்கள் வாழ்நாளை வீணிற் கழியாது நீர்வள, நிலவளங்களும், ஏர்பெறு வீதிகளும், தார்பெறு மாடமாளிகைகளும் பொருந்திய திருவனந்தபுரத்தில் வந்து குடியேறி உங்கள் வாழ்க்கையை இன்புடன் கழிக்கலாம். அத்துடன் உங்களுக்கு வேண்டிய உணவு, உடை ஆகியவற்றை நாங்கள் தருகின்ருேம். நீங்கள் எங்களுடன் வாருங்கள்' எனக்கேட்கவே அவர்கள் அதற்கு உடன்பட மறுத்தனர். இறுதியாகத்தளபதி இவர்களுடையபிடிவாதத்தை அறிந்து ஒவ்வொரு குடிக்கும் ஓர் ஆள்வீதமாகுதல் தங்களுடன் வருவதற்குச் சம்மதிக்குமாறு கேட்டும், அதற்கு அவ்வூர் மக்கள் சம்மதிக்காது போகவே அவ்வூர் மக்களை வலிந்து பிடித்துக் கப்பலில் ஏற்றுமாறு படைக்குக் கட்டளையிடவே பட்டாளத்தினர் மக்களை ஈவிரக்கமற்ற முறையில் பிடித்துக் கப்பலில் ஏற்றினர். தப்பிய மக்கள் தங்கள் குலதெய்வமாகிய நாகதம்பிரான் முன்னிலையில் சென்று 'எம்பதி மக்களை அன்னியர் சூறையாடுகின்றனரே, அப்பனே இந்நிலையிலுமா மௌனம் சாதிப்பது? எம்பெருமானே அடியாற்கருள் பாலனே உன் கண்ணென்ன குருடானதோ?' காது செவிடானதோ? என ஓலமிட்டு கண்ணீர் மல்கக் கதறிக் கெஞ்சினர்.

கப்பலில் ஏற்றிய மக்கள் தவியாத்தவிப்புத் தவிக்கத் தளபதி கப்பலை புறப்படுவதற்காகச் செலுத்தினுர். கப்பல் இடம்விட்டு நகராது நின்ற நிலையிலேயேநின்றது. கப்பலை இயக்குவதற்காக இவர்கள் எடுத்த முயற்சியில் தோல்வியேகண்டனர். பாய்மரத்தைச் செவ்வை செய்வதற்காக மேலே அண்ணார்ந்து பார்த்தான், மாலுமி ஒருவன். அங்கு நாக பாம்பொன்று படமெடுத்தாடிய நிலையிலே இருந்தது. அரையில் இருந்த உறைவாளை எடுத்து பாம்பு இரண்டு துண்டாகும்படி வெட்டினுன். வெட்டியபாம்பிலிருந்து பறந்த இரத்தத் துளிகள் யாவும் நாக பாம்புகளாக மாறின. இதைக் கண்ட கப்பற்காரரும் மக்களும் அச்சமுற்று நடுங்கி ஒடுங்கினர். பாம்பென்றால் படையும் நடுங்குமென்பதற்கு இவர்கள் எவ்வளவு

(15-ம் பக்கம் பார்க்க)

## சிறுகதை

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

துத் தன்னேடு சேர்த்து அணைத்துக்கொள்வது கனகசபாபதியருக்கு நன்ருகத் தெரிகிறது. யோகன் அவளை உதறி அப்பால் தள்ளிவிட்டுச் சீறுகிருன்.

'சீ...இதற்குத்தானு என்னை இங்குகூட்டிவந்தாய்? நடராசா வரச்சொன்னதாகச் சொன்னியே?''

''அவரும் பிள்ளைகளும் மாமிவீட்டுக்குப் போயிட்டார்கள். காலமைக்குத்தான் வருவார்கள்... ஆவரைப்பற்றிப் பயப்படவேண்டாம். நான் பர்த்துக்கொள்ளுவன்...'' அவள் எழுந்து வந்து மீண்டும் அவனை...

''சீ...அங்காலைபோ...நான் பெண்களைத்தெய்வத்துக்குச் சமமா மதிக்கிற குடும்பத்தில் வந்தனுன். என்ர சினேகிதனுக்குத் துரோகம்செய்ய நான் சம்மதிக்கமாட்டன்... உனக்குக் கற்பொழுக்கம் என்ருல் என்னவென்று தெரியாமலிருக்கலாம்... ஆனுல் எனக்குத் தெரியும்... நான் போகிறேன்...'' புயலைப் போல் வெளியேறிய யோகன் தென்னந்தோப்பைக் கடந்து கோவிலடியை நோக்கி நடக்கிருன். கனகசபாபதியரின் உடம்பு புல்லரிக்கிறது. யோகன் எவ்வளவு பண்பானவன்? அவன் மீதா நான் சந்தேகப்பட்டேன்? கனகசபாபதியர் விரைந்து தென்னந்தோப்பைக் கடந்து கோவிலடியை நோக்கி வருகிருர். அவருடைய மனைவி நல்லமாம் அதே இடத்தில் அமர்ந்து கொண்டிருக்கிருள். அவருடைய மனம் வேதனையால் அழுகிறது. இந்த உத்தமி மீதா நான் சந்தேகப்பட்டேன்? மனம் ஓலமிடுகிறது.

''என்ன இதிலையே குந்தியிருக்கிருய்...? அம்மனுக்குச் சேவல்பலிகொடுக்கும் நேரமாகிவிட்டதுபோல் இடக்கு... வா ...போய்ப் பார்ப்பம்...'' கனகசபாபதியர் தமது மனைவியை அன்புடன் நோக்குகிருர். நாலஞ்சு நாட்களாக எதற்காகவோ தன்னுடன் மனமொன்றிக் கதைக்காமல் திரிந்த தன் புருஷன் ளனம்மாறித்தன்னுடன் கதைத்துவிட்ட மகிழ்ச்சியில் நல்லம்மா எழுந்து அவருடன் கோவிலை நோக்கி நடக்கிருள், தங்களுக்குக் குழந்தைகள் இல்லையே என்னும் குறையைக் கூட மறந்தவர்களாக இருவரும் சல்லியம்மனின் கோவிலுக்கு வருகின்றனர். அம்மனுக்குப்பலி கொடுப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. கனகசபாபதியர் முழுமன அமைதியுடன் கர்ப்பக்கிருகத்தினுள் வீற்றிருந்த அம்மனின் திருவுருவத்தைக் கண்ணீர் மல்க உற்றுநோக்குகிருர். அவருடைய மனம் நிறைவுபெறுகிறது. அம்மனின் அருள் பெற்றுவிட்ட மகிழ்ச்சியில் அவர் அசையாமல் அம்மனின் சிலையை நோக்கியபடி சிலையாக நிற்கிருர்.

(யாவும் கற்பனை)

வருட பலன்

## இன்று பிறந்த தினமா?

### 14-10-1970

அடுத்த பிறந்ததினம்வரை நடக்கவிருபப்து என்ன? கோள்கள், எண்கள், அமைவு கொண்டு பலாபலன் தரப்படுகின்றது.

இவ்வெண்ணில் 14= 5, பிறந்தோர், ஆளப் பிறந்தோர் என்றே கூறலாம். ஜவஹர்லால்நேரு, ஆரும் ஜார்ஜ்மன்னர் இவ்வெண்காரரேயாகும். இவர்க்கு இன்றுமுதல் நடக்கவிருக்கும் ஓராண்டுக் காலத்தில் கஷ்டமான வாழ்க்கைரேதான் உண்டு. சினேகிதர் பலர் உண்டெனினும் அவரால் ஏமாற்றப்படவும் கூடும். ஒருசிலர் சிறைபோக வேண்டியும் வரும். 1971 மாசி மாதத்திற்குள் தொழில் சிறப்பு உயர்ச்சிபெற வாய்ப்புண்டாகும். அதிர்ஷ்ட லாபச் சீட்டுவகை ஈடுபாடு இவ்வாண்டு நடுப்பகுதியில் பெரும் பலனளிக்கலாம் வியாபாரிகட்கு அதி உன்னத காலமேயாகும். கால். கை முறிவு ஏற்படக்கூடிய விபத்தை இவர்கள் எதிர்க்கவேண்டியிருப்பதால் சிறிது முன் எச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும். காதல் ஈடுபாடு காண்பீர். ஆயினும் வெற்றி கிட்டுவது துர்லபம்.

## உங்கள் இராசி பலன்

14—10—1970 — 21—10—1970

**மேடம்**

எதிர்பாரா வகை நன் மதிப்பு, புகழ், கீர்த்தி கிட்டும். கற்ருேரால் கௌரவிக்கப்படுவீர். குடும்பச் சிறப்புண்டு. பிறர்நலன் கருதிப் பிரயாணம் மேற்கொள்ள ஏது உண்டு. வாரஇறுதியில் பணநெருக்கடி தோன்றலாம். தூர உறவினரிடமிருந்து சுபசெய்தி கிட்டும். வியாபாரிகள் நிலைமை முன்னேற்றம் காணமாட்டாது.

**இடபம்**

எதிரிகதொல்லை நிரம்பஉண்டு. தனிவழிப் பிரயாணம் தவிர்க்கவும். வாகன வகை நஷ்டம் ஏற்படலாம். எடுத்த முயற்சிகள் முற்றுப் பெருத நிலை காண்பீர் உடலில் வாய்வு சம்பந்தப்பட்ட நோய்கள் தலைகாட்டும். புத்திரப்பேறு கிட்டும்.

**மிதுனம்**

பெரியார் ஒருவரின் சினேகம் கிட்டும். அவ்வழிப் பேருதவி பெறவாய்ப்புண்டு. தொழிலிடத்தில் சிறப்பு உண்டு. மேலதிகாரிகளின் நன்மதிப்பு கிட்டும். பொதுவாக எவருக்கும் பணமுடக்கம் தோன்ற ஏது உண்டு. யாத்திரை மேற்கொள்வீர்.

**கடகம்:**

வாழ்க்கையில் சலிப்பு ஏற்படும் தேவையற்ற செலவினம் அதற்கேற்ப பணவருவாய் கிட்டாது. கடன்பட வேண்டியநிலை ஏற்படும். மனையில் மங்கல கருமங்கள் இடம்பெறலாம் கடல்பிரயாணம் தவிர்க்கவும்.

**சிங்கம்**

காதல் ஈடுபாடு உண்டு. அவ்வழி வெற்றியும் உண்டு. மாணவர் பலர் படிப்பில் முன்னேற்ற நிலை காண்பர். தொழில்பேறு கருதி முயற்சி மேற்கொள்வீர். பூரண வெற்றி கிட்டாது. இருதயம் சம்பந்தமாய் நோய்தோன்றலாம். கடும்தொழில் தீது.

**கன்னி**

தொழிலுயர்ச்சி கருதிப் பிரயாணம் மேற்கொள்வீர். வாரநடுப்பகுதியில் சந்தோஷசெய்தி கிட்டும் புத்திரச்சிறப்புண்டு. உல்லாசப் பிரயாணம் மேற்கொள்ளுவீர். பணவகையில் சமநிலைதான். கமத்தொழில்விருத்தி உண்டு.

**துலாம்**

மனதில் ஒருவகைப் போராட்டம் உள்ளத்தில் பீதி நிம்மதிதேடி அலைவீர் கஷ்டத்தின் மேற் கஷ்டம் காண்பீர். குருபகவான்நிலை திருப்தியளிப்பதாயில்லை. தேவையற்ற வாக்குவாதம் கலகத்தில் முடிவு காணும். குடும்பச்சச்சரவு உச்சநிலை காணும்.

**விருச்சிகம்**

வரவிற்குமிஞ்சிய செலவினம் குடும்ப விஷயங்கள் விறுவிறுப்புடன் நடைபெறலாம். பகையாளிக்கும் நன்மையே புரிவீர். வீடு அமைத்தல், புனரமைப்பு ஆகியன இடம்பெறும். விவாக விஷயங்கள் பலனளிக்கமாட்டாது. வியாபாரிகட்கு மந்த சூழ்நிலையேதான்.

**தனு:**

இல்வேந்தன் பாதிப்புநிலை காண்பதால் இவ்விராசிக்காரர்க்கு வாரம் முழுமையும் கஷ்டபலனதான். எதிர்பாராவகைப் பண உதவிகிட்டும். ஆயினும் பணம்பற்ருக் குறைதான். புத்திரஉற்பத்தி காண்பீர். படிப்பில்நாட்டம்

**மகரம்**

சொல்லில் ஒன்று செயலில் ஒன்ருகக் கருமமாற்றுவீர். பலரின் எதிர்ப்பையும் சம்பாதித்துக்கொள்ளுவீர். குடும்பத்தில் ஓரளவு சந்தோஷ சூழ்நிலை காணலாம். சக ஊழியரின் உதவி கிட்டும் கடின பிரயாணம்

**கும்பம்**

எதிர்பார்த்த அளவு முன்னேற்றம் கிட்டாது ஆயினும் விடாமுயற்சி பலனளிக்கும் தொழில் முன்னேற்றம் கருதிய பிராயாணம் உண்டு பணநிலை சிரமடையமாட்டாது வார இறுதியில் பொன்பொருள் சேரலாம் உடலிளைப்பு, நரம்புத் தளர்ச்சி தோன்றலாம்

**மீனம்:**

தரும சிந்தையுண்டு பொதுப்பணி பல மேற்கொள்வீர் அதிஷ்டம் பெரும் வாய்ப்புண்டு பல விஷயங்களிலும் வெற்றி காண்பீர் அரசியலாருடன் கலந்துரையாடும் வாய்ப்பு கிட்டும் பலகாலமாகஇருந்த மனச்சஞ்சலம்நீங்கும் குடும்பத்தில் சகஜநிலைதோன்றும்

ஜோதிஷமணி மேல்காரவை
-காவ.சிவப்பிரகாசன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெஸ்லிசினிமா**
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா ,பிரீபோயா 2-30
மனோகர்—மணிமாலா
நடித்த
**எதிரிகள் ஜாக்கிரதை**

**MANOHARA**
Jaffna
Daily 4-45, 7 & 9-45 p m
Suzy Kendall
James Booth
in
FRAULEIN DOKTOR
(Strictly for Adults)

**ஸ்ரீகாலிங்கன்**
இணுவில்
தினசரி 2-30, 6-30, 9-30
சிவாஜி-பத்மினி
நடித்த
**செந்தாமரை**

**REGAL**
Jaffna
Daily: 4-45, 7 & 9-45 p.m.
Poya days 4 Shows
GLAMOROUS WOMEN OF THE WORLD
(Adults only)

**ராணி**
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர்—நிர்மலா
ஜி. வரலக்ஷ்மி — நாகேஷ்
நடித்த
**உயிரா மானமா**

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
கண்ணன் - ராதிகா
தேங்காய் சீனிவாசன்
நடித்த
**ஒரு விரல்** (ஒரு மர்ம சித்திரம்)

7-வது வாரம்
**வெலிங்டன்** யாழ்நகர்
(2-30, 6-30, 9-30) போயா தினங்களில் 4 காட்சிகள்
கிங்ஸ்லி (கொழும்பு)
தாய்க்குலத்தின் பெருமைக்கும் தமிழகத்தின் மாண்புக்கும் உதாரணமாய் வாழ்ந்த விஜயாவின் உள்ளத்தை உருக்கும் கண்ணீர் காவியம்.
உணர்ச்சி ஓவியம் . . .
★ ஏ.வி.எம்.ராஜன்
இந்திய ஜனாதிபதியின் 'ஊர்வசி' பரிசுபெற்ற ★ சாரதா
காஞ்சனா, முத்துராமன், ரி. எஸ். பாலையா,
நாகேஷ், சுந்தரராஜன், பேபி ரோஜாரமணி
நடித்த
ஸ்ரீ விநாயகா சுப்ரியா கம்பைன்ஸ்
**துலாபாரம்**
(தமிழ்)
டைரக்ஷன்: வின்ஸன்ட்
(1969-ம் ஆண்டின் சிறந்த இயக்குனர்)

கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
வெகு விரைவில் வெலிங்டன் யாழ்ப்பாணம்
★ சிவாஜி ★ சௌகார் ஜானகி
சிவகுமார், வாணிஸ்ரீ, பாரதி
மற்றும் பலர் நடித்த
ஏ. வி. எம். புரடக்ஷன்ஸ்
**உயர்ந்த மனிதன்**
[1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய பாராட்டைப் பெற்றது]

**யாழ். வின்ஸர்** திரையில்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி கணேசன் — காஞ்சனா
மஞ்சுளா - நாகேஷ் - ரமாபிரபா
நடித்த
**சாந்தி நிலையம்**


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

யக்கச்சி கிழக்குத் தோட்டம் நூற்றெழுபது ஏக்கர். பத்து அல்லது கூடிய ஏக்கரைக் கொண்ட துண்டுகளாகப் பிரித்து விற்கப்படும். கண்டி ரோட், பளை, யக்கச்சி சந்தியிலிருந்து முக்கால் கட்டை. தென்னை, சிறு பயிர்கள், பாற்பண்ணை, கோழிப்பண்ணைக்கு ஏற்ற நிலம், அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறியவர்களுக்கு அரிய சந்தர்ப்பம். லான்ட் இன்வெஸ்ற்மெண்ட், 6, மெயின் வீதி, யாழ்ப்பாணம். 2325

நவாலியில் 3 1/2, 4 1/2 பரப்புக்கொண்ட ஆறு கட்டிடக் காணித் துண்டுகள் பிரதான வீதிக்கு அருகாமையில் விற்பனைக்குண்டு. மேலதிக விபரங்களுக்குத் தொடர்புகொள்ளவும். L. S. C. கனகசிங்கம், சாமியல் மான் வீதி, உடுவில். 2322

கார்:

CL 7165 இலக்கமுள்ள ஏ போர்ட்டி கார் விற்பனைக்குண்டு. சந்திரா பேணிச்சர் பலஸ், கே. கே. எஸ். ரோட், சுன்னாகம். 2332

### தேவை

நல்ல நிலையிலுள்ள தமிழ், ஆங்கில தட்டெழுத்துக் கருவிகள் தேவை. ஆசிரியர்கள் தேவை (இருபாலாரும்). முழுவிபரத்துடன் விண்ணப்பிக்கவும். பிராஜ்மல் கல்விக்கழகம், கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு. 2317

### கல்வி

பிராஜ்மல் கல்விக்கழகம், கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு. க. பொ. த. சாதாரண வகுப்புக்கான கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம், கணக்கியல், சிங்களம் ஆகிய பாடங்களுக்கான மீட்டல் வகுப்புகள் நடைபெறுகின்றன. உடன் சேரவும். 2318

# வடமராட்சிப் பகுதியை இ. போ ச. புறக்கணிப்பா?

புலோலி, செவ்

பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பஸ்சேவை நாளுக்கு நாள் மோசமடைந்துவருகிறது. தினமும் நூற்றுக்கணக்கான பிரயாணிகள் பஸ் தரிப்பு நிலையங்களில் நீண்ட நேரம் காத்திருக்கின்றார்கள். வடமராட்சிப்பகுதி பஸ்சேவையை இ. போ. சபை புறக்கணித்து வருகிறது என மக்கள் கருதுகிறார்கள்.

வடமராட்சிபஸ்பிரயாணிகள் சங்கம் போக்குவரத்து சபைத்தலைவருக்கு அனுப்பியுள்ள ஒரு மகஜரில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அந்த மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

அரசாங்க இலாகாக்களில் வேலைசெய்யும் ஊழியர்கள் தினமும் காலை 8 மணி முதல் 10 மணிவரை பஸ் தரிப்பு நிலையங்களில் காத்து நிற்கின்றனர். இதனால் நேரத்திற்கு வேலைக்குப் போகமுடியாமல் கஷ்டமடைகிறார்கள்.

இலங்கைப் போக்குவரத்துச்சபை வடமராட்சியில் நல்லமுறையில் சேவையாற்றுவதில்லை. பிரயாணிகளின் கஷ்டத்தைப்பற்றி உடனுக்குடன் மேலதிகாரிகளுக்கு அறிவித்தும் பலன்கிடைக்கவில்லை. இதுபற்றி ஆவன செய்வீர்களா?''

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் 14-10-70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 பௌத்தநற்சிந்தனை, 6-40 துதிப் பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 இவ்வார பிரமுகர்கள், 8.00 பௌத்தநிகழ்ச்சி, 8-15 பேச்சு, 8-30 சைவநீதி.

344 மீ. அன்ட் 49 மீ.

9-30 முஸ்லிம் நிகழ்ச்சி, 10-00 20 கேள்விகள், 10-30 படத்திலிருந்து, 11-15 சிறுவர் மலர், 12-00 எமதுதிதி, 1-00 பெண்ணுலகம்.

344 மீ. அன்ட் 49 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 பாட்டு, 6-15 பாமாலை, 6-30 செய்தி விமர்சனம், 7-00 தாளவாத்தியக் கச்சேரி, 7-30 விவேகச்சக்கரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நிகழ்ச்சித்தொகுப்பு, 9-45 பாட்டு, 10-30 செய்தித் தொகுப்பு.

## களவு! 9 மாதக்கடுழியம்

முல்லைத்தீவு, செவ்

யாழ்ப்பாணம் சங்கானையைச் சேர்ந்த கந்தையா-செல்லத்துரை என்பவர் இவ்வருடம் ஆவணி மாதம் 17-ம் திகதி இரவு வற்றாப்பளையில் உள்ள வீடொன்றில் புகுந்து ரூபா 600 பெறுமதியான உடைமைகளைக் களவாடினாரென முல்லைத்தீவுப்பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு முல்லைத்தீவு நீதிபதி திரு. எம். பி. ஜி. திசநாயக்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதுடன் தான் இதற்குமுன் மூன்றுதடவை சிறைவாசம் அனுபவித்ததையும் ஒப்புக்கொண்டார்.

நீதிபதி எதிரிக்கு ஒன்பது மாதக் கடுழியச்சிறைத்தண்டனை விதித்து, சிறைவாசம் முடிந்தபின் இருவருடம் பொலிஸ் கண்காணிப்பில் இருக்கவும் உத்தரவிட்டார்.

# நாகர் வாழ்ந்த . .

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

விதிவிலக்காகமுடியும்? இவர்கள் அவ்வாறாகக் கதிகலங்கியிருக்கும் சமயத்தில் கப்பலிலுள்ள ஒருவன் பக்திப்பரவசத்தால் திடீரென ஆவசமுற்று ஆடிச் சென்று கப்பற் தளபதியை நோக்கி ''என் பதியில் வாழும் மக்களை இறக்கினால்தான் கப்பல் நகரும்'' எனக் கூறினான். அதற்கு தளபதி ''கப்பலில் பல ஊர்மக்களும் இருக்கின்றனர், உன்பதி மக்களைமாத்திரம் எவ்வாறு இறக்கமுடியும் எனக் கேட்டான்; அதற்கு ஆவேசக்காரன் தனக்கு ஒருபிடிமாதரும்படி கேட்கவே ஒருபிடி மாவைக் கொடுத்தனர் ஆவேசக்காரன் கப்பலில் இருந்தவர்களுக்கு அள்ளித் தெளித்தான். மாக்குறியானது என் பதி வாழ் மக்களுக்கன்றி மற்றையோர்க்குப் படாது எனக்கூறித் தெளித்த மாக்குறியானது சிலருக்கு மாத்திரமே பட்டது. எனவே அவ்வாறுமாக்குறிபட்டோர் யாவரையும் கப்பலிலிருந்து இறக்கினர். கப்பலிலிருந்து மாக்குறியுள்ள ஒவ்வொருவரையும் இறக்கும்பொழுதும் அவர்களுடன் கூட ஒவ்வொரு பாம்பும் இறங்கியது. கப்பலின் மேற்களத்தில் இருந்த மாக்குறியுள்ள மக்களும் பாம்புகளும்இறங்கியும் கப்பல் நகராது நிற்கவே தளபதி ஆவேசக்காரன் மீது ஆத்திரமடைந்தான். ''நீ எங்களை ஏமாற்றியதுடன் உன் காரியத்தையும் சாதித்துக்கொண்டாய். உன்னை நாங்கள் உயிருடன் விடமாட்டோம்'' எனத்தளபதி ஆவேசக்காரனை நோக்கிச் சொன்னான். ஆவேசக்காரன் ''ஐயகோ. நீங்கள் அவசரப்படுவதாலோ ஆத்திரப்படுவதாலோ பயனில்லை. என்பதி அழகியும், அவளது விளையாட்டுத்துணையாகிய பூனையையும் கீழ்த்தட்டில் மறைத்து வைத்திருக்கின்றீர்கள். அவர்களையும் தரையில் இறக்கினாலன்றி கப்பல் நகராது'' எனக்கூறினான். ஆவேசக்காரன் சொற்படியே கீழ்த்தட்டில் இருந்த அழகியையும், விளையாட்டுத்துணையாகிய பூனையையும் இறக்கிய பொழுது அங்கு அவர்களுடன் இருந்த பாம்பும் அவர்களுடனே இறங்கியது.

இதன்பின்னர் கப்பல் தானாகவே நகர ஆரம்பித்தது. இவ்வற்புதங் கண்ட மக்கள் முருகதம்பிரான் திருவடியிறையை அன்றுமுதல் இன்றுவரை அவரின் அற்புதக்காட்சி தோன்றிய 7-ம் நாள் உற்சவமான கப்பல் திருவிழாவைத் தவறாது கொண்டாடி வருகின்றனர்

## தொழிற்பயிற்சி வகுப்புகள்

கோட்டை, செவ்வாய்

நேற்று கண்டி குவீன்ஸ் ஹோட்டலில் தென்கிழக்காசிய தொழிற்பயிற்சி வகுப்புகளை தொழில் அமைச்சர் திரு. எம். பி. டி. சற். சிறிவர்த்தன ஆரம்பித்து வைத்தார்.

தென்கிழக்காசிய நாடுகளின் தொழில் துறைகளில் ஈடுபட்ட 35 பிரதிநிதிகள் இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்கிறார்கள். தொழில்முறைகள் பற்றிய கருத்தரங்கம் ஒன்றும் நடைபெறவிருக்கிறது.

மேற்படி பயிற்சி வகுப்புகளும் கருத்தரங்கும் சர்வதேச தொழில் நிறுவனத்தின் ஆதரவில் நடைபெறுகின்றன.

## கொல்வின் பயணமானார்

கோட்டை, செவ்வாய்

தோட்டத் தொழில் அமைச்சரும், அரசியல் அமைப்புத் திட்ட அமைச்சருமான கொல்வின் ஆர். டி. சில்வா நேற்று மாலை கோலாலம்பூருக்குப் பயணமானார்.

கோலாலம்பூரில் நடைபெறும் றப்பர் உற்பத்தி நாடுகளின் மகாநாடொன்றில் கலந்து கொள்ளவே அமைச்சர் கொல்வின் கோலாலம்பூர் சென்றுள்ளாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கிய அறிவித்தல்

1970 நடப்பு வருடத்திற்கு எமது விளம்பரம், உபகாரநிதி, மற்றும் பரிசுகளுக்கு எம்மால் ஒதுக்கப்பட்ட நிதி முடிவடைந்துவிட்டபடியால் மேற்கொண்டு விளம்பரம் எதுகாரணம் முன்னிட்டும் எவருக்கும் கொடுபடமாட்டாது என்பதை அன்புடன் அறியத் தருகிறோம்.

ஆர். வி. ஜி. பீடி

'உற்பத்தியாளர்'

47, பீச்ரோட், யாழ்ப்பாணம்.


## மணிமொழி!

மனத்திலே வியர்த்தமான எண்ணங்கள் எழாமல் நாம் காத்துக்கொள்ள வேண்டும். யாராவது திடீரென்று, 'நீ இப்பொழுது என்ன எண்ணிக் கொண்டிருக்கிறாய்?' என்று கேட்டால், உடனே இன்னது என்று பயமின்றிப் பகிரங்கமாகச் சொல்லக்கூடிய விஷயங்களைப் பற்றி மட்டுமே எப்பொழுதும் மனத்தில் எண்ணும்படி பழகவேண்டும்.

0 0

பொதுஜனப் பிரயோசனமான காரியங்களில் ஈடுபடாத காலத்து அயலாரைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டே உன் வாழ்நாளை வீணாக்காதே. னில் பிறர் பேஎன்ன நினைக்கிறார்கள், என்ன பேசுகிறார்கள், என்ன செய்கிறார்கள், என்று நீ நினைத்துப் பார்க்கும் நேரத்திலெல்லாம் உன்னால் செய்யக்கூடியதை செய்யாதொழிகிறாய்.

—மார்க்ஸ் அவுரேலியஸ்


எமது தீபாவளி

மலிவு விற்பனை

15 முதல் 28 வரை

தீபாவளி பண்டிகையை

சிறப்புடன் கொண்டாட

தரமான ஜவுளிகளைத்

தெரிவு செய்ய

ராஜ்கோபால்ஸ்

[பிரபல ஜவுளி மாளிகை]

36/1 பெரியகடை, யாழ்ப்பாணம்.


# ஆயுர்வேத மருந்துச் சரக்கு இறக்குமதியை அரசு எடுக்க வேண்டும்

## வைத்திய சங்கக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், புதன்

தற்போது தனியார் மூலம் இறக்குமதி செய்யப்படும் சித்த ஆயுள்வேத மருந்துச்சரக்குகளை ஆயுள்வேத கூட்டுஸ்தாபன மூலம் இறக்குமதி செய்யபடவேண்டும் என்று அரசாங்கத்தைக்கோரும் தீர்மானமொன்று அகில இலங்கைச் சித்த ஆயுள்வேத வைத்திய சங்கத்தினரின் 39-வது ஆண்டு வருடாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

குறிப்பிட்ட மருந்துச் சரக்குகளின் விலை உயர்ந்தும் சரக்குகள் கிடைப்பதில் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளதால் ஆயுள்வேத கூட்டுஸ்தாபனம் இதில் கவனம் செலுத்தி, டாக்டர்களுக்கு சரக்குகள் கிடைக்க வசதி செய்து கொடுக்கவேண்டுமெனக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

கீரிமலை சிறுப்பர் அரங்கில் வைத்திய கலாநிதி எஸ். பி. ஈ. இன்னுசித்தம்பி தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

ஆயுள்வேத அவுடத கூட்டுச் சபை நிர்வாக அதிகாரியும், வைத்தியசபை பதிவாளருமான டாக்டர் டீ.எச்.எதிரிசிங்க, ஆயுள்வேதகமிஷனர் திரு. விமால்நவகமுவ, வைத்தியசபை அங்கத்தவர் டாக்டர் எம் சி. சந்திரசேன, ஆயுள்வேத வைத்திய சம்மேளனக்காரியதரிசி வைத்திய சிரோன்மணி, பண்டிதர் ஆரியதாசா குமாரசிங்கா ஆகியோர் கூட்டத்தில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர்.

பின்வரும் தீர்மானங்களும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

மட்டக்களப்பு, மன்னார், திருக்கோணமலை ஆகிய பகுதிகளில் சித்த ஆயுள்வேத ஆஸ்பத்திரிகளை நிறுவ வேண்டும்,

புதிதாக நிறுவப்பட்டுள்ள பஞ்சகர்மா சிகிச்சை நிலையத்தில் ஆயுள்வேத சித்த யூனானி பிரிவுகள் இடம் பெற வேண்டுமென இச்சங்கம் வற்புறுத்துகிறது.

பரம்பரை சித்த வைத்தியர்களின் பிள்ளைகள் பலர் வைத்தியக் கல்லூரிகளில் பிரவேசித்து கல்வி பெற்று பதிவு செய்துகொள்ள முடியாதிருப்பதால் அவர்களுக்கு 'வைத்திய சாஸ்திரி' பயிற்சி பெறவும், பரீட்சை எடுக்கவும் வழி வகுக்க வேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்களின் பொறுப்பில் இயங்கி வரும் ஆயுள், சித்த, யூனானி வைத்தியசாலைகளை ஆயுள்வேத திணைக்களம் நேரடியாகப் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும்.

தற்போது உள்ளூராட்சி மன்றங்களில் வேலை செய்யும் வைத்திய உதவியாளர்களுக்கு அவுடத செயல்முறைப் பயிற்சி வகுப்புகளை நடாத்த வேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள ''பொக்கணை'' எனும் பகுதியையும், மன்னார் மாவட்டத்திலுள்ள ''தள்ளாடி'' எனும் பகுதியையும் மூலிகைத் தோட்டங்கள் அமைப்பதற்குப் பயன்படுத்த வேண்டுமென ஆயுர்வேத திணைக்களத்தை இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது.

சித்தவைத்தியத்தை தொடர்ந்துபயிலும் விருப்பமும் ஆர்வமுமுள்ள சங்க அங்கத்தவர்கள் வருடாவருடம் மூவரைபிறநாடுகளுக்கு அனுப்பி பயின்றுவர இச்சங்கம்வசதியளிக்கத்தீர்மானிக்கின்றது. இதற்கு வேண்டிய அந்நிய செலாவணி முதலிய உதவிகளை ஆயுர்வேத இலாகாசெய்துதரவேண்டுமெனகேட்டுக் கொள்கிறது.

---

தீடீர் விநாயகர் சிலை

## திட்டமிட்டு வைக்கப்பட்டதாம் கான்ஸ்டபிள் வேலை நீக்கம்

சென்னை, ஒக் 13

தியாகராய நகரில் திடீரெனத் தோன்றியதாகக்கருதப்பட்ட விநாயகர் சிலையை பொலிசார் அப்புறப்படுத்தியுள்ளனர். இச்சிலைவேண்டுமென்றேகொண்டு வந்து வைக்கப்பட்டிருந்தது என்பதை உளவு பொலிசார் கண்டுபிடித்ததைத் தொடர்ந்து அங்கிருந்து அகற்றப்பட்டது.

சிலையை அங்கு இரகசியமாகக் கொண்டு வைத்தவர் என்றுகருதப்படும் மாம்பலம் ஹெட் கான்ஸ்டபிள் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

இதுபற்றிக் கூறப்படுவதாவது:-

திடீரெனச் சிலை காணப்பட்ட இடத்தில் மஸூதி ஒன்றை அமைக்க அரசாங்கம் முடிவு செய்திருந்ததாகவும் இத்திட்டத்தை முறியடிப்பதற்காக குறிப்பிட்ட ஹெட்கான்ஸ்டபிள் தனது சொந்தப் பணத்தில் ரூபா 71 கொடுத்து இச்சிலையை வாங்கி அந்தஇடத்தில் பிரதிஷ்டை செய்ததாகவும் தெரியவந்தது.

இச்சிலைபற்றி பொதுமக்கள் கவனத்தை ஈர்க்கும் பொருட்டு சிலையை ஸ்தாபித்த விடியற்காலைவேளையில் பட்டாசை வெடிக்கச் செய்து அவர் அகன்றுவிட்டாராம்.

விசாரணையின் போது ஹெட்கான்ஸ்டபிள் செல்வராஜா ஆழ்ந்த தெய்வபக்தி கொண்டவர் என்றும் அடிக்கடி 'நமசிவாய' என்று சொல்லிக்கொண்டிருப்பவரென்றும் தெரியவந்தது.

இது சம்பந்த[illegible] ரணை நடத்திய[illegible] குறிப்பிட்ட இடம் மசூதி கட்டுவதற்காக முஸ்லிம்களிடம் கையளிக்கப்படுமா? என்ற வினா விடுக்கப்பட்டபோது யாரையும்புண்படுத்தாத விதத்தில் முதலமைச்சர் முடிவு செய்வார் என்று தெரிவித்தார்.

அப்புறப் படுத்தப்பட்ட பிள்ளையார் சிலையை மீண்டும் பழைய இடத்தில் பிரதிஷ்டை செய்யும்படி அரசாங்கத்திடம்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது, அவ்வறிக்கையில் நீதிக்கமிஷன் ஒன்றின்மூலம் விசாரணை நடத்தப்படவேண்டுமென்றும் கேட்கப்பட்டுள்ளது.

தியாகராஜ நகரில் விநாயகர் சிலை ஒன்று திடீரென தோன்றியுள்ளதாகவும் இது பற்றி ஹெட்கான்ஸ்டபிள் ஒருவர் விசாரணை செய்யப்பட்டுவருவதாகவும் செய்தி வெளியாகியிருந்தது தெரிந்ததே.

---

## நினைவுதினக் கூட்டம்

யாழ்ப்பாணம். புதன்

தியாகி முதலி சின்னத்தம்பியின் 26-வது ஆண்டு நினைவுதினக்கூட்டம் இன்று மாலை யாழ்பருத்தித்துறை பலாலிவீதிச் சந்தியிலுள்ள சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கத்தில்தலைவர்திரு. எஸ். குருநாதர் தலைமையில்நடைபெறவிருக்கிறது. திரு. திரு எம், ஸி. சுப்பிரமணியம், திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை, திரு. வி. ஏ. கந்தசாமி, திரு. வி. பொன்னம்பலம் உட்படப் பலர் [illegible] செயலாளர் அறிவிக்கின்றனர்.

## சுவர் இடிந்து 10 பேர் பலி 7 பேர் குழந்தைகள்

நாக்பூர், அக். 13

நாக்பூருக்கு அருகாமையிலுள்ள கிராமமொன்றில் சுவர் இடிந்து விழுந்ததில் ஏழு குழந்தைகள் பலியாகினர். இக்குழந்தைகள் பெரும்பாலும் ஒரு வயதிலிருந்து ஏழு வயதுவரை உள்ளவர்களாகும்' வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மேலும் ஐந்து குழந்தைகளில் இருகுழந்தைகள் மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கின்றன.

இதேபோன்று பம்பாயில் ஒரு வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் அவ்வீட்டில் நித்திரை செய்துகொண்டிருந்த மூவர் மாண்டனர்.

---

## இன்று சந்திர பூசை

யாழ்ப்பாணம், புதன்

கன்னாதிட்டி ஸ்ரீ காளிகா தேவி அம்மன் கோவிலில் இன்று புதன்கிழமை சந்திர பூசை நடைபெறும். இரவு 7-30 மணிமுதல் திரு. என். கே. பத்மநாதன் கோஷ்டியினரின் நாதஸ்வரக் கச்சேரியும் இரவு 9-30 மணிமுதல் காஞ்சிபுரம் மெய்கண்டராதீன பண்ணிசைப்புலவர் திரு. பி. ஏ. எஸ். ராஜசேகரனின் இன்னிசைக் கச்சேரியும் நடைபெறும்.

---

இஸ்ரேல் ஆயுதச் செலவு

## 5 மடங்காக அதிகரிக்க முடிவு

ஜெருசலம், அக். 13

நடப்பு நிதியாண்டில் செலவினத்தின் அரைப்பகுதியை ஆயுதங்களுக்குச் செலவிட இஸ்ரேல் அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. கிட்டத்தட்ட 80 கோடி டாலர் இதற்குச் செலவிடப்படுமெனத் தெரிகிறது. இத்தொகை 1969-ம் ஆண்டு ஆயுதங்களுக்குச் செலவிடப்பட்ட தொகையைவிட ஐந்து மடங்காகும்.

மேற்காசிய நிலைமையே இவ்வளவு பணத்தை நடப்பு நிதியாண்டில் இஸ்ரேல் செலவிடவிருப்பதற்குக் காரணமாகுமென அரசியல் அவதானிகள் கருத்துத்தெரிவித்துள்ளனர்.

## பாழ்ங்கிணற்றுள் 2 அரிசி மூடைகள்

மாவிட்டபுரம், செவ்.

காங்கேசன் துறையில் உள்ள பாழ்ங்கிணறு ஒன்றில் கிடந்து காணப்பட்ட 2 அரிசிமூடைகளை சுங்கப் பகுதினர் நேற்று கிணற்றிலிருந்து வெளியேஎடுத்தனர்

காங்கேசன்துறை துறைமுகத்தில் தங்கியுள்ள கப்பலில் இருந்துஇவை கடத்தப்பட்டு கிணற்றுள் போடப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

## பொறுப்பேற்றனர்

கொழும்பு, செவ்.

கோலாலம்பூரில் நடைபெறும் றப்பர் உற்பத்தி நாடுகளின் மகாநாட்டில் கலந்துகொள்ளுமுகமாகக் கோலாலம்பூர் சென்றுள்ள அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா நாடு திரும்பும்வரை தோட்டத் தொழில், அரசியல் அமைப்புத் திட்ட அமைச்சின்உதவி மந்திரி திரு. காரியவாசத்திடம் தோட்டத்தொழில் அமைச்சும், வெளிநாட்டு, உள்நாட்டு, வர்த்தக மந்திரி திரு. ரி. பி. இலங்கரத்னவிடம் அரசியல் அமைப்புத் திட்டஅமைச்சும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## மேலதிக அரிசிக்கு மேலதிக றப்பர்

கொழும்பு, செவ்.

சீனாவிடமிருந்து மேலதிகமாக இலங்கை அரிசிவாங்குமானால் அதற்கு மாற்றாக இலங்கையும் றப்பரை மேலதிகமாக ஏற்றுமதி செய்யுமெனத் தெரிய வருகிறது. இதன்படி ஷீட் றப்பர் 80,000 தொன் தொடக்கம் 90,000 தொன்வரை ஏற்றுமதி செய்யப்படும்.

அடுத் வருடத்துக்கான உடன்படிக்கையைச் செய்து கொள்ளுவதற்கு இவ்வருட இறுதிக்குள் சீனத்தூதுவர் குழு இலங்கைவருமென எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்தவருடம் மேலதிகமாக சீனாவிடமிருந்துபெறும் அரிசிக்குரிய அந்நியச் செலாவணியைச் சமப்படுத்த இலங்கை 93,000 தொன் ஷீட் றப்பரைஉற்பத்திசெய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாண்டு இலங்கை 21,3000 தொன் அரிசிக்கு மாற்றாக 44,000 தொன் றப்பரை ஏற்றுமதி செய்தது.

## பரீட்சை முடிவு திகதி பின்போடப்பட்டது

கோட்டை, செவ்.

ஜீ. சி. ஈ உயர்தர பரீட்சைகளுக்கான விண்ணப்ப திகதியைஅக்டோடர்மாதம் 25-ந் திகதிவரை பரீட்சைப் பகுதி பின்போடப்பட்டுள்ளதாக இன்று அறிவிக்கப்பட்டது.

## பஸ்ஸில் தீ

கோட்டை, செவ்.

நேற்று முன்தினம் காலை இ. போ. ச. இரட்டைத் தட்டு பஸ் ஒன்றில் நாரம்பிட்டி சந்தியில் திடீரெனத் தீப்பற்றிக்கொண்டதில் பஸ்ஸின் முற்பகுதி முழுவதும் தீக்கிரையாகியது.

---


இப் பத்திரிகை 'ஈழநாடு லிமிடெட்' ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 68 - ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970ம் ஆண்டு அக்டோபர் மீ 14-ந் உ அச்சிட்டு வெளியிடப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org